[illegible]

[illegible]

[illegible]


T.I.R.C. - 633.

RR No 223-1-1893

Q22:41
M93

116564

SRI

# ALVARGAL CHARITRAM

IN

# TAMIL PROSE

BY

V. M. SATAKOPARAMANUJACHARIAR,
*Head Tamil Pandit, Ch. of Scot. Miss. College, Madras.*

FIRST EDITION.

Madras:

PRINTED AT THE MEMORIAL PRESS.

1898.

OFFICE OF THE REG... 13 ... 1899 ... MADRAS

ஸ்ரீ:

# ஆழ்வார்கள் சரித்திரம்.

திருவல்லிக்கேணி

வை. மு. சடகோபராமாநுஜாசாரியரால்

வசனரூபமாகச் செய்து,

சென்னை:

மிமோரியல் அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

முதற்பதிப்பு.

ஏவிளம்பி ௵

11564
M93

கடவுள்வணக்கம்.

மனமொழி மெய்களுக் கெட்டாத மாயன்
றனதடி நெஞ்சமே சார்.

அஞ்சுபடை யானை யருச்சுனற்குத் தேரூர்ந்த
அஞ்சுபடை யானை யடை.

ஸ்ரீ
கடவுள்துணை.

# முகவுரை

வைஷ்ணவசமயத்திற்சிறந்த மெய்யடியார்களென்று கொண்டாடப்படுகிற ஆழ்வார்கள் பன்னிருவர். புறவிருளொழிக்கிற ஆதித்தனினும் பெருமைபெற அகவிருளொழித்த இவர்களுடைய சரிதவிவரங்கள் அநந்தம். அவை, பிரமாண்டம் பாத்மம் மார்க்கண்டேயம் என்ற புராணங்களிலும், பார்க்கவம் வ்ருத்தபாத்மம் ப்ருஹத்பாத்மம் என்ற உபபுராணங்களிலும் எதிர்காலவரலாறாக வியாசர் கூறுமிடத்துக் கூறப்பட்டுள்ளனவாகப் பிரசித்தமாயிருப்பதுமாத்திரமன்றி, திவ்யஸூரிசரிதம் ப்ரபந்நாம்ருதம் என்ற வடநூல்களிலும், குருபரம்பராப்பிரபாவங்களென்கிற மணிப்பிரவாளக்கிரந்தங்களிலும், பிரபந்தசாரம் உபதேசரத்தினமாலை என்னுந் தமிழ்ப்பிரபந்தங்களிலுஞ் சுருக்கமாகவும் பெருக்கமாகவுங் காணப்படுகின்றன. இவற்றிற்கூறப்படாமல், பிறநூல்களாலுங் கர்ணபரம்பரையாலுமே அறியத்தக்க ஐதிகங்களும் அநேகம் உண்டு.

இவையனைத்தினுமுள்ள ஆழ்வார்கள்சரித்திரங்களையெல்லாம் ஒருங்கேசேர்த்து விரிவாகவெழுதி ஒருபெருநூலாக வெளியிடத்தொடங்கின் மிகப்பெருகுமாதலால், அங்ஙனஞ்செய்யாது தமிழ்பயில்வோர்க்கு எளிதிற் பயன்படும்பொருட்டு, இச்சிறுநூல், என்சிற்றறிவிற்கேற்பச் சுருக்கமாக எழுதி வெளியிடப்பட்டது.

இராமாநுசநூற்றந்தாதியில் ஆழ்வார்களோடு சம்பந்தப்படுத்தி ஸ்ரீபாஷ்யகாரரைத் துதித்துள்ள பாடல்களும், அவ்வவ்வாழ்வார்விஷயமாகப் பின்புள்ள பெரியோர் இயற்றிய தனிப்பாசுரங்களும், இவ்வசனநூலில், ஒவ்வொரு ஆழ்வார்சரித்திரத்தின் முதலிலும், முறையே, வழிபடுகடவுள்வணக்கமாகவும், ஏற்புடைக்கடவுள்வணக்கமாகவும் எடுத்தாளப்பட்டன; "முன்னோர்மொழிபொருளேயன்றி யவர்மொழியும், பொன்னேபோற் போற்றுவம்" என்பது இலக்கணமாதலால்.

படிப்பவர்களுக்குப் பொருளுணர்வோடு பாஷாஞானமும் அபிவிருத்தியாவதை உத்தேசித்து, இதில், மற்றுஞ்சில மேற்கோள்களும், திரிசொற்களோடு வடசொற்களும் ஆங்காங்கு அமைக்கப்பட்டன.

இந்நூலில் திருமழிசையாழ்வார்சரித்திரத்தில் சிவபிரானைச் சிறிது தாழ்வுபடக்கூறியிருத்தல், முதனூல்களிலுள்ளதனால், வழிநூலாகிய இதிலும் விலக்கப்படவில்லை.

இதில் குற்றங்குறைகள் காணப்படுமாயின் அவற்றை அறிவுடையோர் தமதியற்கைக்குணத்தாற் பொறுத்தருளுமாறு பிரார்த்திக்கிறேன்.

இப்புத்தகத்துக்கு, எனது நண்பராகிய சே. கிருஷ்ணமாசாரியர் உடனிருந்து உதவிசெய்தனர்.

திருவல்லிக்கேணி,
ஏவிளம்பி௵ } வை - மு - க.

# விஷயசூசிகை.


| | | பக்கம் |
|---|---|---|
| | அவதாரிகை ... ... ... ... | ௧ |
| க. | பொய்கையாழ்வார் ... ... ... | ௫ |
| உ. | பூதத்தாழ்வார் ... ... ... | ௬ |
| ௩. | பேயாழ்வார் ... ... ... ... | ௭ |
| | இந்தமுதலாழ்வார்கள் மூவர் ... ... | ௮ |
| ௪. | திருமழிசையாழ்வார் ... ... ... | ௧௧ |
| ௫ | நம்மாழ்வார் ... ... ... ... | ௨௪ |
| ௬. | குலசேகராழ்வார் ... ... ... | ௩௦ |
| ௭. | பெரியாழ்வார் ... ... ... ... | ௩௬ |
| ௮. | ஆண்டாள் ... ... ... ... | ௪௫ |
| ௯. | தொண்டரடிப்பொடியாழ்வார் ... ... | ௫௦ |
| ௧௦. | திருப்பாணாழ்வார் ... ... ... | ௫௭ |
| ௧௧. | திருமங்கையாழ்வார் ... ... ... | ௬௨ |
| ௧௨. | மதுரகவியாழ்வார் ... ... ... | ௭௩ |


ஸ்ரீ

# ஆழ்வார்கள் சரித்திரம்.

## அவதாரிகை.

* "பொய்கைபூதன்பேயார்பொன்மழிசைக்கோன்மாறன்
செய்யமதுரகவிசேரர்பிரான் — வையகமெண்
பட்டர்பிரான்கோதைதொண்டர்பாதப்பொடிபாணன்
கட்டவிழ்தார்வாட்கலியன்காப்பு."

எல்லாவுலகங்களிலும் மேம்பட்டு மேலிடத்திலுள்ளதாய், ஒப்புயர்வின்றி விளங்கும் இயற்கைப்பேரொளியுடையதாய், கமலக்கண்ணனது கருணைப்பெருக்கின வடிவமான விரசையென்னும் விமலநதியை எல்லையாகப்பெற்றதாய், † "பிறவாவேலையிலாவிலேபோர் இரியா, குறவாநெடுகாருணம்வேறுபடா, வுறவால்விளர்பூதமெலாமழியும், மறவாநெறி" என்றபடி காலமுகூர்த்தம் முதலிய காலபரிணாமங்களும் நிலைவேறுபாடும் சுருக்கமும் பெருக்கமும் குணவேற்றுமையும் உற்பத்திவிநாசங்களும் இன்றி என்றும் ஒருபடிப்படவிருப்பதாய், அந்தமில்பேரின்பத்தை யனுபவிக்குமிடமாய், மனமொழிமெய்களுக்கு எட்டாத மகிமையுடையது, பரமபதமென்கிற திவ்யலோகம்.

அங்கு ஸ்ரீவைகுண்டநகரிலே, செம்பொன்செய்கோயிலிலே, திருமாமணிமண்டபத்திலே, ‡ "சென்றால்குடையாமிருந்தால்சிங்காசனமாம், நின்றால்மரவடியாம் நீள்கடலுள்—என்றும், புணையாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும், அணையாம் திருமாற்கரவு" என்றபடி சகலவிதகைங்கரியங்களைச் செய்கிற ஆதிசேஷனது சொரூபமான சிம்மாசனத்திலே, ஸ்ரீ பூமி நீளை என்னும் தேவிமார்களோடும் கூடி வீற்றிருந்து, § "கோலார்ந்தநெடுஞ்சார்ங்கம் கூனற்சங்கம்கொலையாழி கொடுந்தண்டு கொற்றவொள்வாள், காலார்ந்தகதிக்கருடனென்னும்வென்றிக்கடும்பறவை யிவையனைத்தும் புறஞ்சூழ்காப்ப," || "சேனையர்கோன்பணிகேட்ப," செங்கோல்செலுத்தி, ¶ "ஆராதமனக்காதல் தொண்டர்தங்கள்குழாங்குழுமித் திருப்புகழ்கள்பலவும்பாடி, ஆராதமனக்களிப்போடழுதகண்ணீர்மழைசோர நினைந்துருகியேத்தி நாளும்" நித்தியமுக்தர்களுக்கு நிரதிசய ஆனந்தத்தை அனுபவிப்பித்தருளுகிற சகல

* நூற்றெட்டுத்திருப்பதியந்தாதி - காப்பு - க.
† கம்பராமாயணம்-ஆரணியகாண்டம்-சரபங்கர்பிறப்புநீங்குபடலம்-௨௦
‡ [illegible] - முதல்திருவந்தாதி - ௫௩.
§ பெருமாள்திருமொழி - முதல்திருப்பதிகம் - ௪. [கம்-க.
|| திருவரங்கக்கலம்பகம் - க, ¶ பெருமாள்திருமொழி-முதல்திருப்பதி

கல்யாணகுணகணபரிபூர்ணனான சர்வேசுவரன், திரிபாத்விபூதியாகிய அப்பரமபதத்தில் உள்ளார் எப்பொழுதும் பரமசுகத்தை யநுபவித்துவருதல்போல அவ்வுலகத்துக்குக் கீழ்ப்பட்டுள்ள லீலாவிபூதியாகிய சகலலோகங்களிலு முள்ள பலவுயிர்களும் தம் தம் முயற்சியால் அப்பெரும்பதவியை யடைந்து இன்புற்று வாழலாம்படியிருக்க, அங்ஙனஞ்செய்யாமல், தன்னைத் தரிசித்தல் தொழுதல் சேர்தல் தியானித்தல் துதித்தல் முதலிய பணிவிடைகளைப் புரிந்து ஈடேறும்பொருட்டுத் தன்னாற்கொடுக்கருளப்பட்ட கண் கை கால் மனம் வாய் முதலிய அவயவங்களை அவ்வத்தொழிலில் உபயோகித்து உய்வுபெறாமல், சமித்து வெட்டிவருதற்குக் கொடுத்த வாளைக்கொண்டு அதுசெய்யாது பசுவின் வாலைத் தறிப்பார்போலவும்; கண்ணெழுதக்கொடுத்த கருவியைக்கொண்டு அதனாற்குத்திக் கண்ணைக் கெடுத்துக்கொள்வார்போலவும், ஆறுகடத்தற்கென்றுகொடுத்த புணையைக்கொண்டு அதுபுரியாது அதனைப்போக்கியாழ்கடலிடைப்புகுகிறவர்போலவும், அவ்வுறுப்புக்களைச் சப்தாதி விஷயாந்தரங்களிலே செலவிட்டு, *மாறனேர்வரிவென்றிலைக்கு ஆட்செய்து, †மாறிமாறிப்பலபிறப்பும் பிறந்து இறந்து, கரையில்லாதகருமப்பெருங்கடலிலுள் அழுந்தி வருந்தி அலைவதை, ‡நோக்கி, அவ்வான்மாக்களையும் அழிவில்வீட்டை யடைவிக்கவேண்டுமென்று இயல்பாகஎழுந்த பரமகிருபையாலே, அவ்வுயிர்கள் நல்வழிதீவழிகளை நன்றாகப்பகுத்துணர்ந்து நடக்குமாற்றை அறிவித்தற்பொருட்டு, தன்கட்டளைரூபமான வேதங்களை வெளியிட்டருளி, அரியபெரிய அவ்வேதங்களின் ஆழ்ந்தமறைபொருளைச் சில்வாழ்நாட் பல்பிணிச் சிற்றறிவினராகிய சேதனர் ஐயந்திரிபறத் தெள்ளிதில்தெரிந்துகொள்ளுதற்கு உபயோகமாம்படி அவற்றிற்கு அங்கமான அநேகசாஸ்திரங்களை முனிவர் முதலானோரைக்கொண்டு பிரகாசிப்பித்தான்.

பேரிருளிலே திரிவார்க்குப் பொருள்விளக்கம்பிறக்குமாறு கைவிளக்குக்கொடுத்தாற்போல, அஜ்ஞானாந்தகாரத்தில் அகப்பட்டவர்க்கு அர்த்தஜ்ஞானப்பிரகாச முண்டாகுமாறு இப்படிச் சாஸ்திரதீபத்தைக் காட்டிக்கொடுக்கவும், விழியிலார்க்கு விளக்குப் பயன்படாததுபோல, பகவத்பக்தியாகிற சித்தாஞ்சனத்தால் ‡நெஞ்சென்னும் உட்கண்ணின் குருடு தீராத உலகத்தார்பல

*பெருமாள்திருமொழி-மூன்றாந்திருப்பதிகம்-௧.
†திருவாய்மொழி-பதினொராந்திருப்பதிகம்-௮.
‡இயற்பா-பெரியதிருவந்தாதி-௨௭.



க்கு அந்தப்பிரமாணப்பிரதீபமும் முழுப்பயன்படாதாயிற்று. அவர்கள் சாஸ்திரங்களின்சித்தாந்தத்தைத் தீரத்தெளிய ஆய்ந்து ஓய்ந்து உணராமல் துனிப்புல்மேய்ச்சலாகமேல்நோக்காய்ப்பார்த்து அறிந்து நிலையில்லாதவற்றை நிலையுடையனவென்றும் நிலையினவற்றை நிலையிலவென்றும் விபரீதமாகத்துணிந்து தர்மார்த்தகாமங்களில் அறியாமுகரும் மோக்ஷத்தில் அறிவிமுகருமாய் அழிந்துபோவதை ஆலோசித்து, காருணிகனான தாமோதரன், தன் ஆணைசெல்லாத இடங்களில் அரசன் தானே நேரிற்சென்று தண்டம் நடத்துதல்போல, தானே ராமகிருஷ்ணாதிரூபத்தால் *ஆதியஞ்சோதியுருவை யங்குவைத்திங்குப் பிறந்து பரத்வத்தை நேர்ந்து தெரியாதபடி விட்டுச் சௌலப்யத்தையே தலைமைக்குணமாகக்கொண்டு உலகத்தோடொத்து வாழ்ந்து துஷ்டநிக்கிரகசிஷ்டபரிபாலனஞ்செய்து அறத்தை நிலைநிறுத்தித் தன் வடிவழகாலும் உபதேசமுகத்தாலும் அநுஷ்டானமூலமாகவும் பிரஜைகளைத் தன்வசப்படுத்தத் தொடங்கியவளவிலும், பலர், அநாதிகர்மவாசனையாலே சீர்திருந்தாமல் அத்திருவவதாரமூர்த்திகளிடத்தும் மனுஷ்யபுத்தியையே பண்ணித் தம்மைப்போலவே அவர்களைப்பாவித்து எதிரம்புகோர்த்துப் போருக்குநின்றும் †கேட்பார்செவிசுடு கீழ்மைவசைகளையே வைதும் விசுவரூபத்தையுட்பட இந்திரசாலமென்று இகழ்ந்தும் அதமகதிகளை அடையலாயினர்.

அதுகண்டு திருமால் திருவுள்ளமிரங்கி 'இனி இவர்களை வசீகரித்தற்கு வழி யாதோ?' என்று திருமகளோடு ஆலோசனை செய்து, 'மிருகங்காட்டி மிருகம்பிடிப்பார்போல, இவர்களினத்தவரென்னலாம்படியான சேதநரைக்கொண்டு இவர்களைவலைப்படுத்துவதே உத்தமமாகிய உபாயம்' என நிச்சயித்து, ஸ்ரீபூமிநீளாதேவிகளையும் ஸ்ரீபஞ்சாயுதங்களையும் ஸ்ரீவத்ஸகௌஸ்துபவநமாலாதி சின்னங்களையும் அநந்தகருடவிஷ்வக்சேநாதியரையும் பார்த்து 'நீங்கள் எம்படி பூலோகத்தில் பலசாதிகளிலும் பிறந்து பிரபஞ்சத்தவரைப் பிறவிப்பெருங்கடலினின்று கரையேற்றிவிடுங்கள்' என்று கட்டளையிட்டு அனுப்ப, அவர்கள் அப்பணியைச் சிரமேற்கொண்டு ஆழ்வார்களாக அவதரித்தார்கள்.

இவர்கள், பகவானுடைய கல்யாணகுணங்களாகிய அமுதவெள்ளத்திலே முழுகி மிகவும் ஈடுபட்டு நன்றாக ஆழ்ந்திடுபவராதலால், இவர்களுக்கு 'ஆழ்வார்' என்ற திருநாமம்.

* திருவாய்மொழி-இருபத்தைந்தாந்திருப்பதிகம்-௫.
† ,, அறுபத்தைந்தாந்திருப்பதிகம்-௧.

இவர்கள், இருடிகள்போலத் தாமாகமிகமுயன்று தத்துவ ஞானத்தைப் பெறுதலின்றி, எம்பெருமான் தானேவந்து தன்னைக்காட்டிக்கொடுக்கக் கண்டு, ஞானபக்திவைராக்கியங்களை எளிதிற்பெற்று, சிலர்க்குச்சிலர்க்காக மறைக்கப்படுகிற வேதம்போலவன்றி யாவர்க்கும் ஒருங்கே உதவும்படி சகலவேதவேதாங்கசாரார்த்தங்களைத் தமிழ்த்திவ்வியப்பிரபந்தங்களாக அருளிச்செய்து தம்முடைய அநுபவத்தைப் பிறர்க்குப்போதித்து உலகத்தை வாழ்வித்தருளுதலால், கூறுதற்கரிய வீறுபெற்றவர்.

பொய்கையாழ்வார், பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார், குலசேகராழ்வார், பெரியாழ்வார், தொண்டரடிப்பொடியாழ்வார், திருப்பாணாழ்வார், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் என ஆழ்வார்கள் பதின்மர்.

இவர்களது திருவவதாரக்கிரமம்

* "பொய்கையார்பூதத்தார்பேயார்புகழ்மழிசை
யையனருண்மாறன்சேரலர்கோன்—துய்யபட்ட
நாதனன்பர்தாட்டூளிநற்பாணனன்கலிய
னிதிவர்தோற்றத்தடைவாமிங்கு"

என்றவாறு முறைமைபெற்றிருக்கும்.

நம்மாழ்வாரது சிஷ்யரான மதுரகவியையும், பெரியாழ்வாரது பெண்பிள்ளையான ஆண்டாளையுங் கூட்டி ஆழ்வார்கள் பன்னிருவரென்பதும், சம்பிரதாயம்.

இவர்களில் நம்மாழ்வாருக்கு மற்றையாழ்வார்கள் அவயவமாகிறவரென்பதும் நம்மாழ்வார் அவர்களுக்கெல்லாம் அவயவியாய்ப் பிரதானராவரென்பதும் நூல்களிற்கூறியிருந்தாலும், இங்கே அவதாரமுறைப்படியே இவர்கள்சரித்திரம் காட்டப்படுகிறது. மதுரகவியாழ்வார் நம்மாழ்வாருக்கு முன்பு பிறந்தவரானாலும், அவர் நம்மாழ்வாரையாசிரயித்து நடந்தவராதலால், அவரது வரலாறு இறுதியில் வரும். பெருமாளுக்குத் தேவியாகிய ஆண்டாள், எல்லாவாழ்வார்களுக்கும் மேலாகக் கொண்டாடத்தக்க சிறப்புற்றவளாயினும், பெரியாழ்வார்திருமகளாதலால், அவளது சரித்திரம் அவ்வாழ்வார்சரித்திரத்தை அடுத்துநிற்கும்.

* உபதேசரத்தினமாலை- ௪.

# க. பொய்கையாழ்வார்.

*"வருத்தும்புறவிருண்மாற்றவெம்பொய்கைப்பிரான்மறையின்
குருத்தின்பொருளையுஞ்செந்தமிழ்தன்னையுங்கூட்டியொன்றத்
திரித்தன்றெரித்ததிருவிளக்கைத்தன்திருவுள்ளத்தே
யிருத்தும்பரமனிராமாநுசனெம்மிறையவனே."

† "கைதைசேர்பூம்பொழில்சூழ்கச்சிநகர்வந்துதித்த
பொய்கைப்பிரான்கவிஞர்போரேறு—வையத்
தடியவர்கள்வாழவருந்தமிழந்தாதி
படிவிளங்கச்செய்தான்பரிந்து."

நிலவளம் நீர்வளம் முதலிய பலவளங்களும் மலிந்து இந்நிலவுலகத்துக்குத் திலகம்போன்றுள்ள தொண்டைமண்டலத்திலே, புண்ணியக்ஷேத்திரங்கள் பலவற்றுள்ளும் மிகச்சிறந்த சத்தியவிரதக்ஷேத்திரத்திலே, ‡ "காசிமுதலாகிய நன்னகரியெல்லாங் கார்மேனியருளாளர் கச்சிக்கொவ்வா" என்றபடி முத்திதருநகரமேழனுள் முக்கியமானதாய் வேகவதியென்னும் புண்ணியநதி பாயப்பெற்றுக் கண்டவர்கண்கவருங் கச்சித்திருப்பதியிலே, திருவெஃகா என்னும் திவ்வியதலத்தின் வடபுறத்தில், சான்றோருள்ளம்போல ஆழ்ந்து தெளிந்துள்ள தொரு பொற்றாமரைப் பொய்கை உண்டு. அதில் பூத்ததொரு கமலமலரிலே, ஐப்பசிமாதத்தில் சிரவணநக்ஷத்திரமான திருவோணத்திலே§, தேவிற்சிறந்த திருமாலின் திவ்வியபஞ்சாயுதங்களுள் பாஞ்சசன்னியமென்னுந் திருச்சங்கின் அம்சமாய், ஒருவர், அன்புவெள்ளத்தினகத்திருந்து தியானிக்கின்ற அடியார்களது உள்ளப்பதுமப்போதில் அவர்நினைந்தவடிவோடு எம்பெருமான் விரைந்து தோன்றுதல் போலவும், பிரளயப்பெருங்கடலில் மலர்ந்த அப்பெருமானது உந்தியந்தாமரையில் நான்முகக்கடவுள் உற்பவித்ததுபோலவும், சரவணப்பொய்கையில் பதுமப்பாயலில் சண்முககுமரன் உதித்ததுபோலவும், திருவவதரித்தார்.

|| அத்தத்தின்பத்தாநாள் தோன்றிய இவருக்கு, பொய்கையிலவதரித்தகாரணமாக 'பொய்கையாழ்வார்' என்று திருநாமமாயிற்று.

* இராமாநுசநூற்றந்தாதி - ௮.
† தனியன்; முதலியாண்டான் அருளிச்செய்தது.
‡ தேசிகப்பிரபந்தம்- அமிருதாஸ்வாதினி - ௨௪.
§ 'அவ்வாயுகத்தில் எட்டிலட்சத்து அறுபத்தோராயிரத்துத் தொள்ளாயிரத்து எண்பத்திரண்டாவதான சித்தார்த்திவருடத்தில் சுக்கிலபக்ஷத்து அஷ்டமிகூடின மங்களவாரத்தில்' என்று விவரம் நூல்களிற்கூறியுள்ளது.
|| பெரியாழ்வார்திருமொழி-முதற்றிருப்பதிகம்- ௬.

* "இறைவனைக் காணுமிதயத்திருள்கெட ஞானமென்னும்
நிறைவிளக்கேற்றியபூதத்திருவடி தாள்கணெஞ்சத்
துறையவைத்தாளுமிராமாநுசன்புகழோது நல்லோர்
மறையினைக்காத்திந்தமண்ணகத்தேமன்னவைப்பவரே."

† " என்பிறவிதீரவிறைஞ்சினேனின்னமுதா
அன்பேதகளியளித்தானை — நன்புகழ்சேர்
சீதத்தார்முத்துக்கள்சேருங்கடன்மல்லைப்
பூதத்தார்பொன்னங்கழல்."

‡ "தெண்ணீர்வயற் றொண்டை நன்னாடு சான்றோருடைத்து" என்று ஔவையார் பாடியபடி கல்விகேள்விகளிலொழுக்கங்களாலான்றவர் பலரை யுடையதும், ○ "ஆறோடீரெட்டுத் தொண்டை" என்றவாறு நூற்றெட்டுத் திருமால்திருப்பதிகளுள் இருபத்திரண்டுள்ளதுமான இந்தத்தொண்டைவளநாட்டிலே, கீழ்கடற்கரையிலுள்ள திருக்கடன்மல்லை யென்கிற மாமல்லபுரத்திலே, குருக்கத்திப்பந்தரிலே, ஒருகுருக்கத்திமலரிலே, கௌமோதகி யென்னுங் கதாயுதத்தின் அம்சமாய், ஐப்பசிமாதத்தில் அவிட்ட நக்ஷத்திரத்திலே §, ஒருவர் திருவவதாரஞ் செய்தார். || "கடல்வண்ணன்பூதம்," ¶ "மாதிருமாலவன்றன் பூதம்" என்றவாறு எம்பெருமானை அநுபவித்தலிலே ஸத்தைபெற்ற தன்மையை உடையவராதலால், இவருக்கு § 'பூதத்தாழ்வார்' என்று திருநாமம்.

---

* இராமாநுசநூற்றந்தாதி - ௯.

† தனியன்; திருக்குருகைப்பிரான்பிள்ளான் அருளிச்செய்தது.

‡ "வேழமுடைத்துமலைநாடுமேதக்க, சோழவளநாடுசோறுடைத்து— பூழியர்கோன், தென்னாடு முத்துடைத்து தெண்ணீர்வயற்றொண்டை, நன்னாடுசான்றோருடைத்து."—ஔவையார் தனிப்பாடல்.

○ "ஈரிருபதாஞ்சோழ மீரொன்பதாம்பாண்டி, ஓர்பதின்மூன்று மலைநாடோரிரண்டாஞ்—சீர்நடுநா டாறோடீரெட்டுத்தொண்டையவ்வடநா டாறிரண்டு, கூறுதிருநாடொன்றாக்கொள்."—நூற்றெட்டுத்திருப்பதியந்தாதி-பாயிரம் - ௬.

§ 'கீழ்ச்சொன்ன யுக வருஷ மாச பக்ஷங்களில் நவமிதிதியோடு கூடிய புதனத்தில்' என்று விவரம் கூறப்பட்டுள்ளது.

|| திருவாய்மொழி - ஐந்தாம்பத்து இரண்டாந்திருப்பதிகம் - க.

¶ ,, ,, ௮.

§ "பூ ஸத்தாயாம்" என்றபடி ஸத்தை யென்னும் பொருள்கொண்ட பூ என்னும் வடமொழித்தாதுவி [வினையடியி] னின்று பிறந்த பெயராகையால், பூதன் என்பதற்கு-ஸத்தை [உள்ளவனாயிருக்கை] பெற்றவனென்று பொருள் உரைக்கப்படும்.



மன்னியபேரிருண்மாண்டபின்கோவலுண்மாமலரா
டன்னொடுமாயனைக்கண்டமைகாட்டுந்தமிழ்த்தலைவன்
பொன்னடிபோற்றுமிராமாநுசற்கன்புபூண்டவர்தாள்
சென்னியிற்சூடுந்திருவுடையாரென்றுஞ்சீரியரே."

† "சீராருமாடத்திருக்கோவலூரதனுட்
காரார்கருமுகிலைக்காணப்புக்—கோராத்
திருக்கண்டேனென்றுரைத்தபிரான்கழலே
யுரைக்கண்டாய்நெஞ்சேயுகந்து."

தொண்டைமண்டலமென்று பிரசித்தமான இத்தொண்டை நன்னாட்டிலே, பிருந்தாரணியக்ஷேத்திரத்திலே, ‡ "குரவமேகமழுங் குளிர்பொழிலூடு குயிலொடு மயில்கள் நின்றால இரவியின்கதிர்கணுழைதல்செய்தறியாத் திருவல்லிக்கேணி"யென்னுந் திவ்ய தேசத்துக்குத் தென்றிசையிலுள்ள திருமயிலைநகரில், ஆதி கேசவப்பெருமான்கிணற்றிலே யுண்டானதொரு செவ்வல்லிப்பூவிலே, நந்தகமென்கிற வாட்படையின் அம்சமாய், ஒருவர், ஐப்பசிமாதத்தில் சதயதாரகையிலே§, அவதரித்தார்.

§ "மொய்த்துக்கண்பனிசோரமெய்கள்சிலிர்ப்பவேங்கியிளைத்து நின்று, எய்த்துக்கும்பிட்டுநட்டமிட்டெழுந்தாடிப்பாடியிறைஞ்சியென், அத்தனச்சனரங்கனுக்கடியார்களாகியவனுக்கே, பித்தராமவர்பித்தரல்லர்கண்மற்றையார்முற்றும்பித்தரே",

¶ " பேயரேயெனக்கியாவரும்யானுமோர்
பேயனேயெவர்க்குமிதுபேசியென்
னாயனேயரங்காவென்றழைக்கின்றேன்
பேயனாயொழிந்தேனெம்பிரானுக்கே"

என்றபடி, இவர், பகவத்பக்தியால் பரவசப்பட்டு நெஞ்சழிதல் கண்சுழலுதல் அழுதல் சிரித்தல் தொழுதல் மகிழ்தல் ஆடுதல் பாடுதல் அலறுதல் முதலிய தொழில்களையே அனவரதஞ் செய்துகொண்டு காண்பவர்பேய்பிடித்தவரென்னும்படியிருந்ததனால், 'பேயாழ்வார்' என்று பெயர்பெற்றனர். பரமபக்தி தலையெடுத்தலாலுண்டாகிற பகவதநுபவாதிசயம் மற்றையாவரினும் இவருக்கு மகத்தாயிருந்ததனாலும், இவர் தாம் எம்பிரானுக்கு ஆட்பட்டதுமாத்திரமேயன்றித் திருமழிசையாழ்வாரைத் திருத்திப் பணிகொண்ட மகானாதலாலும், இவருக்கு 'மஹதாஹ்வயர்' என்னும் ஒருதிருநாமம் உண்டு.

---

* இராமாநுசநூற்றந்தாதி - ௧௦.

† தனியன்; குருகைக்காவலப்பன் அருளிச்செய்தது.

‡ பெரியதிருமொழி - பதின்மூன்றாந்திருப்பதிகம் - ௭.

§ 'கீழ்க்குறித்த யுகவருஷமாசபக்ஷங்களில் தசமிதினங்கூடினவியாழக்கிழமையில்' என்று விவரம் குறிக்கப்பட்டுள்ளது.

§ பெருமாள்திருமொழி - இரண்டாந்திருப்பதிகம் - ௯.

¶ ,, மூன்றாந்திருப்பதிகம் - ௮.

அயோநிஜரும் ஸ்ரீராமபரதலக்ஷ்மணர்போல அடுத்தநாள்களில் அவதரித்தவர்களும் ஆகிய இவர்கள்மூவர்க்கும், ஸ்ரீவைகுண்டநாதனுடைய அநுமதிப்படியே, பரமபதத்திலுள்ள நித்யமுக்தர்களிருவர்க்குந் தலைவராதலால் சேனைமுதலியார் என்று சிறப்பித்துச்சொல்லப்படுகிற விஷ்வக்ஸேநர்; பெருங்கருணையோடு அங்குநின்று இங்குவந்து, பஞ்சஸம்ஸ்காரங்களை யிட்டருளி, பெரியதிருமந்திரம் முதலாக எல்லாமந்திரவிசேஷங்களையும், அவற்றின் விசேஷார்த்தங்களனைத்தையுங் குறைவற உபதேசித்தருளினார்; அதனால் இவர்கள் ராஜஸதாமஸகுணங்களின்தொடர்பில்லாமல் சுத்தஸாத்விககுணமே தலையெடுத்து அந்தக்குணமயனான புண்டரீகாக்ஷனுக்கு அடிமைசெய்தலையே பணியாகக் கொண்டு ஞானபக்திவைராக்கியங்கள் மிகுந்து அறவொழுக்கம் பூண்டு அன்னபானாதிகளையொழித்துப் பகவத்தியானமே தாரகமாக * உண்டியேயுடையேயுகந்தோடும் இம்மண்டலத்தாரோடு கலவாமல் ஒருநாளிருந்தவிடத்தில் மற்றொருநாளிராதபடி க்ராமைகராத்திரமாய்த் தம்மில்ஒருவரையொருவர் அறியாமல் தனித்தனியே சஞ்சரித்துக்கொண்டிருக்கிற காலத்தில், சர்வேசுவரன் இம்மூவரையும் ஓரிடத்திலேசேர்த்து ஆட்கொண்டு இவர்களால் உலகத்தை உய்விக்கவேண்டுமென்று நினைத்தருளினான்.

சத்தியசங்கல்பனான அந்த முகுந்தனது திருவுள்ளக்கொள்கையின்படி. ஒருநாள் சூரியாஸ்தமனமானபின் பொய்கையாழ்வார் நடுநாட்டுத் திருப்பதிகளில் பெண்ணையாற்றுக்குத்தென்கரையிலுள்ள திருக்கோவலூரை அடைந்து அங்கு மிருகண்டுமுனிவரது திருமாளிகையிற் சென்று அதனது இடைகழியில் சயனித்துக் கொண்டிருந்தார். பின்னர்ப் பூதத்தாழ்வாரும் அவ்விடத்திலே சென்றுசேர, இருவரும் ஒருவரையொருவர் கண்டபொழுதே முறைப்படி வந்தனைவழிபாடுகள்செய்தவுடனே, பொய்கையாழ்வார் 'இவ்விடம் ஒருவர் படுக்கலாம், இருவர் இருக்கலாம்' என்று விண்ணப்பஞ் செய்தபின், அவ்வாறே அவ்விருவரும் அங்கு இருந்தனர். அதன்பிறகு பேயாழ்வாரும் அவ்விடத்தையே அடைந்திட, ஒருவர்க்கொருவர் பிரணாமம் முதலியன நிகழ்ந்தபின், முன்னையிருவரும் 'இவ்விடம் ஒருவர் படுக்கலாம், இருவர்இருக்கலாம், மூவர்நிற்கலாம்' என்றுகூற, இவரும்

* பெருமாள்திருமொழி - மூன்றாந்திருப்பதிகம் - ௫.



அதற்குடன்படவும், இம்மூவரும் அவ்விடத்திலே நின்றுகொண்டு, பரஸ்பரம் பகவத்குணங்களைச் சொல்லுதலுங் கேட்டலுஞ் செய்து மகிழ்ந்திருந்தனர். அப்பொழுது, திரிவிக்கிரமமூர்த்தி அவர்களை அநுக்கிரகிக்கும்பொருட்டுப் பேரிருளையும் பெருமழையையும் உண்டாக்கிப் பெரியவடிவத்தோடு அவர்களிடத்திற் சென்று நின்று பொறுக்கவொண்ணாத அதிக நெருக்கத்தைச் செய்தருளினான். இவர்கள் 'முன்னில்லாத நெருக்கம் இப்பொழுது உண்டாயது என்னை? பிறரெவரேனும் புகுந்தவருண்டோ?' என்று சங்கிக்கையில், பொய்கையாழ்வார் பூமியாகிய தகழியில் கடல்நீரையே நெய்யாகக்கொண்டு சூரியனை விளக்காக ஏற்ற, பூதத்தாழ்வார் அன்பாகிய தகழியில் ஆர்வத்தை நெய்யாகவுஞ் சிந்தையைத் திரியாகவுங் கொண்டு ஞானதீபத்தை ஏற்ற, இவ்விரண்டொளியாலும் இருளற்றதனால், பேயாழ்வார் பெருமானைத் தாம் கண்டமை கூறியவளவிலே, *மூவரும் ஆழியஞ்செல்வனுடைய சொரூபத்தை அறிந்து அநுபவித்து ஆனந்தமடைந்து, அப்பெருங்களிப்பு உள்ளடங்காமையால் அதனைப் பிரபந்தமுகமாக வெளியிட்டு உலகத்தாரை வாழ்விக்கக் கருதினார்கள்.*

அப்பொழுது, பொய்கையாழ்வார்

"வையந்தகளியாவார்கடலேநெய்யாக
வெய்யகதிரோன்விளக்காக—செய்ய
சுடராழியானடிக்கேசூட்டினேன்சொன்மாலை
யிடராழிநீங்குகவேயென்று"

என்று தொடங்கி முதல்திருவந்தாதியைப் பாடியருளினார்.

பூதத்தாழ்வார்

"அன்பேதகளியாஆர்வமேநெய்யாக
வின்புருகுசிந்தையிடுதிரியா—நன்புருகி
ஞானச்சுடர்விளக்கேற்றினேன்நாரணற்கு
ஞானத்தமிழ்புரிந்தநான்"

என்று தொடங்கி இரண்டாந்திருவந்தாதியை அருளிச்செய்தார்.

* "பாவருந்தமிழாற்பேர்பெறுபனுவற்பாவலர்பாதிநாளிரவின், மூவரு நெருக்கிமொழிவிளக்கேற்றிமுகுந்தனைத்தொழுதநன்னாடு" — வில்லிபுத்தூரார்பாரதச் சிறப்புப்பாயிரம் - ௧.

பேயாழ்வார்

"திருக்கண்டேன்பொன்மேனிகண்டேன்றிகழு
மருக்கனணிநிறமுங்கண்டேன்—செருக்கிளரும்
பொன்னாழிகண்டேன்புரிசங்கங்கைக்கண்டே
னென்னாழிவண்ணன்பாலின்று"

என்று தொடங்கி மூன்றாந் திருவந்தாதியைத் திருவாய்மலர்ந் தருளினார்.

பின்பு இவ்யோகிகள் மூவரும் தேகளீசனைத் திருவடிதொழுது விடைபெற்றுப் பலகாலம் திவ்யதேசயாத்திரை செய்து கொண்டு சென்று, திருமழிசையாழ்வாரைக் கண்டு 'பேசி' அவரோடு கூடிக் களித்து யோகுசெய்துகொண்டு, இங்ஙனம் மண்ணுலகத்தில் மூவாயிரத்துமுந்நூற்று இருபத்தைந்துவருஷம் யோகபலத்தால் வாழ்ந்திருந்து முடிவில் திருக்கோவலூரையடைந்து முடிவில் பேரின்பத்தழிவில் வீட்டை அடைந்தனர்.

இவர்கள்மூவரும், ஆழ்வார்களெல்லார்க்கும் முன்னே திருவவதரித்ததனாலும், பின்பு உண்டாகும் பிரபந்தங்களுக்கெல்லாம் இலக்கணமாம்படி ஆதியில் திருவந்தாதித்திவ்யப்பிரபந்தங்களைத் திருவாய்மலர்ந்தருளியதனாலும், 'முதலாழ்வார்கள்' என்று பெயர்பெற்றனர்.

* "மற்றுள்ளவாழ்வார்களுக்குமுன்னேவந்துதித்து
நற்றமிழானூல்செய்துநாட்டையுய்த்த—பெற்றிமையோ
ரென்றுமுதலாழ்வார்களென்னும்பெயரிவர்க்கு
நின்றதுலகத்தேநிகழ்ந்து."

* உபதேசரத்தினமாலை - ௮.



* "இடங்கொண்டகீர்த்திமழிசைக்கிறைவனிணையடிப்போ
தடங்குமிதயத்திராமாநுசனம்பொற்பாதமென்றுங் [தி
கடங்கொண்டிறைஞ்சுந்திருமுனிவர்க்கன்றிக்காதல்செய்யா
டங்கொண்டஞானியர்க்கேயடியேனன்புசெய்வதுவே."

† "நாராயணன்படைத்தானான்முகனைநான்முகனுக்
கேரார்சிவன்பிறந்தானென்னுஞ்சொல்—சீரார்
மொழிசெப்பிவாழலாநெஞ்சமேமொய்பூ
மழிசைப்பரனடியேவாழ்த்து".

முன்னொருகாலத்தில், அத்திரி வசிஷ்டர் பிருகு பார்க்கவர் புலஸ்தியர் அங்கிரஸ் முதலிய பிரமரிஷிகள் பலரும் சத்தியலோகத்தைச் சார்ந்து அங்குத் தலைமைபூண்டு வீற்றிருக்கின்ற பிரமதேவனைத் திருவடிதொழுது கூப்பியகையராய் அடியில்வருமாறு கூறலுற்றனர்; 'இக பர மோக்ஷ மாகிற மூன்றிடங்களின் பேற்றையும் பெறுதற்கு ஏற்ற முயற்சி செய்யத்தக்க தலமாகவிருத்தலால் அனைத்துலகங்களுள்ளுஞ் சிறந்த பூலோகத்தில் சிலாக்கியதமமான க்ஷேத்திரம் இன்னதென்று தெரிந்து அங்குச்சென்று பெருந்தவமியற்றக்கருதி இப்பொழுது ஈங்குவந்த எங்களுக்கு அத்தகைய திவ்யஸ்தானம் இன்னதென்று அளித்துரைத்தருள வேண்டும்' என வேண்ட, அவ்வேண்டுகோளுக்கு இரங்கிய திரிபுவனகர்த்தாவாகிய சதுராநநர் உடனே தேவசிற்பியான விசுவகர்மனை வருவித்து, 'இம்முனிவர்கள் காணத் துலாக்கோல்நாட்டி அதன் ஒருதட்டில் ஐம்பதுகோடியோசனைவிஸ்தீர்ணமான பூமிமுழுவதையும், மற்றொருதட்டில் திருமழிசையென்னும் புண்ணியக்ஷேத்திரமாத்திரத்தையும் வைத்து நிறுப்பாய்' என்று பணிக்க, அங்ஙனம் அவன் செய்தவளவிலே, மண்ணுலகமுழுவதையும் நாட்டியதட்டு இலேசுபட்டு மேலோங்கிநிற்க, மழிசைப்பதியை யிட்டதட்டு கனம்பெற்றுத் தாழ்ந்துநின்றது.

‡ "உலகுமழிசையுமுள்ளுணர்ந்துதம்மிற்
புலவர்புகழ்க்கோலாற்றூக்க—வுலகுதன்னை
வைத்தெடுத்தபக்கத்தும்மாநீர்மழிசையே
வைத்தெடுத்தபக்கம்வலிது."

அவ்வேறுபாட்டைப் பிதாமகர்கண்டு அத்தபோதநர்க்கு நன்கெடுத்துக்காட்டி அந்தமழிசைப்பதிக்கு மஹீஸாரக்ஷேத்திர

* இராமாநுசநூற்றந்தாதி - கஉ.
† தனியன்; சீராமப்பிள்ளை அருளிச்செய்தது.
‡ திருக்கச்சிநம்பி அருளிச்செய்த தனியன்.

மென்று காரணப்பெயர்கூறி அதிற்போயிருந்து தவம்புரிந்து உயர்கதிபுகுமாறு அநுமதிதந்து அவர்களை அனுப்பினர்.

அவ்வண்ணமே அம்முனிபுங்கவர்கள் அவ்விடத்தையடைந்து ஐம்பொறியடக்கி அருந்தவம்புரிந்தனர். அவர்களில் பார்க்கவரென்கிற முனிச்சிரேஷ்டர் தீர்க்கசத்திரமென்ற பெருவேள்வியைச் செய்து அதனுல் வாசுதேவனை ஆராதித்து அதன்பின்னர் அவ்வாசுதேவனையே குறித்துப் பெருந்தவமியற்றுகையில் அதனைக்கண்டு அழுக்காறுகொண்ட தேவர்கள் அத்தவவொழுக்கத்தையழிக்குமாறு அரம்பை மேனகை ஊர்வசி திலோத்தமை முதலிய அப்ஸரஸ்ஸ்திரீகளநேகரை ஏவினர்கள். அவ்வரம்பையர் பலர் வந்து பலவாறு முயன்றுபார்த்தும், எம்பெருமானது சரணகமலத்தில் அழுந்திநின்ற அவரது இதயகமலத்தை மீட்கவியலாது வெட்கமும் அச்சமுங் கொண்டு மீண்டுசெல்ல, அவர்களில் அதிநிபுணையான கநகாங்கியென்னுங் கட்டழகி, விஷ்ணுமாயைபோல வேண்டியவுயிர்களை மோகிப்பிக்கும் வல்லமையுடையாள், கருப்புவில்லியையும் வசந்தகாலத்தையும் மற்றும் காமோத்தீபகமான தென்றல் திங்கள் முதலியவற்றையும் உற்றுணையாகவுடன்கொண்டுவந்து அம்முனிவர்முன்னிலையில் ஆடல்பாடலாதி விநோதங்களைச் செய்யவே, அப்பொழுது விதிவசத்தால் அவ்வருந்தவர் தமது உள்ளத்தைப் பகவத்தியானத்தினின்று மீட்டு அவளது கானாமிர்தத்தைக்கேட்டுச் செவிபடைத்தபயன்பெற்றேமெனக்கருதிக் கண்விழித்து அவ்வமரமகளது அதிசௌந்தரியத்தைக்கண்டு காமுற்று யோகம்விட்டுப் போகம்வேட்டு அவளோடு கூடிக்குலாவி மோகவலையினுட் சிக்கிச் சிலகாலம் தம்மைமறந்து தையல்வசப்பட்டிருந்தனர்.

அக்காலத்தில் கருக்கொண்ட அவளது வயிற்றினின்று, தைமாதத்தில் மகாநக்ஷத்திரத்தில்*, சுதர்சனமென்னுந் திருவாழியின் அம்சமானதொரு கர்ப்பம் வெளியாயிற்று. அது அவயவமொன்றுங் காணப்படாத பிண்டாக்ருதியாக இருந்ததால், அத்தேவமாது அதனை வெறுத்து அருகிருந்த பிரப்பந்தூற்றில் எடுத்தெறிந்துவிட்டுத் தன்னுலகஞ் சென்றனள்.

பின்பு தம்வசமடைந்த பார்க்கவர் தவமிழந்ததற்குக்கழிபேரிரக்கமுற்று வெற்றிடமடைந்து மீண்டுந் தவந்தொடங்கலாயி-

* 'தைம்கூடிய புகவருஷங்களில் கிருஷ்ணபக்ஷத்துப் பிரதமைகூடின பானுவாரத்தில் அஸ்லேஷலக்னத்தில்' என்று விவரம் காணப்படும்.



னர். இதுநிற்க, புதரில்எறியப்பட்டபிண்டம் ஒருசிறந்தஆண்குழந்தைவடிவமாகப் பரிணமித்து உயிர்பெற்றுப் பசிதாபங்களால் தனியே அழுதுகொண்டிருக்க, அவ்விடத்துக்கு அருகில் அந்தத் தலத்தில் திருக்கோயில்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற ஜகந்நாதப்பெருமாள் பிராட்டியுடனே எழுந்தருளி அக்குழந்தையைக் குளிரக்கடாக்ஷித்து அதன்பசிதாகங்களைத் தவிர்த்து ஆராவமுதமான தமது திருமேனியைக் காட்டித் தேற்றி மறைந்துசெல்ல, அப்பெருமானது பிரிவை யாற்றுமல் அக்குழந்தை மீளவும் அதிகமாக அழத்தொடங்கிற்று.

அச்சமயத்தில் அங்குப் பிரம்பறுக்கவந்தா னொரு திருவாளனென்னும் வேளாளன் அவ்வழுகுரலைக் கேட்டு அருகிலடைந்து அக்குழவியைக் கண்டு மிகுந்தமகிழ்ச்சிகொண்டு எடுத்துச்சென்று இல்லம்புக்குத் தன்மனைவியான பங்கயச்செல்வியை அழைத்து 'பிள்ளையில்லாத நமக்குத் தெய்வீகமாகக் கிடைத்தது இது' என்றுசொல்லிக் குழந்தையைக் கையிலே கொடுக்க, அவளும் மிகுந்தஆதரத்தோடு வாங்கிச் சீராட்டி வளர்க்கத்தொடங்குகையில், அவளுக்கு அம்மகவின்பாலுண்டான அதிக அன்பினால் பால்சுரக்க, அதனை அவள்கொடுக்கமுயன்றும், அத்தெய்வக்குழவி அங்கீகரியாமல் ஸ்தந்யபாநாதிகளில் விருப்பற்றுப் பகவத்குணாநுபவத்தையே தாரகமாகக்கொண்டு பசிதாகங்கள் கொள்ளாது அழுதல் அரற்றுதல் கூவுதல் பேசுதல் முதலிய லௌகிகவியாபாரமொன்றும் இன்றி மலமூத்திரரகிதமாய்ப் பரிசுத்தமாக இளஞாயிறுபோலத் திருமேனியொளிவிளங்க வளர்ந்துவந்தது.

* "உண்ணுஞ்சோறு பருகுநீர் தின்னும்வெற்றிலையு மெல்லாங் கண்ணனெம்பெருமான்" என்றபடி பகவானை அநுபவித்தலாகிய அமிர்தபானத்தாலே உள்ளமும்உடலும்நிறைந்து உணவு நீர்வேட்கையொழிந்து இக்குமாரர் காண்பவர்கேட்பவர்யாவரும் வியக்குமாறு எழுந்தருளியிருக்கிற செய்தியை அவ்வூரிலிருப்பானொரு மூப்புடைவேளாளன் கேள்வியுற்று அறிந்து இவரைத்தரிசிக்கவிரும்பிப் பசுவின்பாலைக்காய்ச்சியெடுத்துக்கொண்டு தன்பாரியையுடனே ஒருநாளுதயகாலத்தில் இவரிருக்குமிடத்தையடைந்து இவரது திருவொளியினைமையைக் கண்டு அதியாச்சரியப்பட்டுத் தான்கொணர்ந்தபாலைத் திருமுன்பே சமர்ப்பித்து 'இதனையுண்டருளவேண்டும்' என்று வெகுவாய்ப் பிரார்த்தித்தான்.

* திருவாய்மொழி - அறுபத்தோராந்திருப்பதிகம் - க.

அவர்களுடைய பக்திமிகுதிக்குத் திருவுள்ளமுகந்து இவர் அதனை அமுதுசெய்தார். பிள்ளையில்லாக்குறையால் அத்தம்பதிகள் இவரையே தமக்கு எல்லாப்பேறுமாகப் பாவித்து நாள்தோறும் பால்கொண்டுவந்துகொடுக்க, அவர்களது பக்தியமுதத்துக்குகந்து அதனைப் பானஞ்செய்துவந்த இவர், ஒருநாள் அவர்களது குறையைத் தீர்க்கக்கருதி, தாம் உண்டு சேடித்த பாலை 'நீங்களுண்ணுங்கள்' என்று அவர்களுக்குக் கொடுக்க, அவர்கள் அதனைப் பருகியளவிலே, முதுமையொழிந்து இளமைப்பருவமடைந்தனர். பின்பு அவ்வேளாண்மகள் கர்ப்பவதியாய் ஒருபுத்திரனைப் பெற, அதுநோக்கி மகிழ்ச்சிகொண்ட அவள்கொழுநன் அக்குழந்தைக்குக் கணிகண்ணனென்று பெயரிட்டு அன்போடுவளர்த்து இவரது முன்னிலையிலே கொண்டுவைத்துவிட, அவ்விளமகன் இவரது கடாக்ஷவீக்ஷணத்தால் நல்லறிவுபெற்றுப் பலகலைகளையுணர்ந்து பாகவதபக்தியையும் பாகவதப்பிரதிபத்தியையும் மிகுதியாக உடையனாயினான்.

பார்க்கவகுமாரர் இப்படி எழுபிராயமளவும் பிரம்பயப்பாவிடத்திலேயிருந்து பின்பு அஷ்டாங்கயோகத்தால்முழுமுதற்கடவுளையடையக்கருதுபவராய் அங்குநின்றுபுறப்பட்டுப் பலவிடங்களையடைந்து 'எல்லாப்பொருளுக்குந்தலைமையான பரதத்வமெதுவோ?' என்று ஆராய்ந்து லோகாயதம் பௌத்தம் சமணம்முதலிய அவைதிகமான புறச்சமயங்களுள்ளும் சாங்க்யம் மாயாவாதம் முதலிய வைதிகமான அகச்சமயங்களுள்ளும் ஒவ்வொன்றிலும் தனித்தனி புகுதலுற்றார். முதலில் ஒருமதத்தில் பிரவேசித்து அப்பொழுது அதற்குரிய நூல்களையெல்லாம் அறிந்துதேர்ந்து அம்மதத்திற்கேற்ற பேரோடும் ஒழுக்கத்தோடுங் கூடி அதன் நிலையிலே ஊன்றிநின்று பலநூல்களை யியற்றிப் பின்பு அக்கொள்கையில் சிலகுறைபாடுகளைக் கண்டு அதனைவிட்டு வேறொருசமயத்தில் இறங்குவார். இவ்வாறே பலகாலம் பலமதங்களையும் பரிசோதித்தவர் பின்பு சைவசமயமே சற்சமயமென்று துணிந்து அதில்தலையிட்டுச் சிவவாக்கியரென்னும்பெயர்பூண்டு சிவபரமாக அநேகநூல்களைச்செய்துகொண்டு பிறமதத்தரோடுசம்பாஷணை செய்தற்குக்கூட அதிகப்பிரியப்படாமல் ஏகாந்தசீலராய் ஓரிடத்திலிருந்து பரமசிவனைத் தியானித்துவருகையில், முதலாழ்வார்களில் ஒருவரான பேயாழ்வார் அங்கெழுந்தருளி அவரதுசெய்தியையறிந்து அவரைச் சீர்திருத்தி ஸ்ரீவைஷ்ணவசமயத்தவராக்கு



தற்குத்திருவுளங்கொண்டு அவரது ஆச்சிரமத்துக்குச்சமீபத்தில் தாம் ஒருஆச்சிரமத்தையேற்படுத்திக்கொண்டு அதில் சிலசெடிகளைத் தலைகீழாகநட்டுச் சில்லிக்குடமும் அறுந்ததாம்புங்கொண்டு அவற்றுக்கு நீர்வார்க்கத்தொடங்கினார். கண்டவர்பரிகசிக்கத்தக்க அச்செயலைப் பார்த்துச் சிவவாக்கியர் இகழ்ச்சிப்பெருநகைகொண்டு அவ்விடத்தையடைந்து 'நீர் பித்தரோ? பேயரோ?' என்ன, அவர் 'நான் அத்தகையனல்லேன்; நீரே உன்மத்தர்' என்று உத்தரங்கூறினர். அதுகேட்டுச் சிவபக்தர் பிரத்யக்ஷமாகவுள்ள அவரதுபொருந்தாதசெய்கையை எடுத்துக்காட்டித் தான் சொன்னதை நிலைநிறுத்த, விஷ்ணுபக்தர், 'வெகுகாலமாக அநேகமதங்களில் அலைந்தும் பரதத்துவமின்னதென்று உண்மைதெரியாத உம்மை உன்மத்தனென்னத் தடையென்னே? உற்பத்திவிநாசங்களில்லாத பராபரவஸ்துவான ஸ்ரீமந்நாராயணன் இருக்க, அவனையறியாது, ஆக்கவழிவுகளைக்கூடிய சிவபிரானைத் தெய்வமாகக்கொண்டது, உமதுஉணர்வின்மையேயாகும்' என்று தாம் கூறியதை வற்புறுத்தத் தொடங்கினார். அப்பொழுது, அதிப்பிரபலமாக இருவர்க்கும் சைவவைஷ்ணவசம்வாதம் நடந்தது. அதில் தோல்வியடைந்த அரனடியவர் இதுகாறும் காலங்கழிந்ததற்கு அநுதபித்துச் சைவசின்னங்களையொழித்துத் தம்மை வாதப்போரில்வென்ற வைஷ்ணவருக்குச் சிஷ்யராய் அவரைச் சரணமடைய, அப்பொழுது, அவருக்குப் பேயாழ்வார் பஞ்சஸம்ஸ்காரபூர்வகமாகத் தத்துவஉபதேசஞ்செய்து எழுந்தருளினார். அதுமுதல் ஸாரதமமானவிஷ்ணுபக்தியையே கொண்ட திருமழிசைப்பிரான்

"சாக்கியங்கற்றோஞ்சமண்கற்றோஞ்சங்கரனா
ராக்கியவாகமநூலாராய்ந்தோம்—பாக்கியத்தால்
செங்கட்கரியானைச்சேர்ந்தோம்யாந்தீதிலமே
யெங்கட்கரியதொன்றில்"

என்று எண்ணித் திருவல்லிக்கேணிக்கு வந்து கஜேந்திரசரசென்கிற மீனமர்பொய்கையின் கரையிலே யோகநிலையில்நின்று திருமகள்கொழுநனைத் தியானித்துக்கொண்டிருந்தார்.

அந்நாட்களில் ஒருநாள், ஆகாயமார்க்கத்தில் ருஷபவாகனாரூடராய்ப் பார்வதிபரமேசுவரர் செல்லுகையில், உமாதேவி இவரது தவவொழுக்கத்தைக் கண்டு கொண்டாடித் தம்காதலனைநோக்கி 'இவன் ஆரோ?' என வினவ, சிவபிரான் 'இம்மகாநுபாவன்

நம்மைவிட்டு நாராயணனுக்கு அடிமைப்பட்டவன்' என்றுசொன்னவளவிலே, அம்பிகை, 'இப்பெரியவனுக்கு நாமும் தரிசனந்தந்து ஏதேனும் வரமளித்துப் போவோம்' என்றுகூற, அவளது விருப்பத்தின்படி செய்யச் சம்மதித்துச் சங்கரபகவான் இவரெதிரில்வந்து காட்சிதந்தருளினர். அவர் அப்பிரானைப் பார்த்தும் பாராதவர்போல உபேட்சித்து ஒருகந்தையைத் தைத்துக்கொண்டு கர்மபரராயிருத்தலைக் கண்டு உமாபதி 'உனக்கு அருள்செய்யவந்த நம்மை நீ அநாதரஞ்செய்தல் தகுதியோ?' என்று கூறில, வைணவயோகி 'உம்மால் ஆகவேண்டுவது ஒன்றும் எனக்கு இல்லை; ஆதலின், நான் உதாசீனனாயிருந்தேன்' என்று உரைத்தார். பின்பும் சந்திரமௌலி 'நம்வரவு வீண்போவதன்று; உனக்கு அபீஷ்டமான வரம் வேண்டிப் பெற்றுவாழ்வாய்' என்று நிர்ப்பந்திக்க, அநந்தரம் ஆழ்வார் 'பரமபதமருள்வல்லீராயின் அருளுவீர்' என்றுவேண்டினர். அதற்கு அக்கடவுள் 'அது நம்மால் தரத்தக்கதன்று; அதுதருதற்குரிய தேவன் அச்சுதனே: ஆதலின், வேறுவரம் வேண்டுதி' என்ன, ஆழ்வார் புன்முறுவல்செய்து 'அம்ருதத்தைப் பெறும்பொருட்டுப் பலகாலம் இவ்வுலகில் உயிர்த்திருந்து பெருந்தவம்புரிதற்கு உபயோகமாக நீண்டஆயுளையேனும் அடியேற்கு அளித்தருளுவீர்' என்று பிரார்த்தித்தார். அதுகேட்டுக் கைலாசபதி 'அது கர்மானுகுணமாக நடப்பதேயன்றி வளர்த்தத்தக்கதன்று; வேறுவேண்டுவதை விளம்புவாய்' என்னவும், திருமழிசைப்பிரான் குறுநகையோடு இகழ்ச்சியாக 'இவ்வூசியின்பின்னே நூல்வரும்படி வரதானஞ்செய்தருளீர்' என்று விநோதமாகச்சொல்ல, அப்பரிகாசவார்த்தை செவிப்பட்டவுடனே கடுஞ்சினங்கொண்டு, கண்ணுதற்கடவுள் 'இச்செருக்குடையானை இப்பொழுதே அநங்கனைப்போலாக்கிவிடுவேன்' என்று தமது நெற்றியிலுள்ள நெருப்புக்கண்ணைத் திறந்துவிட்டார். அதினின்று புகையும்பொரியுமாகக் கிளர்ந்தெழுந்த காலாக்கினியைக்கண்டு பாகவதோத்தமர் சிறிதுங்கலங்காமல் 'இந்திரன்போல உடம்புமுழுவதிலுங் கண்காட்டினும் அஞ்சுவேனல்லேன்' என்றுசொல்லித் தமது வலத்திருவடியின் பெருவிரலிலுள்ளதொரு கண்ணைத் திறந்துவிட அதிலிருந்து ஒருபெருந்தீ எழுந்து ஊழித்தீயினும் பலமடங்கு மிகவிட்டு அவ்வனலை அடக்கத்தொடங்கிற்று. அவ்வளவில், அமராபரணர் அக்கடுநெருப்பை யவிக்கும்படி தமதுசடை... பலமேகங்களை யேவிவிட



அவையும் அங்ஙனமே கல்பாந்தகாலத்திற்போலச் சோனைமழை பொழிந்து பெருவெள்ளம்போக்கவும், பரமபாகவதர் சிறிதுஞ் சலியாமல் பகவத்பக்தியிலே பிரவணராயிருந்தார். அதுகண்டு முக்கண்மூர்த்தி மிகவியந்து இவருக்கு 'பக்திசாரர்' என்று திருநாமஞ்சாத்தி இவர்வைபவத்தைக் கொண்டாடித் தம்மிடத்துக்கு மீண்டுசென்றனர்.

அதன்பின்பு ஆழ்வார் முன்போலவே யோகத்திலெழுந்தருளியிருக்கையில், சுத்திகாரனென்பானொரு சித்தன் தனது சாமர்த்தியத்தால் ஒருபுலியையடக்கி வாகனமாகக்கொண்டு அதன்மேலேறி ஆகாயத்தில் விசும்பாறாகச் செல்லுகையில், இவரது யோகப்பிரபாவத்தால் அவ்வூர்தி தடைப்பட்டு இவருக்கு நேரில் மேலே வானத்தில் செல்லமாட்டாது நின்றுவிட, அவன் 'இதற்கு ஏதுவென்னோ?' என்று எப்புறத்தும்பார்க்கையில், கீழேயிருக்கிற யோகியைக்கண்டு ஆச்சரியப்பட்டு அங்குநின்று இறங்கி இவரருகில் வந்து, இவரது சக்தியைச் சோதிக்கக் கருதி, 'ஓ முனீந்திரரே! நீர் உடுத்துநின்ற அந்தக்கந்தைச்சீலையைப் போகட்டுப் பீதாம்பரத்தாலாகிய இந்த உடையை உபயோகித்துக்கொள்ளும்' என்று ஒரு சிறந்த கஞ்சுகத்தை யுண்டாக்கிக்கொடுக்க, அவர் அதனைத் திரஸ்கரித்து, தமது இச்சாமாத்திரத்தால் மாணிக்கமயமானதொரு கவசத்தை நிருமித்துக் காட்டினார். சூரியன்போல ஒளிவிளங்குகிற அதனைக் கண்டு நாணங்கொண்டு அவ்வியாக்கிரவாகனன் தன் கழுத்திலுள்ளதொரு மணிமாலையை வாங்கி 'இதனை ஜபமாலையாகத் தரித்துக்கொள்ளும்' என்றுகொடுக்கவர, முனிவர் தாம் கண்டத்தில் தரித்துள்ள ஸ்படிகமணிமாலையையும் தாமரைமணிமாலையையும் எடுத்துக்காட்டினார். அவை நிர்மலமான நவரத்தினமாலைகளாய்விளங்கக் கண்ணுற்று அவன் வெட்கப்பட்டு 'எல்லாச் சித்தர்களையும்வென்றுவந்த என்னை நீர் வென்றதனால், உம்மிற் சிறப்புடையானொரு சித்தன் உலகத்தில் எங்கும் இலன்' என்று சொல்லித் துதித்துப் பிரதட்சிணஞ்செய்து நமஸ்கரித்து வேறு வழியாகச் சென்றிட்டான்.

பின்பு இவர் அங்கே யோகநிஷ்டராயிருக்கையில், கொங்கணசித்தனென்பானொருவன் இரசவாதி அவரது மகிமையைக் கேள்வியுற்று மிகுந்தபரபரப்போடு அருகில்வந்து கோடியிரும்பைப் பொன்னாக்கவல்லதொரு இரசகுளிகையைக் காட்டி 'இதனை நீர் பெற்று மகிழ்மின்!' என்ன, திருமழிசைப்பிரான் அதனை வேண்டா

வென்றுவிலக்கித் தம்முடைய பொன்னொத்தமேனியின் புழுதியை யெடுத்துத்திரட்டி அப்புருண்டையை அவன்கையிற்கொடுத்து 'இக்குளிகை பலகோடிகளைப் பொன்னாக்கவல்லது; இதனைக்கொண்டு நீ பிழைப்பாய்' என்றுசொல்லியருள, அவன் அதனை யுடனே பரிசோதித்துப்பார்த்து அவ்வாறேயிருக்கக்கண்டு அதிப்பிரீதியோடு ஆழ்வாரைத் தண்டனிட்டுப் போயினான்.

அப்பால் பக்திசாரர் பிறிதிடஞ்சென்று ஒருமலைக்குகையிலே இருந்து யோகுசெய்யாநிற்கையில், திவ்யதேச யாத்திரையாகச் சஞ்சரித்துவருகிற முதலாழ்வார்கள்மூவரும் அவ்விடத்தை யடைந்து உள்ளேயெழுந்தருளியிருக்கிற இவரது திவ்யப்ரகாசமான திருமேனியினொளியை வெளியிலிருந்துகண்டு அதியாச்சரியப்பட்டு முறையிலேயே இவர்க்குக் குசலப்பிரச்னம் பண்ண, அதுகேட்டு அவரும் விரைவாக எழுந்து யோகக்ஷேமவிசாரணை செய்தவளவிலே, நால்வரும் பாலும்பாலுங் கூடினாற்போலவும் தேனுந்தேனுங் கலந்தாற்போலவும் ஒருமனப்பட்டுச் சர்வகாலமும் பகவத்குணங்களையே கூறுதல் கேட்டல் சிந்தித்தல் துதித்தல் அநுபவித்தல்முதலியன செய்துகொண்டு, தவஞ்செய்திருந்தார்கள். இப்படி சிலகாலஞ்சென்றபின் எல்லோரும் பேயாழ்வாரது திருவவதாரஸ்தலமான மயூரபுரிக்கு வந்து அங்கு அவ்வாழ்வார் தோன்றியஇடமாகியகைரவிணீதீர்த்தத்தின் கரையிலே சிலவாண்டு யோகமுடித்தபின்னர் முன்னவர்மூவரும் பூமிசஞ்சாரார்த்தமாகப் போயினார்கள்.

அநந்தரம் ஆழ்வார், தமது ஜந்மபூமியான மகிசாரபுரத்துக்குச் சென்று தாம்வழக்கம்போலச் சாத்திக்கொள்ளுதற்குத் திருமண்வேண்டிச் சோதித்தவிடத்தில் அகப்படாமையால் மனக்கலக்கமுற, அப்பொழுது திருவேங்கடமுடையான் இவரது கனவிலே தோன்றி 'கசிவெஃகாவையடுத்த பொற்றாமரைப்பொய்கையிலேயுள்ளது' என்றுகூறியருள, உடனே இவர் கவலையொழிந்து அங்கேசென்று திருமண்கண்டு களித்து எடுத்துவந்து தரித்துக்கொண்டு பகவதநுபவம்பண்ணுதலே தொழிலாகச் சிலகாலங்கழித்து, பின்பு மழிசையம்பதியைவிட்டு காஞ்சீபுரத்தைச் சேர்ந்து, அங்குத் திருவெஃகாவிலே ஆதிசேஷசயனத்திலேபள்ளிகொண்டருளுகிற பெருமானைச் சேவித்து ஈடுபட்டு அப்பிரானையே தியானஞ்செய்துகொண்டு அநேகவருஷகாலம் எழுந்தருளியிருந்தார்.



அப்பொழுது கணிகண்ணன் வந்து தனது ஆசிரியரான இவருக்குப் பலவிதமான சிசுருஷைகளைப் பண்ணிக்கொண்டு உபசாரமூலமாகச் சிலநாள்செய்திருந்தான். அக்காலத்தில், அங்கொருத்தி உடல்திரைந்து பருவம்முதிர்ந்த கிழவியொருத்தி பக்திசாரபாதகமலங்களில் பரமபக்தியுடனே அவருள்ளவிடத்தைத் திருவலகிடுதலும் மெழுகுதலும் கோலமிடுதலுமாகிய கைங்கரியங்களைத் தினந்தோறுஞ்செய்துகொண்டிருந்து ஒருநாள் அவர் திருக்கண்விழித்தமயத்திலே அவரைச்சரணமடைந்து வரங்கேட்டுப் பெற்று மன்மதனொத்தவனத்தையடைந்து தேவமாதர்போல அதிசுந்தரியாயினள். அந்நகரத்தரசனான பல்லவராயன் ஒருநாள் அவளதுவடிவழகைக் கண்டு காதலாகி மிகவுயர்ந்த அணிகலங்களையும் நலமிகுந்தபட்டாடைகளையும் பரிசாகக்கொடுத்து அவளை மணஞ்செய்து பட்டமஹிஷியாக்கி அவளுடன் வாழ்ந்துவந்தான். வருகையில், தனது இளமை நாளுக்குநாள் குறைவதையும் அவளது பருவம் மாறுபடாததையும் கண்டு விம்மிதங்கொண்டு 'உனது மங்கைப்பிராயம் என்றென்றும் ஒருபடியாயிருந்ததற்கு ஏது என்னே?' என்றுகேட்டு, ஆழ்வாருடைய அநுக்கிரகமென்று அறிந்து, அவ்வருளைத் தான்பெறுதற்கு நல்லுபாயத்தை நாடியுரைப்பாயென்று அவளையே வேண்டினான். அதுகேட்டு அவ்வணங்கு 'பிரதிதினமும் நமது அரண்மனைக்குப் பிக்ஷைக்காய்வருகிற கணிகண்ணனென்பவர் அந்தமகானுக்கு அந்தரங்கர்; இவர் புருஷகாரமாக அவரை அநுவர்த்தித்தால் கருதியது கைகூடும்' என்று கட்டுரைத்தாள். அவ்வாறே வேந்தன், மறுநாள் கணிகண்ணன் வந்தபோது, அவனைத் தனியேயழைத்து உபசரித்து 'உமது பரமகுருவை யான் சேவிக்குமாறு இங்கு அழைத்துவரவேண்டும்' என்று பிரார்த்திக்க, அவன் 'நம் ஆசாரியர் ஓரிடத்துக்கும் எழுந்தருளார்' என்று கூறிவிட, மன்னவன் 'என்னை அங்கு அழைத்துப்போயாயினும் அவர் கருணைக்கு இலக்காக்குவித்து அவரருளால் என்னை என்றும் யௌவனவானாயிருக்கச் செய்யவேண்டும்' என்றுவேண்ட, அதற்கும் அவன் உடன்படாமல் 'உன்னைப்போல இம்மைப்பயனையே எதிர்நோக்கிநிற்பாரை ஆழ்வார் கண்ணெடுத்துப்பார்த்தலும் அரிது' என்று மறுத்துவிட்டான். பின்பு அரசன் வருந்தியசிந்தையனாயிருக்கையில், அமைச்சர்கள் வந்து தேற்றி 'இக்கணிகண்ணன் தெய்வப்புலமையுடையான்; இவன் வாயினால் பாடியபடியெல்லாம்

பலத்துப்புகழ்தல் கடமையின்மை; ஆதலின், இவனும்பாடப்பெறு ல்திட்டமிருந்திடவேயாய்' என்று கூறயிக்கூற, அங்ஙனமே மன்னவன். அதிகாரால் அவ்வடியவன் வந்தபொழுது 'எனக்கு அழியாத இளமை வருமாறு கவிபாடவேண்டும்' என்று சொல்ல, அவ்வணமே 'நான் எம்பெருமானையன்றி நரஸ்தோத்திரஞ் செய்வதில்லையாகிய நான் உன்னைப் பாடுவேனல்லேன்'' என்று இயம்பினன். பின்பும் பார்த்திவன் தன்னைப் பாடவேண்டுமென்று நிர்ப்பந்திக்கவும் அவன்

> "ஆடவர்கள் எங்ஙனமகன்றொழிவார்வெஃகாவும்
> பாடகமுமூரகமும்பஞ்சரமா—நீடியமா
> னின்றானிருந்தான்கிடந்தானியவன்றோ
> மன்றார்பொழிற்கச்சிமாண்பு"

என்று ஒருதிருக்கவி சொல்ல, கொற்றவன் கோபங்கொண்டு 'நம்மைப்பாடினன்றால் நகரத்தைப்பாடிய நீ இவ்வூரில் இனி வசித்தலாகாது; உடனே வெளியே போ' என்று உரைக்கக்கூற, உடனே கணிகண்ணன் பக்திசாரரையடைந்து நடந்தசெய்தியை விண்ணப்பஞ்செய்து 'அடியேனுக்கு விடைதந்தருளவேண்டும்' என்ன, ஆழ்வார் 'நாமும் பெருமானையெழுந்தருளப்பண்ணிக்கொண்டு உடன்வருவேன்' என்று உரைத்துத் திருக்கோயிலுட்சென்று அடியவர்க்கெளியவனான கடவுளைத் திருவடிதொழுது

> "கணிகண்ணன்போகின்றான்காமருபூங்கச்சி
> மணிவண்ணா நீகிடக்கவேண்டா—துணிவுடைய
> செந்நாப்புலவனும்போகின்றேன்நீயுமுன்றன்
> பைந்நாகப்பாய்சுருட்டிக்கொள்"

என்று பிரார்த்தித்தவளவிலே, அர்ச்சகபகவானும் ஆழ்வாரபிமதப்படி யோகநித்திரையைவிட்டு எழுந்து *, மூவரும் அவ்வூரைவிட்டு அருகிலுள்ள ஓரிடத்தை அடைந்து அங்கு வசித்தனர். [illegible]ம் பெருமானும் ஆழ்வாரும் அவரடியாரும் அப்பதியைவிட்டுப்போயினதால், அத்திவ்யதேசத்தில் பலதிருக்கோயில்

* "அவ்விடையாந்தன்கொழுப்பாய்க்காடலைத்தோடுதேங்கு பூம்பாய்த்தளறிசெய்யக் கருதிடை [illegible] செல்லைப், பணிகொண்டுடையப்படப்பாய்ச்சுருட்டுப்பின்தொடர்ந்ததலைப்பப் பழமைகள்முறையிட்டப்பைந்தமிழ்ப்பின்சென்றபச்சைப்பசுங்கொண்டலே."—மீனாட்சியம்மைபிள்ளைத்தமிழ் - க.

"வண்டமிழ்பயில்வோர்பின் றிரிகின்றவன்."—அருணகிரிநாதர் திருப்புகழ்-௩௦.



கூறி எழுந்தருளியிருக்கிற மற்றைய பெருமானுடனும் விட்டு நீங்க, அப்புரமுழுவதும் பொலிவிழந்து, அங்கு மற்றும்பல ஆலயங்களிலிருக்கிற தேவதைகளின் சாந்நித்தியமுமில்லையாய், சூரியவெளியுஞ் செல்லாமல் இருள்மூடப்பட்டது. இப்படி நிகழ்ந்ததைக் கண்டு அம்மன்னவனும் மந்திரிமாரும் அவர்களுள்ளவிடத்தைத் தேடிவந்து கணிகண்ணன் காலில்விழுந்து தனதுபிழையைப் பொறுத்தருளுமாறு பலவாறு பிரார்த்திக்க, அவனும் மீண்டெழுந்தருளும்படி ஆழ்வார்பக்கல் விண்ணப்பஞ்செய்ய, அவரும் அதனை அங்கீகரித்து ஆச்ரிதபரதந்த்ரனான அரவணைச்செல்வனை நோக்கி,

> "கணிகண்ணன்போக்கொழிந்தான்காமருபூங்கச்சி
> மணிவண்ணா நீகிடக்கவேண்டுந்—துணிவுடைய
> செந்நாப்புலவனும்போக்கொழிந்தேன்நீயுமுன்றன்
> பைந்நாகப்பாய்படுத்துக்கொள்"

என்று, முன்புபாடியபாட்டை மாற்றிப்பாடி வேண்ட, எம்பெருமானும் அதற்கு உடன்பட்டு ஆழ்வாருங் கணிகண்ணனும் உடன்வர மீண்டெழுந்தருளித் திருவெஃகாவை யடைந்து ஆழ்வார்திறத்து அபிமானத்தால் தான் இங்ஙனஞ்செய்தது பின்புள்ளார்க்கும் பிரத்யட்சமாகவேணுமென்று முன்புபோல வலத்திருக்கைகீழாகவன்றி இப்பொழுது இடத்திருக்கைகீழ்ப்படக் கண்வளர்ந்தருளினன்.

இங்ஙனம் பக்தர்சொன்னபடி செய்ததனால், அப்பெருமானுக்கு 'யதோக்தகாரி' என்று வடமொழியிலும், 'சொன்னவண்ணஞ்செய்த பெருமாள்' என்று தென்மொழியிலும் திருநாமம் வழங்கலாயிற்று. இவர்கள் சென்று ஓரிராத்திரி தங்கியிருந்தவூர் 'ஓரிரவிருக்கை' எனப் பெயர்பெற்றது.

அம்மாத்திரத்தில் காஞ்சீநகரம் முன்போலப் பொலிவுபெறவே, அரசனும் பாகவதர்களது மகிமையையுணர்ந்து அதுமுதல் அவர்களுக்கே அடியவனாய் வாழ்ந்திட்டான்.

அநந்தரம் ஆழ்வார் கும்பகோணயாத்திராபேக்ஷையுடையராய்ப் புறப்பட்டுச் செல்லும் வழியிடையே பெரும்புலியூரென்ற கிராமத்தில் ஒருவேதியன்வீட்டின் திண்ணையில் சிறிதுபொழுது எழுந்தருளியிருக்க, அங்கு வேதமோதிக்கொண்டிருந்த அந்தணர்கள், நீறுபூத்தநெருப்புப்போலுள்ள அந்த மகாயோகியின் பிரபாவத்தையறியாமல் அவரைக் கீழ்ப்பட்டசாதிய னொருவனு

கக் கண்டு அவர்களிருப்பிடம் வேதாத்யயனஞ்செய்யாதே தவிர்ந்திருக்க, அக்குறிப்பையறிந்த இவர் அவ்விடத்தை விட்டுத் தூரத்திற்சென்று வேறொரு சத்திரமேடையில் வீற்றிருந்தார். பின்பு அம்முதலந்தணர்கள் மீண்டும் வேதபாராயணஞ் செய்யத்தொடங்கி, விட்ட விடந்தோன்றாது மயங்கி, 'இதற்குக்காரணம் வந்த அதிதியை அலக்ஷியஞ்செய்தமையே' என்று அறிந்து அவரிடஞ் சென்று சேர, ஆழ்வார் அதனைநோக்கி, கருப்புநெல்லினைக் கையுகிராலே பிளந்து, அவர்விட்ட சொற்றொடரைக் குறிப்பித்தருளியமாத்திரத்திலே, அப்பொருளுள்ள *வேதவாக்கியம் அவர்களுக்குத் தோன்றிற்று. உடனே அவர்கள் பிரதக்ஷிணப்பிரணாமாதிகளால் இவரை உபசரித்துக் கிருதார்த்தரானார்கள்.

அப்பொழுது அவ்வூர்த் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கிற எம்பெருமான் இவ்வாழ்வார் எந்தெந்தமுகமாகத் திரும்புகிறாரோ அந்தந்தமுகமாகத் திரும்பியருள, அந்த ஆச்சரியத்தை அர்ச்சகர்மூலமாக அறிந்து அவ்வூரவரனைவரும் அங்கு யாகஞ்செய்துகொண்டிருந்த பெரும்புலியூரடிகளிடத்தே சென்று இவருடைய வைபவத்தைக் கூற, அதுகேட்டவுடனே தீக்ஷிதரும் அதிசந்தோஷத்தோடு வந்து பக்திசாரரைத் தரிசித்துக் கண்படைத்த பயன்பெற்றேனென்று களித்து யாகசாலைக்கு எழுந்தருளுவித்துக்கொண்டுபோய் அவருக்கு அக்கிரபூசையைச் செய்திட்டார். தருமபுத்திரர் இராஜசூயயாகத்திலே ஸ்ரீகிருஷ்ணஸ்வரூப் பிரதமதாம்பூலஞ் சமர்ப்பித்தபொழுது சிசுபாலன் பலவிதமாகப் பழித்தாற்போல, இங்கும் அழுக்காறுற்ற நான்மறையாளர்பலர் எண்ணிறந்த நிந்தைமொழிகளைக் கூற, முற்பூசைதந்தமுனிவர் 'இவர்களை அடக்கியருளவேண்டும்' என்று ஆழ்வாரைப் பிரார்த்திக்க, இவரும் அவரது வேண்டுகோளின்படி செய்யக் கருதித் தமக்கு அந்தர்யாமியான அநந்தசயனனைக் குறித்து

"அக்கரங்களக்கரங்களென்றுமாவதென்கொலோ
இக்குறும்பைநீக்கியென்னையீசனாக்கவல்லையேல்
சக்கரங்கொள்கையனேசடங்கர்வாயடங்கிட
வுட்கிடந்தவண்ணமேபுறம்பொசிந்துகாட்டிடே"

என்று விண்ணப்பஞ்செய்ய, எம்பெருமான் †"தம்மையே நாளும்வணங்கித்தொழுவார்க்குத், தம்மையேயொக்கவருள்செய்

* "க்ருஷ்ணாநாம் வ்ரீஹீணாம் நகநிர்ப்பிந்நம்."
† பெரியதிருமொழி-௧௧ம்பத்து. மூன்றாந்திருப்பதிகம் • ௫.



வன்" ஆதலால், திருமகளும்நிலமகளுந் திருவடிவருடப் பெரியதிருவனந்தாழ்வான்மீது அறிதுயிலமருந் திருவுருவத்தை இவர் திருமேனியிலே தோற்றுவிக்க, அனைவரும் அத்திவ்வியமங்களவிக்கிரகத்தைச் சேவித்து ஆழ்வாரது வாசாமகோசரமான விபவத்தையுணர்ந்து அவரது சீர்பாதங்களிலே சாஷ்டாங்கமாகத் தண்டன்சமர்ப்பித்து அபராதக்ஷாமணஞ்செய்தருளுமாறு வேண்ட, திருமழிசைப்பிரான் அவர்களுக்கு ஞானோபதேசஞ்செய்து ஆட்கொண்டுவாழ்வித்தருளி, திருக்குடந்தைக்குச் சென்று, அங்குச் சயனத்திருக்கோலமாக எழுந்தருளியிருக்கிற ஆராவமுதனைச் சேவித்து அவ்வெம்பெருமானது திருக்கோலத்திலே யீடுபட்டு

* "நடந்தகால்கணொந்தவோநடுங்கஞாலமேனமா
யிடந்தமெய்குலுங்கவோவிலங்குமால்வரைச்சுரங்
கடந்தகால்பரந்தகாவிரிக்கரைக்குடந்தையுட்
கிடந்தவாறெழுந்திருந்துபேசு" என்றுவிண்ணப்பஞ்செய்ய,

அப்பிரானும் ஆழ்வார்பக்கல் கொண்ட அளவில்பெருங்கருணையால் அர்ச்சாவதாரத்தின் வரம்பு கடந்து விபவாவதாரத்திற்போல அங்ஙனம்எழுந்திருந்து பேச முயல, உடனே பக்திசாரர் 'இத்திசௌலப்யத்துக்கு ஒருதீங்குவாராதிருக்கவேணும்' என்று திருவுள்ளம்பற்றி "வாழிகேசனே" என்று மங்களாசாஸனம்பண்ண, பெருமாளும் அப்பொழுதிருந்தபடியே உத்தானசாயியாய்க் கிடந்தருளினான். அந்தத்திருவடிவத்தையே தியானஞ்செய்துகொண்டு ஆழ்வார் அத்திருப்பதியிலே அநேககாலம் யோகத்திலே யெழுந்தருளியிருந்தார்.

இப்படி இவர் நாலாயிரத்தெழுநூறுவருஷகாலம் பூலோகத்தில் வாழ்ந்திருந்து தாம் பகவானை அநுபவம் பண்ணினபடிகளை, நான்காந்திருவந்தாதி, திருச்சந்தவிருத்தம் என்கிற திவ்வியப்பிரபந்தமூலமாக உலகத்தார்க்கு உபகரித்தருளி

† "இனியறிந்தேனீசற்குநான்முகற்குந்தெய்வ
மினியறிந்தே னெம்பெருமானுன்னை—யினியறிந்தேன்
காரணனீகற்றவைநீகற்பவைநீநற்கிரிசை
நாரணனீநன்கறிந்தேனான்"

என்று சகலப்பிரபஞ்சகாரணனான நாராயணனது பரத்துவத்தை வெளியிட்டு யாவரையும் உய்வித்து அநந்தரம் திருக்குடந்தையிலேயே மீளாவுலகம் புக்கருளினார்.

* திருச்சந்தவிருத்தம் • ௬௧.
† இயற்பா-நான்காந்திருவந்தாதி • ௯௬.

...பெருந்தே... முக்கத்தைபுந் தாயுமுயர் குருவும்
...தருமகனுமாறன் விளங்கியசீர்
...நெறிதருந் தெய்வமுமாமனே ...
...இராமாநுசனென்னைக் காக்குமே."

† "எம்மைப் பார்க்கடலைத் திருநாவின் மந்தரத்தாற் கடைந்து
அமைத்துப் படித்த திருவாய்மொழி ... மையயறிந்த
கமைப் பாம்பணைப் பள்ளியானம் பிடங்காவித்தருந்த
நிலைப் ... மலர் ... குறிமுமிக்கிலுமே."

‡ "பூழியர்கோன் தென்னாடு முத்துடைத்து" என்ற முதியார் மொழியின்படி முத்துவளத்தை மிகுதியாகவுடையதும், செந்தமிழ்நாடென்று சிறப்புற்றதும், §"சேரன்பதாம் பாண்டி" என்னும் பதினெட்டுத் திருப்பதிகளையுடையதுமான பாண்டியநாட்டிலே, கங்கை யமுனை முதலிய புண்ணியநதிகள்பலவற்றினும் மகிமையுடைய தாமிரபர்ணியென்னும் பொருநையாற்றின் கரையிலே, திருநகரியென்பது ஒருதிவ்யதேசம். அத்திருக்குருகூரிலே வேளாளவருணத்திலே வம்சபரம்பரையாகத் திருமாலடிக்கே தொண்டுபூண்டொழுகுந் திறந்தகுலத்திலே திருவழுதிவளநாடரென்னும் ஸ்ரீவைஷ்ணவரது புத்திரரான அறந்தாங்கியாரென்ற சக்ரபாணியாரது தனயராகிய அச்சுதரைத் தந்தையாகவுடையவர் செந்தாமரைக்கண்ணர். அவர்பாலுதித்த செங்கண்ணராகுமாரரான பொற்காரியார், தமது புதல்வராய்த் தோன்றிய காரியாருக்குக் கலியாணஞ்செய்விக்கக்கருதி மலைநாட்டில் திருவண்பரிசாரமென்னூர் திருப்பதியிலுள்ள திருவாழ்மார்பரென்னும் பகவத்பக்தரது தனயையாரான உடையநங்கையாரை மணம்பேசி முடிக்க, பின்பு இருவர்க்கும் அவ்வூரில் வெகுசம்ப்ரமமாக விவாகமகோத்ஸவம் நடந்தேறியபின், பின்னர் இத்தம்பதிகள் திருக்குருகூருக்கு வந்து சிறப்பாகப் பல்லாண்டு இல்லறம் நடத்திவருகையில், ஒருநாள், மாமனார் வேண்டுகோளின்படி காரியார், தமது வாழ்க்கைத் துணைவியுடனே திருவண்பரிசாரத்தை யடைந்து அங்குச் சிலகாலம் வசித்திருந்தார். பிறகு தமது இல்லாளோடு தம்மூருக்கு மீண்டுவருகையில், திருக்குறுங்குடியென்னும் திருப்பதியை யடைந்து அங்கு எழுந்தருளியிருக்கிற நம்பியென்னுந் திருநாமமுடைய எம்பெருமானை வந்தித்து வாழ்த்தி 'அடியோங்களுக்கு

* இராமாநுச நூற்றந்தாதி - ௬௫.
† திருவரங்கக்கலம்பகம் - காப்பு - ௨.
‡ ஒளவையார் தனிப்பா - ௩௦.
§ நூற்றெட்டுத் திருப்பதியந்தாதி - பாயிரம் - ௪.



ஒருமகப்பேற்றை அளித்தருளவேண்டும்' என்று பிரார்த்திக்க, அவ்வெம்பெருமானும் 'நாமே வந்து பிறக்கிறோம்' என்று பெருங்கருணையோடு அர்ச்சகமுகமாகச் சொல்லியருளித் தீர்த்தம் திருமாலை பரிவட்டம் முதலியவற்றைப் பிரசாதிக்க, ...ன், இவ்வரம் பெற்று அவர் திருநகரிக்குச் சென்று வாழ்ந்திருக்கும் உடைய நங்கையார் கருப்பவதியாக, அவரது திருவயிற்றினின்று, பகவானது அம்சமும், ஸ்ரீகௌஸ்துபத்தினது அம்சமும், சேனைமுதலியாரது அம்சமுமாக, ஒருகுமாரர், வைகாசிவிசாகத்திலே *, திருவவதரித்தார்.

"இப்படி ஒருவர் மூவரது அம்சமாகவிருக்கக்கூடுமோ வென்னில்;—சக்கரவர்த்தியான அரசன் அஷ்டதிக்பாலகர்களின் அம்சங்கள் கூடிப் பிறந்தவனென்றும், இளையபெருமாளும் நம்பிமூத்தபிரானும் தனித்தனி ஆதிசேஷாம்சத்தோடு பாவதம்சமும் பொருந்தியவ ரென்றும், அநுமான் வாயுவின் அம்சத்துடன் ருத்திராம்சமு முடையவ ரென்றும் நூல்கள் கூறுவதையால், அவைபோலவே இதுவும் ஒக்குமென்க.

இப்படி பகவான் அவதாரஞ் செய்தற்குமுன்னரே, அவனுக்குப் பலவாற்றானும் அடிமைசெய்தலையே உறுதொழிலாகக்கொண்ட திருவனந்தாழ்வான், இவர்மீது வெயில் மழை முதலியன படாதிருக்குமாறு ஒருபெரியபுளியமரமாக வந்து அவதரித்திருந்தார்.

நம்பிதந்தருளினவரத்தின்படியுதித்த குமாரர் பிறந்தபொழுதே தொடங்கி அழுதல் பாலுண்ணுதல் முதலிய லோகவியாபாரமொன்று மின்றியும் வாட்டமில்லாதபரிபூர்ணராயிருக்கிற அதிசயத்தைக் கண்டு தாய்தந்தையர் எம்பெருமான்பக்கலிலே பாரத்தை வைத்திட்டுத் தாம் சிறிதுங்கவலைப்படாமல் பிறந்த பன்னிரண்டாநாளில் அத்திருநகரியிலுள்ள திருக்கோயிலுக்கு அக்குழந்தையை யெடுத்துக்கொண்டுபோய் அங்கு எழுந்தருளியிருக்கிற பொலிந்துநின்றபிரானைச் சேவிக்கப் பண்ணுவித்து, அப்பெருமானது திருமுன்பே, அந்தத்தெய்வக்குழந்தைக்கு, உலகநடைக்கு மாறாகவிருந்ததனால் 'மாறன்' என்று திருநாமஞ்சாத்தி,

* 'கலியுகம்பிறந்த நாற்பத்துமூன்றாநாளான பிரமாதிவருஷத்து வைகாசிமாதத்துப் பௌர்ணமிகூடிய வெள்ளிக்கிழமையில் கடகலக்கினத்தில்' என்று விவரங் காண்க.

அருகிலிருந்த திருப்புளியமரத்தினடியிலே * ஆணிப்பொன்னாற் செய்த வண்ணச்சிறுத்தொட்டிலிலே வளர்த்தி ஓம்பிவந்தார்கள்.

கர்ப்பத்திலிருக்கும்பொழுது ஞானமுடையனவாயிருக்கிற குழந்தைகள் பிறந்தவுடனே தன் ஸ்பரிசத்தால் அஜ்ஞானத்துக்கு உள்ளாகி அழுதல் அரற்றுதல் முதலியன செய்யும்படி பண்ணிவிடுந்தன்மையதான சடமென்னும்வாயு இவரையும் பிறந்தபொழுது தொடுதற்குவர அப்பொழுது இவர் அதனை உங்காரத்தால் ஒறுத்து ஓட்டி ஒழித்ததனால், இவர்க்கு 'சடகோபர்' என்று திருநாமமாயிற்று.

† "நஞ்சடகோபனைப்பாடினையோவென நம்பெருமாள் விஞ்சியவாதரத்தாற் கேட்ப" என்று பின்புள்ளாருங் கொண்டாடும்படி இவர் நம்பெருமாளால் 'நம்ஆழ்வார்' என்று அபிமானித்து விசேஷகடாக்ஷஞ் செய்யப்பட்டு மற்றையாழ்வார்களனைவரினும் உயர்வு பெற்றதனால், 'நம்மாழ்வார்' என்று ஒரு திருப்பெயர் பெற்றனர்.

இப்படிப்பட்ட ஆழ்வார் பதினாறுபிராயமளவும் கண்விழியாமல் மௌனத்தோடு எழுந்தருளியிருக்க, அதுநோக்கிய நங்கையாரும் அவர்கொழுநரும் 'இவர், தம்மைப்போன்ற நிலையுடையாரெவரையும் உலகத்திற் காணாமையால், யாரோடும் பேசாமலிருக்கிறார்' என்று அறியாமல், 'எம்பெருமான்விஷயத்தில் நாம் செய்த அபராதம் ஏதேனும் உண்டோ?' என்று கருதிக் கலங்கியிருந்தனர்.

அப்பொழுது பரமபதநாதனது நியமனத்தால் சேனைத்தலைவர் ஏகாந்தமாக எழுந்தருளி இவருக்குத் திருவிலச்சினை செய்து சகலமந்திரார்த்தங்களையும் உபதேசித்தருளினார்.

இப்படிபெற்ற இவர் பதினாறுகலைகளும்நிறைந்த சந்திரன்போலப் பதினாறுபருவம்நிரம்பி உறங்காப்புளிநிழலிலே பதுமாசனங்கொண்டு வீற்றிருந்து பரதத்துவத்தைத் தியானஞ்செய்து ஞானமுத்திரைகைக்கொண்டிருந்தகாலத்தில், திவ்யதேசயாத்திரையாகச் சென்றிருந்த மதுரகவியாழ்வார், இவரது வைபவத்தைக் கேட்டும் இவரது திவ்யஒளியைக்கண்டும் திருவயோத்தியினின்று புறப்பட்டுவந்து அருகில்நின்று இவர்க்கு 'உணர்ச்சியுளதோ? இலதோ?' என்று சோதிக்கும்பொருட்டு இவர்முன்னி

* பெரியாழ்வார்திருமொழி - நான்காந்திருப்பதிகம் - க.
† சடகோபரந்தாதி - பு-ம் - ௬.



லையில் ஒருசிறுகல்லை யெடுத்துப்போட, அதனின்றெழுந்த ஒலியைக் கேட்டவுடனே இவர் திருக்கண்களை விழித்துப்பார்த்தருளினார். உடனே மதுரகவிகள் 'இவர் கருவாக்கு உண்டோ? இன்றோ? அறிவோம்' என்று எண்ணி இவரைநோக்கி 'அசித்தாகியசரீரத்திலே அணுவளவினதான ஆத்மா சம்பந்தித்தால், அது எதைஅநுபவித்து எங்கு இருக்கும்?' என்னுங்கருத்தையமைத்து *'செத்தத்தின்வயிற்றில் சிறியது பிறந்தால், எத்தைத்தின்று எங்கேகிடக்கும்?' என்று வினவ, ஆழ்வார் † 'அச்சரீரத்தைச் சார்ந்த சுகதுக்கங்களை அநுபவித்துக்கொண்டு அதனையே ஆசிரயித்திருக்கும்' என்றகருத்தை யமைத்து 'அத்தைத்தின்று அங்கேகிடக்கும்' என்று விடையருளிச்செய்தார். அதுகேட்டு மதுரகவிகள் மிகமகிழ்ந்து சடகோபமுனிவரது ஞானத்தைக்கொண்டாடி இவரையடைந்து தாம்கடைத்தேறக்கருதி, இவர் திருவடிகளிலே சாஷ்டாங்கப்பிரணாமமாகத் தாளுந்தடக்கையுங்கூப்பி விழுந்து தண்டனிட்டு இவரது இணையடித்தாமரைகளைத் தியானித்தலும் திருநாமங்களை வழுத்துதலும் செய்துகொண்டு இவரை ஆசிரயித்து 'அடியேனுக்குத் தத்வஹிதபுருஷார்த்தங்களைவிளக்கியருளவேண்டும்' என்று பிரார்த்தித்தார்.

அவ்வாறிருக்கையில், ஸ்ரீவைகுண்டநாதன் ஆழ்வாரது ஞானக்கண்ணுக்குச் சேவைசாதிக்கத் திருவுளங்கொண்டவளவிலே, பெரியதிருவடியும்தமதுபக்ஷபாதந்தோன்ற முன்வந்து நிற்றலும், பெருமான் பிரியாப் பிரியமுடைய பிராட்டியுடனே கருடவாகனாரூடனாய் எழுந்தருளி எதிர்வந்துநிற்க, ‡ கருமுகில்தாமரைக்காடுபூத்து நீடிருசுடரிருபுறத்தேந்தி யேடவிழ் இருவொடும்பொலிவதோர்செம்பொற்குன்றின்மேல்வருவபோல் கலுழன்மேல்வந்து தோன்றிய அம்முகில்வண்ணனது திருமேனியழகைச் சேவித்துக் கண்கள் ஆனந்தவருவிசொரிய உடம்பு உரோமாஞ்சங்கொள்ள ஆனந்தவெள்ளத்தில் ஆழ்ந்தார். அநந்தரம் நூற்றெட்டுத்திருப்பதியெம்பெருமான்களும் அங்கு எழுந்தருளிக் காட்சிகொடுக்க, அவர்களைத் தரிசித்து அவர்கள்திவ்யகுணங்களை அநுபவித்து

* 'சிறியதின்வயிற்றிற்பெரியதுபிறந்தால்' என்றபாடமோதி, 'அணுரூபமானஜீவனிடத்து விபுரூபமானஞானவிகாசம் உண்டானால் எதைஅநுபவயோக்கியமாகக்கொண்டெங்குச்சேரும்?' என்று பொருளுரைப்பாரும் உளர்.

† 'அத்தைத்தின்று அங்கேகிடக்கும்' என்பதற்கு - 'ஜ்ஞானவாச்யமான பரப்ரஹ்மத்தை அநுபவித்து அதன்பக்கலிலே பற்றும்' என்றுபொருளுரைத்தலும் உண்டு.

‡ கம்பராமாயணம் - பாலகாண்டம் - திருவவதாரப்படலம் - கூ.

அவ்வநுபவத்தாலுண்டான்பிரீதி உள்ளடங்காமல் அதனைப்பிரபந்தமுகமாக வெளியிடக்கருதி, நான்குவேதங்களுள் இருக்கு, யசுர், அதர்வணம் என்றமூன்றுவேதங்களின் சாரார்த்தத்தைத் திருவிருத்தம், திருவாசிரியம், பெரியதிருவந்தாதி யென்ற மூன்றுபிரபந்தங்களின்மூலமாக வெளியிட்டு, அவ்வேதங்களுட்சிறந்ததும் பகவானதுசொரூபமாகவேயுள்ளதுமான சாமவேதத்தின் தத்துவப்பொருளைச் சரமப்பிரபந்தமான திருவாய்மொழியால் அருளிச்செய்து, அவற்றை மதுரகவிகளுக்கு உபதேசித்தருளினர்.

அக்காலத்தில் நித்தியசூரிகளும், சுவேதத்துவீபவாசிகளான ஸ்ரீவைஷ்ணவசிரேஷ்டர்களும் காரிமாறப்பிரானது மகிமையைக் காணும்பொருட்டு முன்வந்துசேர, அவர்களைத் தமதுபிரபந்தத்திலே *"பொலிகபொலிக" என்று வாழ்த்தியருளினர்.

தம்பக்கல் திருவுள்ளமுவந்து பொலிந்துநின்றபிரான்பிரசாதித்தருளின மகிழமலர்மாலையைத் தரித்ததனால் 'வகுளாபரணர்' என்றும், பிறமதங்களாகிய யானைகளைத் தமதுபிரபந்தங்களிற்கூறிய தத்துவார்த்தங்களால் நெருங்கடக்கி அவற்றிற்கு மாவெட்டியென்னுங்கருவிபோல இருந்ததலால் 'பராங்குசர்' என்றுந் திருநாமம்பெற்ற குருகைப்பிரான், பரப்பிரஹ்மஸ்வரூபமும் ஜீவாத்மாவினது தன்மையும் பரமாத்மாவையடையும்உபாயமும் அங்ஙனம்அடைதலின்பயனும் அச்சரணாகதிக்குப்பகையும் என்ற ஸகலவேதசாஸ்திரங்களிலும் சாரமாகச் சொல்லப்பட்ட அர்த்தபஞ்சகத்தையும், மந்திரசிரேஷ்டமான த்வயமென்னும் சரணாகதிமந்திரத்தின் அர்த்தத்தையும் பிரபந்தரூபமாக யாவரும் எளிதில் அறியத் தெரிவித்தருளி,

† "களிர்மதிச்சடையனு நான்முகக்கடவுளுந்
தளிரொளியிமையவர்தலைவனுமுதலா
யாவகையுலகமும்யாவருமகப்பட
நிலநீர்தீகால்சுடரிருவிசும்பு
மலர்சுடர்பிறவுஞ்சிறிதுடன்மயங்க
வொருபொருள்புறப்பாடின்றிமுழுவது
மகப்படக்கரந்தோராலிலைச்சேர்ந்தவெம்
பெருமாமாயனையல்ல
தொருமதெய்வமற்றுடையமோயாமே"

* திருவாய்மொழி- நாற்பத்திரண்டாந் திருப்பதிகம் - ௧.
† இயற்பா திருவாசிரியம் - எ.



என்று தமது சித்தாந்தத்தின் தத்துவத்தை நன்குவெளியிட்டுத் தமதுவாழ்நாள்முழுவதிலும் பிறிதொன்றிற் சிந்தைசெலுத்தாது பரமனையே சிந்தித்து, பரபக்திபரஜ்ஞாநபரமபக்திகளையுடையராய்க்கொண்டு, உலகநடையாட்டஞ்சற்றுந்தொடாது, முப்பத்தைந்துதிருநக்ஷத்திரம் வாழ்ந்திருந்து, அப்பால்,இமையவர் எதிர்கொள்ள, கின்னரகந்தருவாதியர் கீதம்பாட,தேவர்கள் தோத்திரஞ்செய்ய, வைகுந்தமாநகர்புக்குத் திருமாமணிமண்டபத்தில் அந்தமில்பேரின்பத்தில் அமர்ந்தனர்.

இவர், மற்றையாழ்வார்கள்போல இவ்வுலகவுணர்ச்சிநடையாடாநின்று எம்பெருமானருளால் ஒருகாலவிசேடத்தில் தத்துவஞானமுதலியனதோன்றப்பெற்று அநுபவித்தவரன்றி, திருத்துழாய் பரிமளத்தோடே அங்குரிக்குமாபோலே அவதரிக்கும்பொழுதே இயற்கையில் ஞானபக்திகளையுடையராய் அங்ஙனே என்றும் மாறுதிருந்ததனால், தலைவராகக் கூறப்படுவர். இதுவே, இவரை அவயவியாகவும், மற்றையோரை அவயவமாகவும் நிரூபித்தற்கு ஏற்ற காரணமாம்.

அங்ஙனம் உருவகப்படுத்துமிடத்து, இவருக்கு, பூதத்தாழ்வாரைச் சிரசாகவும், பொய்கைபேயாழ்வார்களைக் கண்களாகவும், பெரியாழ்வாரை முகமாகவும், திருமழிசையாழ்வாரைக் கழுத்தாகவும், குலசேகராழ்வாரையுந் திருப்பாணாழ்வாரையுங் கைகளாகவும்,தொண்டரடிப்பொடியாழ்வாரைமார்பாகவும், திருமங்கையாழ்வாரைக் கொப்பூழாகவும், மதுரகவி யாழ்வாரைப் பாதமாகவும் உரைப்பது, மரபு.

இப்படி ஒப்புயர்வற்ற இவ்வாழ்வார் எம்பெருமானது திருவடிகளுக்கு மிகவும்அந்தரங்கராக இருந்ததனால்,பெருமாளதுபாதுகை, 'ஸ்ரீசடகோபம்' என்று இவரது திருநாமத்தை யிட்டு வழங்கப்படுகிறது.

* "மிக்கவிறைநிலையுமெய்யாமுயிர்நிலையுந்
தக்கநெறியுந்தடையாகித்—தொக்கியலு
மூழ்வினையும்வாழ்வினையுமோதுங்குருகையர்கோன்
யாழினிசைவேதத்தியல்."

† "ஞானமாஞ்சிலர்க்குத்தவமாஞ்சிலர்க்குத்தருமநிறை
கனமாஞ்சிலர்க்கதற்காரணமாஞ்சிலர்க்காரணத்தி
னினமாஞ்சிலர்க்கதற்கெல்லையுமாந்தொல்லையோர்வகுள
வனமாலையெம்பெருமான்குருகூர்மன்னன்வாய்மொழியே".

* தனியன்; பட்டர் அருளிச்செய்தது.
† சடகோபரந்தாதி - ௬.

* "கதிக்குப்பதறிவெங்கானமுங்கல்லுங்கடலுமெல்லாங்
கொதிக்கத்தவஞ்செய்யுங்கொள்கையற்றேன்கொல்லிகாவல
பதிக்குங்கலைக்கவிபாடும்பெரியவர்பாதங்களே [ன்சொற்
துதிக்கும்பரமனிராமாநுசனென்னைச்சோர்விலனே."

† "இன்னமுதமூட்டுகேனிங்கேவாபைங்கிளியே
தென்னரங்கம்பாடவல்லசீர்ப்பெருமாள்—பொன்னஞ்
சிலைசேர்நுதலியர்வேள்சேரலர்கோனெங்கள்
குலசேகரனென்றேகூறு."

"வேழமுடைத்து மலைநாடு" என்ற ஔவையாரின்படி சதுரங்கபலத்து ளுயர்ந்த யானைவளத்தாற் பெருமைபெற்றதாய், "ஓர்பதின்மூன்று மலைநாடு" என்றவாறு பதின்மூன்று திவ்யதேசங்களையுடையதான சேரநாட்டிலே கோழிக்கூடு என்பது, ஒரு சிறந்த இராசநகரம். அப்பட்டணம், பெரும்பாலும் கடலே அகழியாக இயற்கையிற் சூழ்ந்து நிற்க அமைந்தது. அன்றியும், அதன்சிறப்பு அளவிடுதற்கு அருமையானது. ஒருகாலத்தில், பிரமதேவன், தன்னாற் படைக்கப்பட்ட அரியபெரிய நகரங்கள் பலவற்றினுள்ளும் உயர்ந்துநின்ற அமராவதி கோழிக்கூடு என்னும் இவ்விரண்டுநகரங்களில் மகிமைவாய்ந்தது எதுவோ?என ஐயுற்று, அவ்வையத்தை ஆராய்ச்சியால் அகற்றக் கருதி, துலாக்கோல் நாட்டி, அதன் தட்டு இரண்டனுள் ஒன்றில் தேவநாட்டிராசதானியையும், மற்றொன்றில் சேரநாட்டிராசதானியையும் அமையவைத்துத் தூக்கிப் பார்க்கையில், அவ்வமரநகரம் பெருமையின்மையால் மிக இலேசுபட்டுக் கீழ்த்திசையில் வானத்தின்மீது ஓங்கிச்சென்று செருக்குடையார்போலக் கீழ்மைபெற, இம்மனிதநகரம் பெருமைமிகுதியால் அதிககனம்பெற்று மேல்திசையில் நிலத்தில் இழிந்து நின்று வணக்கமுடையார்போல மேன்மைபெற்றதென்று கவிகள் வருணிப்பர்.

புறநகரில் கடலினலைகளால் கொழிக்கப்பட்ட ஒளிநிறைந்த இரத்தினங்களுக்கும், அந்நகரில் கடைவீதிகளில் வணிகர்களால் குவிக்கப்பட்ட விலைமிகுந்த இரத்தினங்களுக்கும் வேறுபாடுவிளங்காத அப்பட்டணத்தில் த்ருடவ்ரதனென்றுஓர் அரசனிருந்தான். அவன் மனுமுறைநெறி சிறிதும்வழுவுறாமல் மன்னுயிர்களைத் தன்னுயிரெனக் கருதிப் பாதுகாத்துக்கொண்டு பலவாண்டு இல்லறம் நடாத்திவருகையில், தன்காலத்தின்பின் அரசாளுதற்கும்

* இராமாநுச நூற்றந்தாதி-கச. † தனியன்; உடையவர் அருளிச்செய்தது.



தன்பின் நற்கதியிற் செலுத்துதற்கும் உதவத்தக்கதொருமகப்பேறற்றுத் தான் பெறாக்குறையால் தசரதன்போல மனம் மிக வருந்தி, அச்சக்கரவர்த்தி அசுவமேதம் புத்திரகாமம் என்னும் யாகங்களைச் செய்ததுபோலத் தானும் எல்லா வேள்விகளினும் மேம்பாடுடைய பகவதாராதநமாகிய பேரியாகத்தைப் புரிய, அதனை அங்கீகரித்துத் திருவுள்ளமுவந்த ஸ்ரீமந்நாராயணனது கிருபாகடாக்ஷத்தால், சக்கரவர்த்தித்திருமகனார்போல, ஒரு திருக்குமாரன் ஸ்ரீகௌஸ்துபரத்னத்தின் அம்சமாய், மாசிமாதத்தில் ஸ்ரீராமநக்ஷத்திரமான புனர்வசு நட்சத்திரத்தில்*, இவ்வரசனது பட்டமகிஷியின் திருவயிற்றில் †திருவஞ்சிக்களமென்னுந் திருப்பதியில் அவதரித்தான்.

அச்செய்தியைச்செவியுற்று அரசன் ஆநந்தக்கடலில்ஆழ்ந்து உத்தமரான அந்தணர்களுக்கும் மற்றையோர்க்கும் அநேகமான தானங்களையும் தியாகங்களையும் வரையாது செய்து அக்குழந்தைக்குச் சாதகருமம் நாமகரணம் முதலிய மங்கலச்சடங்குகளை உரியகாலங்களில் மிகுந்த சம்பிரமத்தோடு செய்யத் தொடங்கி, இப்புத்திரன் தன்குலத்துக்குச் சிரோபூஷணம்போலச் சிறப்புத்தந்து யாவராலுங் கொண்டாடத்தக்கவனெனக் கொண்டு 'குலசேகரன்' எனப் பெயரிட்டான்.

பின்பு அவ்விளமகன் நாளொருவண்ணமும் பொழுதொருமேனியுமாகச் சுக்கிலபட்சத்துச் சந்திரன்போல வளர்ந்து சௌளமும் உபநயநமும் தக்கபருவங்களில் தந்தையால் செய்விக்கப்பெற்று, ஒரு நல்லாசிரியனைத் துணைக்கொண்டு, நான்கு வேதங்களையும் ஆறுசாஸ்திரங்களையும் தநுர்வித்தையையும் மற்றும் அரசர்க்கு உரிய நீதிநூல்களையும் யானை குதிரை தேர் முதலியவற்றின் நூல்களையும் சிறிதுகாலத்திலேயே ஐயந்திரிபறமுற்றக்கற்று வல்லுநனாயினன். அம்மைந்தனது திறத்தைக் கண்டு களிப்புக்கொண்ட காவலன் உடனே இளவரசுமுடிசூட்டினன். பின்னர், குலசேகரன் தனது பராக்கிரமத்தால் பகைவெல்லலுற்று, நால்வகைச்சேனையோடும் புறப்பட்டுச்சென்று, சோ

* 'கலியுகம்பிறந்த இருபத்தெட்டாம் வருஷமான பராபவவருஷத்தில் சுக்கிலபக்ஷத்துத் துவாதசியும் வியாழக்கிழமையுங் கூடின தினத்தில்' என்று விவரம் நூல்களிற் கூறியுள்ளது.

† "[illegible]குலசேகரனாரெனவுரை[illegible]த திரு[illegible]ாலை-௩௯. 'திருவஞ்சிக்களத்[illegible]' என்றும்

முபாண்டியர்முதலிய [illegible]ளினைவரையும் புறங்கொடுத்தோடு மாறு வென்று அவர்களைக் கீழ்ப்படுத்தி அவர்கள்நாடுகளைத் தன்வசப்படுத்தி, இங்ஙனம் சேர சோழ பாண்டிய மென்னும் தமிழ்நாடு மூன்றுக்குந் தலைமைபூண்டதனால்* "கொல்லி காவலன் கூடல்நாயகன் கோழிக்கோன் குலசேகரன்" என்னும்படி பல பிருதுகளைப் பெற்று, அரசுசெய்தனன். பிறகு [illegible]விரத மகாராசா குமாரனுக்குப் பட்டாபிஷேகஞ் செய்து இராச்சிய பாரம் முழுவதையும் அம்மகனிடத்தில் ஒப்புவித்து க்ஷத்திரிய முறைப்படியே தான் தவஞ்செய்து உயர்கதிபெறும்பொருட்டுத் தவவனஞ் சென்றான்.

தந்தையின் பிரிவுக்கு ஆற்றாது வருந்தி மந்திரிகள் தேற்றத் தேறிய மன்னவகுமாரன் நடுவுநிலைமைதவறாது சிறியவற்றைப் பெரியவை நலியாதபடி எதிரின்றி அரசாண்டு ஒரு பெண்கள்நாயகத்தை மணந்து, திருமாலின் தேவிமார் மூவருள் நீளாதேவியின் அம்சமான ஒருபுத்திரியையும் த்ருடவ்ரதனென்றுபிதாமகன்பெயரையே பெற்ற ஒருபுத்திரனையும் பெற்றுக் கவலையற்றிருக்கையில், 'இம்மை மறுமை வீடு என்னும் மும்மையின்பங்களையுந் தந்து முதலும் முடிவும் அற்ற தொரு முழுமுதற்கடவுள் யாரோ?' என்று பரதத்துவவிசாரம் பண்ணலுற்று அநேக பண்டிதர்களுடனே சுருதி ஸ்மிருதி இதிகாசம் புராணம் முதலிய சகலகலைகளையும் பரிசோதித்துப் பார்த்துவர, அதுவேசமயமென்று அவ்வரசனை ஆட்கொண்டு உய்விக்கக் கருதிய கருணாநிதியான கமலக்கண்ணனது திருவருள்நோக்கால், ஸ்ரீமகாவிஷ்ணுவே சிறந்ததெய்வமென்கிற சத்தியமானசித்தாந்தம் அவனது ஞானக்கண்ணுக்குத் தெள்ளிதிற் புலப்பட்டது.

அக்காலத்தில் பரமபதநாதனது கட்டளையால் சேனைமுதலியார் ஸ்ரீவைகுண்டத்தினின்று பூலோகத்துக்கு வந்து இவருக்குப் பஞ்சஸம்ஸ்காரபூர்வகமாக அறியவேண்டியதத்துவப்பொருள்களனைத்தையும் விளங்க உபதேசித்தருளி மீண்டுசென்றனர்.

இங்ஙனம் [illegible]பெருமானை எல்லாவுயிர்களுக்குந் தலைவனாக [illegible] அநந்தகல்யாணகுணகணங்களாகிய பெருங்கடலில் லாழ்ந்து நெஞ்சுருகிஈடுபட்ட இக்குலசேகராழ்வார், திருமாலின் விபவாவதாரங்களில் ஸ்ரீராமாவதார கிருஷ்ணாவதாரங்களினிட[illegible], அர்ச்சாவதாரத்[illegible]

* பெருமாள் திருமொழி - இரண்[illegible]



டம் முதலிய சில திவ்யதேசத்து [illegible]பெருமான்களிடத்திலும் மிகுந்த பக்திப்பெருங்காதல்கொண்டும், ஸ்ரீராமாயணகாலக்ஷேபத்தையே எப்பொழுதும் தமக்குப்பொழுதுபோக்காகப்பெற்றும், ஸ்ரீவைஷ்ணவர்களைக் கண்டால் எதிர்கொண்டு அழைத்துவந்து விசேஷமாக உபசரித்தும், தமது திருமாளிகைத் திருவாராதநத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீராமசந்திரமூர்த்திக்கும் ஸ்ரீராஜகோபாலஸ்வாமிக்கும் [illegible]ங்களைக் குறைவறச் செய்துகொண்டும் இருந்தார்.

இவர் ஒருநாள் ஸ்ரீராமாயணகாலக்ஷேபஞ்செய்துவருகையில், ஆரணியகாண்டத்தில் 'ராவணன்தங்கையான சூர்ப்பணகை மூக்கறுப்புண்டு தனக்குத்துணையாக ராவணனால் நியமிக்கப்பட்டுச் சநஸ்தாநத்திலிருந்த கரதூஷணாதியரிடத்தில் போய் முறையிட்டதையறிந்து அவர்கள் அதியுக்கிரமாக எண்ணிறந்தசேனைகளைத் திரட்டிக்கொண்டு படையெடுத்துவந்த சமயத்தில், பெருமாள் பிராட்டிக்குக்காவலாகவிருக்கும்படி இளையபெருமாளைப் பர்ணசாலையிலே நிறுத்திவிட்டுத் தமக்கு ஒருவருந் துணையின்றித் தாம்தனியே அவ்வரக்கர்களனைவரோடும்போருக்குச்சென்றுநின்றார்' என்று பௌராணிகர்சொல்லக் கேட்டவுடனே, ஸ்ரீராமசரித்திரத்தில்தமக்குஉள்ளமிகுந்தபிரீதிவிசேஷத்தால்,வெகுகாலத்துக்குமுன்புநடந்தஅந்தச்சரித்திரத்தை அன்றுதான்நடக்கிறதாக நினைத்து,'இப்படிப்பட்ட சங்கடகாலத்தில் தம்மாலியன்றஉதவியைச்செய்யாதுவிடுவதுசிறிதும்தக்கதன்று' என்றுதுணிந்து, தமது சேனைகளையெல்லாம் போர்க்குச் சித்தமாய் முன்செல்லும்படி பணித்து, தாமும் ஜநஸ்தானத்தை நோக்கிப் புறப்பட்டார். அத்தருணத்தில் யாவரும் இன்னதென்றறியாது திடுக்கிட்டிருக்கையில், அதிநிபுணரான ஆசிரியர், 'தாசரதி தாமொருவராகவே நிர்ப்பயமாகப்பிரபலயுத்தஞ்செய்து சத்துருக்கள்[illegible]னைபேரையுஞ்சயித்துத் தமது ஆச்சிரமத்துக்கு மீண்டுவர, அவரை வைதேகி களிப்போடு ஆலிங்கநஞ்செய்து அவரது இளைப்பைத் தணித்தாள்' என்றசெய்தியை எடுத்துக் கூற, அதுகேட்டு ஆழ்வார் ஆநந்தமடைந்து சேனையைத்திருப்பிக்கொண்டு தாமும் பிரயாணத்தை நிறுத்தினார்.

அதுமுதல் இராமாயணங்கூறுபவர் எந்தெந்தப்பாகத்தில் இராமனது [illegible]ப்ரஸ்தாபம் வருகிறதோ அந்த[illegible]பாகத்தையே வளர்த்துரைத்தும், அரக்கர்ஜியோரால் இரா[illegible]

வுக்கு அலக்கண்நேரிடுங்காலங்களையெல்லாம் சகித்துக்கொண்டு வந்தனர். இப்படியிருக்கையில், ஒருநாள், அந்தக் குரு வேறொரு காரியநிமித்தம் தாம் அவசியமாகப் பிறிதோரிடஞ் செல்லவேண்டி வந்ததால் காலக்ஷேபஞ்சொல்லுதற்குத் தாம் வாராமல் தமது குமாரரை அனுப்பினார்.

அவர் சேரர்பிரானுடைய இயல்பினை யுணராமல், இராவணன் சீதையையெடுத்துப் போன விசனகரமான செய்தியை உபந்யஸிக்க, அது செவிப்பட்டவுடனே குலசேகரர் மனங்கொதித்து 'நான் இப்பொழுதே வெகுவிரைவாகச் சென்று கடல் கடந்து இலங்கையைத் தூளிபடுத்தி இராக்ஷதராஜனைப் பந்துமித்திரரோடு போரில்தொலைத்து எனது அன்னையை மீட்டுவருவேன்' என்றுசொல்லி யெழுந்து ஆயுதங்களையெடுத்துக்கொண்டு சேனா சமூகத்தோடு இலங்கையைநோக்கிப் பிரஸ்தானமாயினர். அப்பொழுது, விண்ணுலகத்தாரும் மண்ணுலகத்தாரும் இதனைக் கண்டுபெருவியப்புக்கொண்டு 'இதன்முடிவு என்னாகுமோ?' என்று பெருங்கவலையோடு பார்த்துநின்றனர். ஆழ்வார் அம்புதியை நீந்தியேகடக்க நிச்சயித்துக் கழுத்தளவினதான தண்ணீரில் இறங்குகின்ற சமயத்தில், இவரது ஆராத அன்புக்கு இலக்காகிய ஸ்ரீராமமூர்த்தி, இவரைத் தடுத்தற்கு வேறுவகையொன்றும் இல்லாமையைக் கருதி, தாம் நேரிலே சார்ங்கியைக் கைப்பற்றிக்கொண்டு இலக்குமணனோடு எதிரில்வந்துநின்று, தரிசனந்தந்து தமது போர்வெற்றியையும், சத்ருவிநாசத்தையும், தேவியை மீட்டதையுந் தெளிவாகக் கூறி, பிறவிப்பெருங்கடலினின்று கரையேற்றுதற்கு ஓர்அறிகுறியாகுமாறு இவரைக் கரையேற்றி நகரினுட் செலுத்திவிட்டு, அநந்தரம் அந்தர்த்தானமாயினர்.

இப்படி பகவத்கதாசிரவணத்திலே அதியாதரத்தையுடைய சேரலரேறு, புராணங்களிற் கூறப்பட்ட ஸ்ரீரங்கமாகாத்மியத்தைக் கேட்டு, திருவரங்கத்தை நோக்கிப் பிரயாணப்பட்டுச் செல்லுகையும் அத்திருப்பதிக்குச் செல்லவேண்டுமென்ற விருப்பமும் கலக்ஷணங்களையுந் தொலைக்குமென்றதன்மையையும், கோயிலில் நித்யவாசஞ்செய்தலும் நம்பெருமாளைக் கண்ணாரக்கண்டுகளித்தலும் நிரதிசயப்பேரின்பத்தைத் தவறாது தருமென்ற தகைமையையு முணர்ந்து அங்குப் போதற்கு மிகுந்[illegible]ராய் பரிவாரங்களோடு புறப்படுபவரானார்.



இவர் இவ்விடத்தைவிட்டு அவ்விடத்துச்சென்று பெரியபெருமாளைச் சேவிப்பாராயின் பின்பு இங்குமீளுதலரிதென்றும், அங்குத்தானே நிரந்தரவாசஞ் செய்யப் பிரியப்பட்டுவிடுவரென்றுங் கருதி அவ்யாத்திரையைத்தடுத்தற்கு ஆலோசித்து மந்திரிகள் ஒருபாயஞ் செய்தார்கள்; அது யாதெனில்;—இவர் ஸ்ரீவைஷ்ணவாராதநத்தில் வேணவாவுள்ளவராதலால், அநேகம் பாகவதோத்தமர்களை அமைச்சர்கள் வரவழைத்து இவர்முன்பாகச் செலுத்த, தொல்லிநாவலர் 'அறுபதினாயிரம் வருஷகாலம் விஷ்ணுவை ஆராதநஞ்செய்த பலமும், ஒருகால் வைஷ்ணவர்களைப் பூஜித்த பேற்றுக்கு ஈடாகாது' என்ற சாஸ்திரமுறைமையை யறிந்தவராதலால், ஸ்ரீரங்கயாத்திரையை நிறுத்தி, சோடசோபசாரத்தோடு திருமாலடியார்களைப் பல்வாறு உபசரித்தார். இவ்வாறு இவர் திவ்யதேசயாத்திரை தொடங்கும்பொழுதெல்லாம் அமாத்தியர்கள் மெய்யடியார்களைக் கொண்டுவிட்டுத் தடுத்து வந்தனர். ஆழ்வார் அவர்களை அகமகிழ்ந்த அன்போடு கொண்டாடி வருகையில், அந்நாடெங்கும் ஸ்ரீவைஷ்ணவசமிருத்தி மிகுந்தது.

அரண்மனையினுள்ளும் ஆலோசனைச்சபாமண்டபத்திலும் இன்னும் அந்தரங்கமான இடங்களிலும் பாகவதர்கள், எக்காலத்துஞ் சிறிதுந்தடையின்றிப் போக்குவரவு செய்தலையும் தமது அரசன்பக்கல் இவர்கள் வரம்பிகந்தசுவாதந்திரியம் பாராட்டுதலையுங் கண்டு பொறாமைகொண்ட மந்திரிமார், இவர்களிடத்து மன்னர்பிரானுக்கு மாச்சரியமுண்டாக்கக் கருதினர். இவ்வாறிருக்கையில், அனைவருங்கொண்டாடத்தக்க ஸ்ரீராமநவமி மகோத்சவம் வந்தது. அதன்பொருட்டு, தோரணங்கட்டியும், துவசங்களைக் கட்டியும், வாழைமரங்களை நிறுத்தியும் நகர்முழுவதும் அலங்கரிக்கப்பட்டது. பின்பு திருக்கோயிலில் அர்ச்சகர், இராமமூர்த்திக்கும் மற்றும் அர்ச்சாவிக்கிரகரூபமாகவுள்ள எம்பெருமான்களுக்கும் திருமஞ்சனஞ்செய்தற்பொருட்டு அவர்களது ஆரம் கேயூரம் கிரீடம் நூபுரம் முதலிய திவ்யாபரணங்களையெல்லாங் களைந்துவைத்தனர். அநந்தரம் புருஷசூக்தம் ஸ்ரீசூக்தம் பூசூக்தம் முதலிய வேதகோஷத்தோடும் பேரிமுதலிய வாத்தியகோஷத்தோடும் திருமஞ்சனம் நடந்தேறிற்று. அச்சமயத்தில் யாவரும் சுவாமிசேவையிலே கருத்தூன்றி யிருக்கையில், மந்திரிகள் ஒருநவரத்தினவாரத்தைத் திருவாபரணக்குவையிலிருந்து எடுத்து ஒளித்துவைத்திட்டனர். பின்பு பெருமானு

க்கு அலங்காரஞ்செய்யும்பொழுது அவ்வணிகலத்தைக்காணுமல் அர்ச்சகர் கவலைப்பட்டு அரசரிடத்து அறிவிக்க, அதுகேட்டு அரசர் மனங்கலங்கி மந்திரிகளையழைப்பித்து 'கள்வனை விரைவில்தேடிப்பிடிமின்' என்று கட்டளையிட்டார். அதுவே வியாஜமாக அவர்கள் 'இதுகொண்டுபோனவர் வைணவரேயன்றி வேறொருவருமல்லர்; இவர்களே எப்பொழுதும் இங்குளெங்கும் தட்டின்றித் திரிகின்றவர்; பிறனொருவர் புதிதாகவந்து அஞ்சாது இத்தொழில் செய்யார்' என்று பாகவதர்மீது அபவாதங்கூறினர். அராசம்புக்கதுபோல அக்கடுஞ்சொல் செவிபுகப்பெற்ற ஆழ்வார் அரிபக்தர்களது நற்குணநன்னடைகளை நன்றாக அறிந்தவராதலால், அவர்கள்மேல் சற்றும் சங்கைகொள்ளாமல் அவர்மேற் குற்றங்கூறின தம்மமைச்சரையே கடிந்து 'பரவஸ்துவிலே பக்திபண்ணுமவர்கள் பரவஸ்துவைக் கொள்வரோ? பரனன்பரல்லாதவர்களிறே பிறர்பொருள்தன்னை நம்புவது; ஆதலின் அவ்வைஷ்ணவர்கள் ஒருபோதும் இத்தகைய கடுந்தொழிலை நினைத்தலுஞ் செய்யார்; இது திண்ணம்; இதை உங்களுக்கு உறுதிப்படுத்தும்பொருட்டு, யானே பிரமாணங்காட்டுவேன்' என்றுசொல்லிப் பாம்பையுள்ளிட்டதொருகுடத்தைச் சபைமுன்பே தருவித்து 'ஸ்ரீவைஷ்ணவர் மனமொழிமெய் யென்னுந் திரிகரணத்தாலும் தூயராயின், இவ்வரவம் என்னை யாதொன்றுஞ் செய்யாது; இன்மேல் இந்நாகம் இப்பொழுதே என்னைத் தீண்டிக் கொல்லுக' என்று சூள்சொல்லி அக்குடத்தினுள் கையிட்டனர். அப்பொழுது, சத்தியத்துக்குக் கட்டுப்படுந்தன்மையதான சர்ப்பம் சிறிதுகொடுமையும் புரியாது தணிந்திருந்தது. அதுநோக்கி, அமைச்சர்கள், தமது சூழ்ச்சி கிஞ்சித்தும்பலியாதுவிட்டதேயென்று வருத்தமும், தேர்ந்தஆராய்ச்சியின்றி இங்ஙனந்தவறுசெய்துவிட்டனமேயென்று கழிவிரக்கமும், இனிநமதுகதி என்னாகுமோவென்று பேரச்சமுங் கொண்டு, நடுநடுங்கி, தாம்கவர்ந்திட்ட அவ்வாரத்தை உடனேகொணர்ந்து சமர்ப்பித்து, தாம் அறியாதுசெய்த பெரும்பிழையைப் பொறுத்தருளுமாறுபிரார்த்தித்து ஆழ்வாரது திருவடித்தாமரைகளைச் சரணமடைந்தார்கள். சரணாகதவத்சலரான இராமபிரான் காகாசுரனது குற்றத்தைப் பொறுத்தருளினதுபோல, அப்பிரானது சிறந்தஅடியவரான ஆழ்வார் அமைச்சர்கள்பிழையைப் பொறுத்து, 'இனி நீவிர் பாகவதர்களுக்கு எப்பொழுதும் பணிவிடைசெய்



வதே, நுமது குற்றந் தீருமாறு' என்றுசொல்லிவிட, அவர்கள் அங்ஙனமே அரசனாணையைச் சிரமேல்தாங்கி அடியவர்க்கடியாராய்க் குறிப்பறிந்து குற்றேவல்புரிந்து பேறுபெற்றனர்.

பின்பு குலசேகரர் பொய்ம்மைக்கிடமான அரசாட்சியில் இருத்தற்கு இஷ்டப்படாமல் தமது குமாரனை திருடவிரதனுக்குப் பட்டாபிஷேகஞ்செய்துவைத்துத் தாம் திருவரங்கம்பெரியகோயிலுக்குச் சென்று நம்பெருமாளைச்சேவித்து, அவ்வழகியமணவாளனையே தனக்குஉரியமணவாளனாகக்கருதிய தந்திருமகளை அவ்வெம்பெருமானுக்கே உரியபொருளாகக் கொடுத்துப் பலவகைக்கைங்கரியங்களை விதிமுறைவழுவாது நித்தலுஞ் செய்துகொண்டு அத்திருப்பதியில் சிலகாலம் இருந்தனர்.

பிறகு மற்றுஞ்சிலதிவ்யதேசங்களுக்கும் யாத்திரைசெய்யவெண்ணி, திருவேங்கடம், திருவயோத்தி, திருச்சித்திரகூடம், திருக்கண்ணபுரம், திருமாலிருஞ்சோலை, திருவித்துவக்கோடு என்னுந் திருப்பதிகளுக்குச் சென்று அங்கங்கு எழுந்தருளியிருக்கின்ற பெருமானைக் கண்ணாரக்கண்டுசேவித்து வாயாரவாழ்த்தி அநுபவித்து முகுந்தமாலையென்னும் வடமொழிப்பிரபந்தத்தையும், பெருமாள்திருமொழி யென்னுந் தமிழ்த்திவ்யப்பிரபந்தத்தையும் அருளிச்செய்து, நம்மாழ்வாரது திருவவதாரஸ்தலமான திருக்குருகூருக்கு அருகிலுள்ள பிரமதேசமென்னும் ஊரையடைந்து, அங்கு ஸ்ரீராஜகோபாலஸ்வாமிசந்நிதியில் சிலகாலம் திருத்தொண்டுசெய்துகொண்டிருந்து தமது அறுபத்தேழாவது பிராயத்தில் பரமபதமடைந்து அழிவில்பேரின்பத்தை அநுபவிப்பாராயினர்.

* "அரசமர்ந்தானடிசூடுமரசையல்லா லரசாக வெண்ணேன் மற்றரசுதானே" என்றுகோவிந்தபாதாரவிந்தத்தைச் சிரமேற்கொள்ளுதலையே கிரீடாபிஷேகமாகப் பாவிக்கிற இவர், பெரியபெருமானுடைய இன்பதுன்பங்களைத் தமது சுகதுக்கங்களாகக் கருதியதனால் இவர்க்கு 'பெருமாள்' என்றும் ஒருபெயர் வழங்கும்.

† "ஆரங்கெடப்பரனன்பர்கொள்ளாரென் றவர்களுக்கே
வாரங்கொடுகுடப்பாம்பிற்கையிட்டவன் மாற்றலரை
வீரங்கெடுத்தசெங்கோற்கொல்லிகாவலன் வில்லவர்கோன்
சேரன்குலசேகரன்முடிவேந்தர்சிகாமணியே."

* பெருமாள்திருமொழி - பத்தாந்திருப்பதிகம் - ௭.
† தனியன்; மணக்கால்நம்பி அருளிச்செய்தது.

"இருளிரியச்சுடர்மணிகளிமைக்குநெற்றியினத்துத்தியணிபணமாயிரங்களார்ந்த, அரவரசப்பெருஞ்சோதியனந்தனென்னுமணிவிளங்குமுயர்வெள்ளையணையைமேவித், திருவரங்கப்பெருநகருட்டெண்ணீர்ப்பொன்னி திரைக்கையாலடிவருடப் பள்ளிகொள்ளுங், கருமணியைக்கோமளத்தைக்கண்டுகொண்டென்கண்ணிணைகளென்றுகொலோகளிக்குநாளே"

என்றுதொடங்கி இவர்பாடியருளிய திருப்பதிகத்தால் இவருக்கு ஸ்ரீரங்கநாதசேவையி லிருந்த அதியாதரமும்,

"தேட்டருந்திறற்றேனினைத்தென்னரங்கனைத்திருமாதுவாழ்
வாட்டமில்வனமாலைமார்வனைவாழ்த்திமால்கொள்சிந்தையரா
யாட்டமேவியலர்ந்தழைத்தயர்வெய்துமெய்யடியார்கட
மீட்டங்கண்டிடக்கூடுமேலதுகாணுங்கண்பயனாவதே"

என்ற திருமொழியால் இவரது ஸ்ரீவைஷ்ணவப்பிரேமையும்,

"செடியாயவல்வினைகள்தீர்க்குந்திருமாலே
நெடியானேவேங்கடவாநின்கோயிலின்வாயி
லடியாரும்வானவருமரம்பையருங்கிடந்தியங்கும்
படியாய்க்கிடந்துன்பவளவாய்காண்பேனே" என்றும்,

"செம்பவளவாயான்திருவேங்கடமென்னும்
மெம்பெருமான்பொன்மலைமேலேதேனுமாவேனே" என்றும்பாடியவற்றால், திருவேங்கடமுடையான்திருவடிகளில் இவர்க்குப் பிறந்த அபிருசியும்,

"தருதுயரந்தடாயேலுன்சரணல்லாற்சரணில்லை
விரைகுழுவுமலர்ப்பொழில்சூழ்விற்றுவக்கோட்டம்மானே
யரிசினத்தாலீன்றதாயகற்றிடினுமற்றவள்ட
னருணினைந்தேயழுங்குழவியதுவேபோன்றிருந்தேனே"

என்றுதொடங்கிப்பாடியபாசுரங்களால் இவர் திருவித்துவக்கோட்டெம்பெருமானைச் சரணமடைந்த தன்மையும்,

"முழுதும்வெண்ணெயளைந்துதொட்டுண்ணுமுகிழிளஞ்சிறுத்தாமரைக்கையு, மெழில்கொள்தாம்புகொண்டடிப்பதற்கெள்குநிலையும்வெண்டயிர்தோய்ந்தசெவ்வாயு, மழுகையுமஞ்சிநோக்குமந்நோக்குமணிகொள்செஞ்சிறுவாய்நெளிப்பதுவுந், தொழுகையுமிவைகண்டவசோதைதொல்லையின்பத்திறுதிகண்டாளே"

என்ற திருவிருத்தத்தால் இவரது ஸ்ரீக்ருஷ்ணபக்தியும்,

"அம்பொனெடுமணிமாடவயோத்தியெய்தியரசெய்தியகத்தியன்வாய்த்தான்முன்கொன்றான், றன்பெருந்தொல்கதைகேட்டுமிதிலைச்செல்விபுலகுய்யத்திருவயிறுவாய்த்தமக்கள், செம்பவளத்திரள்வாய்த்தன்சரிதைகேட்டான்றில்லைநகர்த்திருச்சித்ரகூடந்தன்னு, ளெம்பெருமான்றன்சரிதைசெவியாற்கண்ணாற்பருகுவோமின்னமுதமதியோமன்றே"

என்றதிவ்வியகவிகளால் இவரது ஸ்ரீராமப்பிரதிபத்தியும் நன்குவிளங்கும்; பிறவும் இங்ஙனமே காண்க.

---



*"சோராதகாதற்பெருஞ்சுழிப்பாற்றொல்லைமாலையொன்றும்
பாராதவனைப்பல்லாண்டென்றுகாப்பிடும்பான்மையன்றாள்
பேராதவுள்ளத்திராமாநுசன்றன்பிறங்கியசீர்
சாராமனிசரைச்சேரேனெனக்கென்னதாழ்வினியே."

† "பாண்டியன்கொண்டாடப்பட்டர்பிரான்வந்தானென்
றீண்டியசங்கமெடுத்தூத—வேண்டிய
வேதங்களோதிவிரைந்துகிழியறுத்தான்
பாதங்கள்யாமுடையபற்று."

தமிழ்முனிவராகிய அகத்தியருக்கும் தமிழைவளர்க்கிற அரசர்களுக்கும் சங்கப்புலவர்களுக்கும் உறைவிடமாய் உயர்வுபெறும் பாண்டியநாட்டிலே, ஸ்ரீவில்லிபுத்தூரிலே, பிரதமவருணத்திலே, வேயர்குலமென்ற சிறந்தகுடியிலே முகுந்தரென்னும் முன்குடுமிப்பிராமணோத்தமருடைய பத்தினியான பதுமையென்பாளது வயிற்றிலே, வடபத்திரசாயியான பெருமானது அருளால், வேதவடிவமான பெரியதிருவடியென்கிற கருடாழ்வானது அம்சமாய், ஒருவர், ஆனிமாசத்தில் சுவாதிநக்ஷத்திரத்திலே‡, அவதரித்தார். அவர், இளமைதொட்டு எப்பொழுதும் தமது சித்தத்தை விஷ்ணுவினிடத்திலே செலுத்தி § "மார்வமென்பதோர்கோயிலமைத்து மாதவனென்னுந்தெய்வத்தைநாட்டி, யார்வமென்பதோர்பூவிடவல்லார்க்கரவதண்டத்திலுய்யலுமாமே" என்றபடி அவ்வெம்பெருமானை மனத்திலே நிலைநிறுத்தித் தியானித்துவந்ததனால், விஷ்ணுசித்தரென்று பெயர்பெற்றனர். அவருக்குச் சேனைமுதலியார், வைகுண்டத்தினின்றுவந்து பஞ்சஸம்ஸ்காரங்களைப் புரிந்து சென்றருளினார். அதனால் அதிபரிசுத்தரான அவர், திருமாலுக்குத் தினந்தோறும் ஏதேனுந் திருத்தொண்டுசெய்யக்கருதி, எக்கைங்கரியம் அத்தேவதேவனது திருவுள்ளத்துக்குப் பாங்காகுமென்று நன்குஆலோசிப்பவரானார். அங்ஙனம் ஆராய்கையில், அவரது மனத்துக்கு, பகவானது கிருஷ்ணாவதாரம் உகந்தவிஷயமாயிற்று. பிரமன் முதலிய தேவர்களுக்கும் சநகர்முதலிய யோகிகளுக்கும் [illegible]கரிய இந்திரைகொழுநன் வசுதேவரு

* இராமாநுசநூற்றந்தாதி - கரு.
† தனியன்; பட்டரருளிச்செய்தது.
‡ 'கலி[illegible]த்தின்தொடக்கத்தேழாவதானகுரோத[illegible]ஸம்வத்ஸரத்தில்ஆனிமாதத்தில்[illegible]ஏகாதசிகூடினஞாயிற்று[illegible]கிழமையில்' என்றுவிவரம் விளங்கும்.
§ பெரியாழ்வார்திருமொழி - முப்பத்தொன்றாந்திருப்பதிகம் - ௩.

மாறனாய்த் தோன்றித் திருவாய்ப்பாடியில் யாவர்க்கும் எளியனாய் வளர்ந்த வரலாற்றைச் சிந்தித்து அதிலே ஈடுபட்ட அவர், கம்சனைக் கொல்லும்பொருட்டுக் கண்ணபிரான் பலராமனுடனே கோ[illegible]த்தினின்று மதுரைக்குச் சென்றபொழுது கம்சனுக்குப் பணிசெய்துவருகிற ஒருபூமாலைக்காரனுடைய கிருகத்துக்கு எழுந்தருள அந்தமாலாகாரன் அவர்களைக் கண்டுகளித்து நமஸ்கரித்து அவர்கள்வேண்டியபடியே அநேகமலர்களைக் கொணர்ந்து சமர்ப்பித்து அவர்களநுக்கிரகத்துக்குப்பாத்திரனாய் அவர்களளித்த வரங்களால் நீங்காச்செல்வமும் நோயின்மையும் தீர்க்காயுசும் சந்ததிவிருத்தியும் தருமசிந்தையும் முதலிய இம்மைப்பேறுகளோடு வீடுபேற்றையும் பெற்ற செய்தியில், கருத்தூன்றி, பூவை வண்ணனுக்குப் புஷ்பஞ்சமர்ப்பித்தலே சிறந்த அடிமைத்தொழிலென்று அறுதியிட்டு, இந்திரலோகத்து நந்தனவனமும் நாணும்படியானதொரு திருநந்தவனத்தைப் பெரிதாக அமைத்து, அதிலிருந்து, பிரதிதினமும், பரிமளமுள்ள பலவகைப் பூக்களாலும் நறுமணமுள்ள திருத்துழாயினாலும் அழகிதாக அநேகமாலைகளைக் கட்டியெடுத்துக்கொண்டு போய், அத்திருப்பதியிலெழுந்தருளியிருக்கிற வடபெருங்கோயிலுடையானுக்குச் [illegible]த்தார்.

இங்ஙனம் நிகழ்கையில், அந்நாட்டில் மதுரைநகரத்தில் அரசாண்டுவருகிற ஸ்ரீவல்லபதேவனென்னும் வழுதிவேந்தன் வழக்கப்படி ஒருநாள் நள்ளிரவில் நகரசோதனைசெய்து வருகிற பொழுது, ஒருவீட்டுத்தெருத்திண்ணையில் தனியேபடுத்திருந்த ஒருவனைக் கண்டு உடனே அவனையெழுப்பி யாரென்று விசாரித்து, கங்காஸ்நாநஞ்செய்து சேதுஸ்நாநத்தின்பொருட்டு வழிச்செல்கிற ஒரு தீர்த்தயாத்திரைப்பிராமணனென்று அவன் சொல்ல அறிந்தவளவிலே, அவனை வணங்கி 'உனக்கு ஏதேனும் நீதி தெரிந்ததுண்டாயின் சொல்லுவாய்' என்று கூற, அது கேட்டுஅவன் "மழைக்காலத்துக்கு வேண்டுபவற்று[illegible]ற்றை எட்டு மாதங்களிலும், இரவுக்கு [illegible]வனவற்றுக்குப் பகலிலும், [illegible]மைக்கு வேண்டுபவற்றுக்கு இளமையிலும், மறுமைக்கு வேண்[illegible]பவற்றுக்கு இம்மையிலும் ஒருவ[illegible] கடவன்" என்னுங் கருத்துள்ள சுலோகத்[illegible]தச் சொன்னான். அதுகேட்டவுடனே அ[illegible]ன்பொருளையறிந்த அ[illegible]ள இம்மையில் தனக்கு ஒன்றுங்குறைவி[illegible]ாமையால் மறுமைப்பேற்றுக்கு மு



யற்சி செய்யக்கருதி அரண்மனையை யடைந்து இராமுழுதும் அதுவேசிந்தையாக இருந்து பொழுது விடிந்தவுடனே தன் புரோகிதரான செல்வநம்பியை வரவழைத்து 'சதுர்விதபுருஷார்த்தத்தையுந் தரவல்ல பரம்பொருள் இன்னதென்[illegible]ணர்தற்கு உபாயம் என்ன?' என்றுகேட்க, அவன் 'வித்[illegible]வான்களைச் சபைசேர்த்து அவர்களைக்கொண்டு விசாரம்பண்ணுவித்து வேதாந்தசித்தாந்தமான பரதத்துவத்தை நிர்ணயம்பண்ணவேண்டும்' என்று கூறநிற்க, மன்னவன் அதனை அங்கீகரித்து வெகு செல்வத்தை ஒருகிழியில்முடிந்து, அப்பொற்கிழியை வித்தியாசுல்கமாகச் சபாமண்டபத்தின்முன்னிலையில் உயரத்தூக்குவித்து 'பரப்பிரஹ்மசொரூபத்தை வைதிகப்பிரமாணங்களால் தேற்றிவிளக்குபவரே இப்பெரும்பொருளைப் பெறுதற்குரியவர்' என்று முரசறைவித்தும் திருமுகமனுப்பியும் பிரசுரப்படுத்தினவளவிலே, அத்தேசத்திலும் மற்றும்அநேகதேசங்களிலுமிருந்து பலமதங்களைச்சேர்ந்த பண்டிதர்பலர் ஒருங்குவந்து திரண்டனர்.

அச்சமயத்தில், ஸ்ரீவில்லிபுத்தூரெம்பெருமான் விஷ்ணுசித்தரைக்கொண்டு வேதாந்தசித்தமான பரதத்துவத்தைப் பிரகாசிப்பித்து உலகத்தை வாழ்விக்கத் திருவுள்ளங்கொண்டு, அவ்வடியவரது கனவிலே எழுந்தருளி 'நீ விரைவில் மதுரைக்குச் சென்று செழியனவைக்களஞ்சேர்ந்து திருமாலே மெய்ம்மைப்பொருளென்று நிலைநிறுத்திக் கிழியையறுத்துக்கொண்டுவா' என்று அருளிச்செய்ய, அதற்கு அவர் 'சாஸ்திரஞானமில்லாத அடியேன் எங்ஙனம் இதுசெய்யவல்லேன்?' என்றுஇயம்ப, எம்பிரான் 'அதுபற்றிய கவலை உனக்கு என்? அந்தப்பாரம் எம்முடையதன்றோ?' என்று பணித்தருளி மறைந்தான்.

அநந்தரம் விஷ்ணுசித்தர் வைகறையிலே துயிலெழுந்து கனாநிகழ்ச்சியை நினைந்து வியந்து அக்கனவை நனவாகவேகொண்டு விசுவசித்துக் கடவுள்கட்டளைப்படி செய்யத்துணிந்து விரைந்து புறப்பட்டுப் புலவர்கோட்டியில் புக்கவளவிலே, அவரைக் கண்டபாவலருக்கும் புரோகிதனுக்கும் அவரிடத்தில் ஏதோவிசேஷமுளதென்று ஒருபெருமதிப்புத் தன்னடையிலே தோன்றியதனால், அவர்கள் உடனேயெழுந்து எதிர்கொண்டு வந்தனவழிபாடுகளால் அதிகமாக ஆதரித்துப் பொன்மயமானசிங்காசனத்திலே அவரை வீற்றிருக்கச்செய்தனர். இப்படி அறிஞர்கு[illegible]த்தினிடை

யிலே ஒருவரைக் காரணமின்றி மிகுதியாக உபசரித்ததைக் கண்ட மற்றைக்கற்றவர்களனைவரும் அசூயாபரராய் 'அளவிறந்த வேதசாஸ்திரங்களைப் பயின்று தேர்ந்த எங்களுக்கெல்லாம் ஓர் அசௌரவ[illegible]ருமாறு எங்கள்முன்னிலையில் யாதொருதேர்ச்சியுமில்லாத இவனைச் சற்கரித்தது சிறிதுந் தகுதியன்று' என்று கோபத்தோடு கூறுகிற்கையில், செல்வநம்பி அவர்களையடக்கி விஷ்ணுசித்தரை நோக்கி 'தேவரீர், யாவரும் கேட்டுவிளங்குமாறு இப்பொழுது பரதத்துவத்தை நிச்சயித்து அருளிச்செய்யவேண்டும்' என்றுபிரார்த்திக்க, அவ்வந்தணர்தலைவர் சொப்பனத்தோற்றத்தைக் கருதித் திருமாலைத் தியானித்தமாத்திரத்தில், அப்பரமனருளால் அவருக்குச் சகலசாஸ்திரார்த்தங்களும் உள்ளங்கைநெல்லிக்கனிபோல உள்ளபடி விளங்கின. அன்னவூர்தியின் அநுக்கிரகத்தால் அனைத்தையும் அறிந்த வால்மீகிமகாமுனிவர்போலவும், பஞ்சாயுதனது பாஞ்சசன்னியத்தின்பரிசத்தால் யாவுமுணர்ந்த துருவன்போலவும் கண்ணன்கருணையால் எல்லாந்தெரிந்துகொண்ட அவர் அப்பொழுது சுருதிஸ்மிருதிஇதிஹாசபுராணம்முதலிய நூல்களிலிருந்து அநேகவாக்கியங்களைப் பிரமாணமாகவெடுத்துக்காட்டி அவற்றின்பொருளையுந் தாமே ஆக்ஷேபசமாதானங்களோடு யுக்தியுக்தமாகவெளியிட்டு அந்யமதங்களையெல்லாம் நிரசித்து, ஸ்ரீவைஷ்ணவசமயமே சற்சமயமென்றும், அதிலுள்ளவர்களே முத்திபெறுதற்குஉரியவரென்றும், அனைத்துமறியவுந் தானறியாது பிரளயப்பெருங்கடலிற் பள்ளிகொண்டருளுகிற ஸ்ரீமந்நாராயணனே பிரபஞ்சகாரணமான பரமாத்மாவென்றும், அவனைச் சரணமடைவதே சகலாபீஷ்டங்களையும் அடையும் உபாயமென்றும் பகுமுகமாகச்சொல்லி, பரதத்துவ மின்னதென்று ஐயந்திரிபறத் தாபித்தவளவிலே, முன்புசெருக்குக்கூறிய கலைஞர்சகலரும் ஏதும் மாறுகூற இயலாது நாணங்கொண்டு தலைகவிழ, வல்லபதேவனும் செல்வநம்பியும் அவரது ஞானவைபவத்தைக் கண்டு கொண்டாடிச் சாஷ்டாங்கமாகவிழுந்து பணிந்தனர். அவ்வமயத்தில், முன்பு நிருபனால் ஒருகம்பத்தினுச்சியில் கட்டிவைக்கப்பட்ட பொற்கிழிதானாக இவர்முன்னே தாழவளைய, 'இதுவும் ஒருதிருவருள் இருந்தபடி என்!' என்று வியப்போடு அவர் அதனை அறுத்துக்கொண்டருளினார்.

அதனைக்கண்டு பார்த்திபனும் புரோகிதரும் மற்றும் அறிஞர்கள்பலரும் அவ்வருந்தொழிலானரை அடிபணிந்து பலவாக



புகழ்ந்து அவரைப்பட்டத்துயானையின்மேலேற்றிக் குடைகொடி சாமரை ஆலவட்டம் முதலியன தாங்களே பணிமாறிக்கொண்டு உடனிருந்து வீதிவலஞ் செய்விப்பாராயினர். அக்காலத்தில் அவர் பண்டிதர்களுக்கெல்லாம் தலைவராய் விளங்கின தகுதிக்கு ஏற்ப, தராபதி, அவருக்குப்'பட்டர்பிரான்' என்று திருநாமஞ்சாத்தி, பலவிருதாவளிகளைக் கூறிவருமாறு கட்டளையிட்டான். அங்ஙனமே 'வேதப்பயன்கொள்ளவல்ல மெய்ஞ்ஞானன் வந்தான்' என்றும், 'வேண்டியவேதங்களோதி விரைந்துகிழியறுத்த விமலன் வந்தான்' என்றும், 'பரதத்துவத்தைநாட்டியபட்டர்பிரான்வந்தான்' என்றும்; 'வேயர்தங்கள்குலத்துதித்த வில்லிபுத்தூர்வேதக்கோன் வந்தான்' என்றும், 'வேதாந்தவிழுப்பொருளின்மேலிருந்தவிளக்கை விளக்கிய விட்டுசித்தன் வந்தான்' என்றும், 'பரமதவிருள்பறக்கடித்த பரமபாநு வந்தான்' என்றும், 'பெருஞானம்புலப்படுத்த பெரியோன் வந்தான்' என்றும் இவைமுதலாக அநேகம் விருதுகளைப் பாவலர் எடுத்துரைத்த, அதற்கு ஏற்பத் திருச்சின்னம் ஒலிசெய்ய, சயசயங்காரஞ்செய்தார், அவ்வைபவமாய் நகர்வலம்வருகிற உற்சவத்தைப் பார்க்கப் பெருமகிழ்ச்சியடைய எண்ணிப் பரமபதநாதன் திருமாமகளுடனே கருடாரூடனாய் எதிரில்வந்து தோன்றினான்.

தன்புத்திரன் பவனிவருதலைப் பார்த்து ஆனந்தமடைகிற தாய்தந்தையர்போலத் தன்பக்தன் விழாக்கொள்ளுதலை நோக்கியுகத்தற்குப் பிராட்டியுடனே பெருமான் விண்ணவர்புடைசூழ வானத்தில்எழுந்தருளிய காட்சியைக் கண்டு, அப்பாகவதசிரோமணி, தாம் சிறிதும் இமைப்புக்கொள்ளாமல், அத்தேவாதிதேவனுடைய சர்வஜ்ஞத்துவம் சர்வசக்தித்துவம் சர்வரக்ஷகத்துவம் முதலியமங்களகுணங்களைக் கருதுதற்குமுன்னே அக்கருடவாகனனது சௌந்தரியத்திற் கண்செலுத்தி அதனையேசேவித்து அதில் ஈடுபட்டு ஆழ்ந்து, பக்திபரவசராய், அதனால் தம்நிலையையும் எம்பெருமான்நிலையையும் மறந்து, 'காலாதீதமான வைகுண்டத்திலே இருக்கிற இவ்வரும்பொருள் காலம்நடையாடப்பெற்ற இவ்வுலகத்தில் வந்து கட்புலப்படுதலால், இதற்கு என்ன தீங்குநேருகிறதோ?' என்று அதிகமான பயசங்கைகொண்டு, 'இத்திருமேனிக்கு எவ்வாற்றானும் ஒருகுறையும் வாராதிருக்கவேண்டும்' என்று வாழ்த்துபவராய், யானைமணிகளையே தாளமாகக்கொண்டு, 'திருப்பல்லாண்டு' என்னுந் திவ்வியப்பிரபந்தத்தைப் பாடியருளினார்.

மற்றையாழ்வார்களுக்கும் இவர்க்கும் வேறுபாடு உண்டு:— அவர்கள், தங்கள்வாழ்க்கைகளை யெம்பெருமானாலே பெற நினைப்பார்கள்: இவர், அங்ஙனமன்றி, எம்பெருமானது வாழ்வையே தமக்குப் பரமபுருஷார்த்தமாக நினைத்தார்; அன்றியும், அவர்கள், பெருமானை உபாயமாகப்பற்றித் தம்தம்பயநிவிருத்தியைப்பண்ணுவார்கள்: இவரோ அந்நிலைமாறி, 'பெருமானுக்கு என்வருகிறதோ?' என்று பயப்பட்டு அந்தப்பயநிவிருத்தியிலே யத்தனம் பண்ணினார். இங்ஙனம் பரமபக்தராகிய இவர் அந்தப்பக்தர்களினும் பெருமைபெறுதலால், இவருக்கு 'பெரியாழ்வார்' என்று திருநாமமாயிற்று.

* "மங்களாசாஸனத்தில் மற்றுள்ளவாழ்வார்க
ளங்களார்வத்தளவு தானன்றிப்—பொங்கும்
பரிவாலேவில்லிபுத்தூர்ப்பட்டர்பிரான்பெற்றான்
பெரியாழ்வாரென்னும்பெயர்."

அப்பால் ஆழ்வார் தம்மைச் சரணமடைந்த பாண்டியர்குலபதியைக் குளிரக்கடாக்ஷித்துப் பாகவதகோட்டியி லொருவனாக்கிவிட்டு, ஸ்ரீவில்லிபுத்தூருக்கு எழுந்தருளி, அப்பொற்கிழிப் பொருளை வடபெருங்கோயிலுடையபெருமான் திருமுன்பே வைத்துத் தண்டன்சமர்ப்பித்து அதுகொண்டு அங்கே கோபுரங்கட்டிவைத்திட்டு, பழையபடி தமது புஷ்பகைங்கரியத்தைக் கைப்பிடித்து நடத்திக்கொண்டு வருகையில், கிருஷ்ணாவதாரத்தில் ஆழ்ந்தசித்தையராதலால், அவ்வவதாரவிருத்தாந்தத்தையே பிரதானமாகப் பாராட்டி அநுபவித்து, அவ்வநுபவத்தாலுண்டான ஆனந்தம் உள்ளடங்காமல்பெருக்கெடுத்துப்பாய்தலால் அதனைப்பிரபந்தமுகமாகவெளியிடத்தொடங்கி, 'பெரியாழ்வார்திருமொழி' என்னும்பிரபந்தத்தையும் அருளிச்செய்து அடியார்களுக்குத்தந்து

† "தன்னடியார்திறத்தகத்துத் தாமரையாளாகிலுஞ் சிதகுரைக்குமே, லென்னடியா ரதுசெய்யார் செய்தாரே னன்றுசெய்தாரென்பர்போலும்,—மன்னுடைய விபீடணற்காய் மதிளிலங்கைத் திசைநோக்கி மலர்க்கண்வைத்த, வென்னுடைய திருவரங்கற்கன்றியு மற்றொருவற்காளாவரே"

என்று தம்கொள்கையைத் தெரிவித்து உலகத்தவரை உய்வித்தருளினார்.

* உபதேசரத்தினமாலை - கஅ.
† பெரியாழ்வார்திருமொழி, - முப்பத்திநான்பதாந்திருப்பதிகம் - ௨.



* "தாழ்வொன்றில்லாமறைதாழ்ந்து தலமுழுதுங்கலியே
யாள்கின்றநாள்வந்தளித்தவன்காண்மினரங்கர்மௌலி
சூழ்கின்றமாலையைச்சூடிக்கொடுத்தவடொல்லருளால்
வாழ்கின்றவள்ளலிராமாநுசனென்னுமாமுனியே."

† "அன்னவயற்புதுவையாண்டாளரங்கற்குப்
பன்னுதிருப்பாவைப்பல்பதியம்—இன்னிசையால்
பாடிக்கொடுத்தாணற்பாமாலைபூமாலை
சூடிக்கொடுத்தாளைச்சொல்லு."

116804

முன்பு திரேதாயுகத்திலே விதேகதேசத்தில் மிதிலாபட்டணத்தில் ஜநகமகாராஜன் யாகசாலையமைக்கும்பொருட்டுக் கலப்பைகொண்டு பூமியையுழுகையில் அவ்வுழுபடைச்சாலிலே ஸ்ரீதேவியின் அம்சமான ஒருமகள் தோன்ற அவளை அவ்வரசன் தனதுபுத்திரியாகப் பாவித்துச் 'சீதை'யென்று திருநாமஞ்சாத்தி வளர்த்துவந்தான்; அதுபோலவே, பின்பு கலியுகத்திலே பாண்டியநாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் பெரியாழ்வார் திருத்துழாய்ப் பாத்தியமைக்கும்பொருட்டுக் களைக்கொட்டுக்கொண்டு திருநந்தவனத்தைக்கொத்துகையில் அக்கொத்தினநிலத்திலே ஸ்ரீதேவிபூதேவிகளின் அம்சமானஒருமகள் ஆடிமாசத்தில் பூர்வபல்குநிநாளிலே ‡ தோன்ற அவளை அவ்வாழ்வார் தமதுமகளாகப் பாவித்து 'கோதை' என்று நாமகரணஞ்செய்து வளர்த்துவந்தார். நுகரப்படும்பொருளொருசிறிது மில்லாத வறியவனொருவன் பெருநிதியைக் கண்டாற்போல அப்பெண்ணருங்கலத்தைக் கண்டவளவிலே பெருங்களிப்புக்கொண்டு மிகஅருமையாகச்சீராட்டிப் பாராட்டித் தாலாட்டிப் பாலூட்டிப் பாலித்துவந்த பட்டர்பிரான், அவளுக்குப் பஞ்சஸம்ஸ்காரங்களைச் செய்து பரமஞானத்தைப் போதித்தார்.

தந்தை முதலியோர் கண்டு வியக்கும்படி இளமைதொடங்கி எம்பெருமான்பக்கலிலே பக்திப்பெருவேட்கைகொண்டு அவனையே தான்மணஞ்செய்துகொள்ளக்கருதி, அப்பிரானது மகிமைகளையே எப்பொழுதும் சிந்தித்தல் துதித்தல் முதலியன செய்துவருகிற அச்சுரிகுழற்கோதை, நாடோறும் விஷ்ணுசித்தர் வடபெ

* இராமாநுசநூற்றந்தாதி - கசு.
† தனியன்; உய்யக்கொண்டார் அருளிச்செய்தது.
‡ 'கலியுகத்தில் தொண்ணூற்றெட்டாமேற் செல்லாநின்ற நளவருஷத்தில் ஆடிமாசத்தில் சுக்கிலபக்ஷசதுர்த்தசிகூடின செவ்வாய்க்கிழமையில் துலாலக்கினத்தில்' என்று விவரம்.

ருக்கோயிலுடையானுக்குச் சாத்தும்பொருட்டுக் கட்டிவைத்த திருமாலையை அவரில்லாதசமயம்பார்த்து எடுத்துத் தான் குழலிலேதரித்துக்கொண்டு 'அப்பெருமானுக்கு நான் நேரொத்திருக்கிறேனோ இல்லையோ' என்று சிறந்தஆபரணங்களையணிந்து உயர்ந்தபட்டாடையையுடுத்துத் தன்னையலங்கரித்து அவ்வொப்பனையழகைக் கண்ணாடியிலே கண்டு தந்தையார்வருதற்குமுன் மலர்மாலையைக்களைந்து முன்போலவே செண்டாகச்சுற்றிப் பூங்கூடையினுள்ளே கலங்காமல் வைத்துவந்தாள். இரகசியமாக நடக்கிற அச்செய்தியையுணராமல் ஆழ்வார் அம்மாலையைக்கொண்டுபோய்ச்சுவாமிக்குச் சாத்திவர, பெருமானும் பிரீதியோடு ஏற்றருளினன். இங்ஙனம் பலநாள் கழிந்தபின் ஒருநாள், வெளியிற்சென்ற ஆழ்வார் விரைவில் மீண்டிருந்தபொழுது, பூமாலையைச் சோதை சூடியிருந்ததைப்பார்த்துக் கோபங்கொண்டு 'பெண்ணே! நீசெய்ததுமிகுந்தஅபசாரமான காரியம்; இனி, இவ்வாறுசெய்தற்கு நினைப்புக்கொள்ளாதே' என்று நங்கைக்கு நற்புத்திசொல்லிவிட்டு அன்று வடபத்திரசாயிக்கு மாலைசாத்தாமல் திருப்பணிக்கு முட்டுப்பாடு நேர்ந்ததற்கு மனம்வருந்தியிருந்தார். அற்றைநாளிரவில் ஆலிலைத்துயில்வோன் ஆழ்வாரது கனவிலே தோன்றி 'இன்று நீ நமக்கு மாலைகொண்டுவாராதிருந்தது என்?' என்று வினவியதற்கு, அவர் தம்திருமகளாரது பொருந்தாச்செய்கையை விண்ணப்பஞ்செய்ய, அதுகேட்டு அப்பெருமான் 'அவள் சூடிக்கொடுத்த மாலையேகாண் நறுமணமிக்கு நமது உள்ளத்துக்கு நனிஉகப்பாவது; ஆதலின், இனி அப்படிப்பட்ட தொடையலையே நமக்குக் கொண்டுவருவாய்' என்று அருளிச்செய்தார். உடனே கண்விழித்த விஷ்ணுசித்தர் அம்மங்கையை மலர்மங்கையென்றே எண்ணி அவள்பிறந்து அளவிலன்புகொண்டு, அனைத்துலகத்துக்கும் அன்னையாய் அவற்றை ஆண்டுவருகிற இலக்குமியின் அவதாரவிசேஷமென்றகாரணத்தால், அவளுக்கு 'ஆண்டாள்' என்றும், மாதவனுக்குரிய மலர்மாலையைத் தான்சூடிக்கொண்டு பார்த்துப் பின்பு கொடுத்ததுகாரணமாக 'சூடிக்கொடுத்தநாய்ச்சியார்' என்றும் திருப்பெயரிட்டு அழைத்துவந்தார்.

அந்நாய்ச்சியார் தனது பருவம் வளருந்தோறும் ஞானபக்திகளுங் கூடவே வளர்ந்துவரப்பெற்றுத் தனக்குஏற்றகாதலனாகக் கருதியகடல்வண்ணன்விஷயமான வேட்கை விஞ்சியவளாய், இனி அவனை ஒருகணப்பொழுதுங் கூடாதிருக்கப்பொறாமல், கண்ண



னதுபிரிவையாற்றாத கோபஸ்திரீகள்போலத் தானும் நோன்புநோற்று உயிர்தரிப்பாளாய் அவ்வபிப்பிராயத்தை 'திருப்பாவை', 'நாய்ச்சியார்திருமொழி' என்ற திவ்யப்பிரபந்தங்களின்மூலமாகப் பகவத்சந்நிதியிலே விண்ணப்பஞ்செய்து வாழ்ந்திருந்தாள்.

இப்படியிருக்கையில் இவளுக்கு விவாகத்துக்குரிய பருவம் வந்ததைக் கண்டு தந்தையார் இவளுக்குஏற்றகொழுநனைக் காணப்பெறாது கவலைப்பட்டு இவளையழைத்து 'நீ யாருக்கு வாழ்க்கைப்பட விரும்புகிறாய்?' என்று வினவ, ஆண்டாள் * "மானிடவர்க்கென்றுபேச்சுப்படில் வாழகில்லேன்" என்றுசொல்ல; பட்டர்பிரான் 'பின்னை எங்ஙனம் நிகழ்வது?' என்றுகேட்க, சூடிக்கொடுத்தாள் 'பெருமானுக்கே யுரியவளாகவிருக்கிறேன்' என்று கட்டுரைத்தாள். அதுகேட்டு விஷ்ணுசித்தர் 'நூற்றெட்டுத்திருப்பதிகளிலுள்ள எம்பெருமான்களுள் யாருக்கு வாழ்க்கைத்துணைவியாகத் துணிகிறாய்' என்று விசாரித்தலும், கோதை 'அவ்வப்பெருமான்களுடைய வைபவத்தை விளங்க எடுத்துக்கூறியருளவேண்டும்' என வேண்ட; வேயர்குலத்தலைவரும் அவ்வாறே எடுத்து அருளிச்செய்துவருகையில், ஆண்டாள் வடமதுரையில் எழுந்தருளியுள்ள கண்ணபிரானது வரலாற்றைக் கேட்டவளவிலே மயிர்சிலிர்ப்பும், திருவேங்கடமுடையானது வரன்முறையைச் செவியுற்றபொழுது முகமலர்ச்சியும் திருமாலிருஞ்சோலைமலையழகரது வடிவழகையறிந்தமாத்திரத்தில் மனமகிழ்ச்சியும் பெற்று ஸ்ரீரங்கநாதனது மகிமை செவிப்பட்டவுடனே அளவற்றஆனந்தமடைந்தவளாயிருக்கையில், அந்தத்திருப்பதியெம்பெருமான்களெல்லோரும் இவளது சுயம்வரத்தை யுத்தேசித்து ஸ்ரீவில்லிபுத்தூருக்கு எழுந்தருளி இவளது ஞானக்கண்ணுக்குவிஷயமாக, இவள் அவர்களுள் ரங்கநாதனிடத்தே மனத்தைச்செலுத்தி அவனுக்கே தன்னை மணமகளாக நிச்சயித்து அவ்வயலனையே சர்வகாலமும் சிந்தித்திருந்தாள்.

அதனையறிந்து ஆழ்வார் 'நம்பெருமான் இவளைக் கடிமணம் புணர்தல் கைகூடுமோ?' என்று சிந்தாக்கிராந்தராயிருக்கையில், திருவரங்கச்செல்வன் இவருடையசொப்பனத்திலே யெழுந்தருளி 'உமது திருமகளைக் கோயிலுக்கு அழைத்துக்கொண்டுவாரும்; நாம் அவளை அங்கீகரிப்போம்' என்று அருளிச்செய்ய, அதனால், விஷ்ணுசித்தர் வியாகுலம்நீங்கி மனமகிழ்ந்திருந்தார். பின்பு ஸ்ரீவ

* நாய்ச்சியார்திருமொழி - முதல்திருப்பதிகம் - ௫.

ங்கநாதன் ஸ்தாநிகர் முதலிய கோயிற்பரிசனங்களுடைய கனவிலே தோன்றி 'நீங்கள் சகலமங்களவாத்தியங்களோடும் சத்திரசாமராதிகளோடும் கமநுகவாத்திலைப்பல்லக்கையும் உடன்கொண்டு வில்லிபுத்தூருக்குச் சென்று அதில் ஆண்டாளையேற்றி அழைத்துவாருங்கள்' என்று கட்டளையிட்டான். அவ்வாறே எல்லாப் பரிகரத்தாரும் சென்று பெரியாழ்வாரைச் சேர்ந்து நம்பெருமாளது அருளப்பாட்டை விண்ணப்பஞ்செய்ய, கர்ணாமிருதமான அவ்வார்த்தையைச் செவியாரக்கேட்டுச் சந்தோஷித்து, கோதைதாதை, வடபெருங்கோயிலுடையான் சந்நிதியிலே அழகியமணவாளனது நியமனத்தை விண்ணப்பஞ்செய்து அநுமதிபெற்றுப் பிரயாணமானார். அச்செய்தியைக்கேள்வியுற்று ஸ்ரீவல்லபதேவன் அக்கலியாணமஹோத்ஸவத்தைத் தானும் உடனிருந்து விசேஷமாக நடத்திக் கண்டுகளிகூர்ந்து கிருதார்த்தனாகக் கருதி, தன்னுவலாளரைக் கொண்டு ஸ்ரீவில்லிபுத்தூரையும் ஸ்ரீரங்கநகரத்தையும் இவ்விரண்டுக்கும் நடுவிலுள்ள நெய்வழியையும் தண்ணீர்தெளித்தும் பூம்பந்தரிட்டும் தோரணம்கட்டியும் வாழைகமுகுநாட்டியும் நன்றாக அலங்கரிப்பித்துக் கசதுரங்காதி சதுரங்கபலத்துடனே ஆழ்வார்பக்கல் வந்துசேர்ந்தான். அப்பால் பட்டர்பிரான் ஆண்டாளை மணிச்சிவிகையில் எழுந்தருளப்பண்ணிச் சகலவாத்தியகோஷத்துடனே 'ஆண்டாள் வந்தாள்', 'சூடிக்கொடுத்த சுடர்க்கொடி வந்தாள்', 'சுரும்பார்குழற்கோதைவந்தாள்', 'திருப்பாவைபாடியசெல்வி வந்தாள்', 'பட்டர்பிரான்புதல்வி வந்தாள்', 'வேயர்குலவிளக்கு வந்தாள்' என்று பலசின்னங்கள் பணிமாற, மெய்காப்பாளர் உடன்சூழ்ந்துவர, தாமும் அநாதுமாக இருபுறத்தும் இடைவிடாதிருந்து அழைத்துவந்து திருவரங்கம்பெரியகோயிலையடைந்து பெரியபெருமாளுடைய முன்மண்டபத்திலே அப்பிராட்டியை நிறுத்திப் பெருமானைச் சேவிக்கப்பண்ணுவிக்கையில், அத்திருமாலின் திவ்யசௌந்தரியம் இரும்பைக்காந்தம் இழுக்கின்றவாறுபோல ஆண்டாளைக் கவரத்தொடங்கியதனால், சூடிக்கொடுத்தநாய்ச்சியார் சிலம்பார்க்கச் சீரார்வளையொலிப்பக் கொடியேரிடையாடக் காதளவும்ஓடிக்கயல்போல்மிளிருங்கடைக்கண்பிறழ அன்னமென்னடைகொண்டு அருகிற்சென்று அநந்தக்கட்டிலாழ்ந்து திருவரங்கன்திருவடிவருடக்கருதி நாகபர்யங்கத்தை மிதித்தேறி நம்பெருமானது திருமேனியிலே அந்தர்ப்பவித்து 'அவனை என்றும் பிரியாதிருப்பவளாயினள்.





அவ்வண்ணம் அரும்பெறுபெற்றதைத் தரிசித்து ஆழ்வாரும் அவர்சிஷ்யரான வல்லபதேவனுள்ளிட்டாரும் யாவரும் அதிசயித்துநிற்கையில், திருவரங்கமுடையான் அர்ச்சகமுகமாக ஆழ்வாரை அருகிலழைத்து 'க்ஷீரசமுத்திரராசன்போல நீரும் நமக்கு மாமனாராய்விட்டீர்' என்று முகமன்கூறித் தமது தீர்த்தம் திருப்பரியட்டம் மாலை ஸ்ரீசடகோபன் முதலியவற்றைப் பிரசாதித்து 'வில்லிபுத்தூருறைவானுக்கே தொண்டுபூண்டிரும்' என்று திருவாய்மலர்ந்து விடைகொடுத்தருளினான். அநந்தரம் ஆழ்வார்

*"ஒருமகடன்னையுடையேனுலகநிறைந்தபுகழால்
திருமகள்போலவளர்த்தேன்செங்கண்மால்தான்கொண்டுபோனான்
பெருமகளாய்க்குடிவாழ்ந்துபெரும்பிள்ளைபெற்றவசோதை
மருமகளைக்கண்டுகந்துமணாட்டுப்புறஞ்செய்யுங்கொலோ"

என்று போர உகந்து அரிதிற் பிரிந்து ஸ்ரீவில்லிபுத்தூருக்குச் சென்று முன்போலவே கைங்கரியநிரதராய்ச் சண்பகம் மல்லிகை பாதிரி செங்கழுநீர் புன்னை குருக்கத்தி இருவாட்சி முதலிய பல பூக்களோடு ஆர்வமென்பதோர் பூவையும் இட்டுக்கொண்டு எண்பத்தைந்து வருஷ காலம் வாழ்ந்திருந்து போரநந்தப்பெரும்பத மடைந்தார்.

† "பாதகங்கடீர்க்கும்பரமனடிகாட்டும்
வேதமனைத்துக்கும்வித்தாகும் — கோதைதமிழ்
ஐயைந்துமைந்துமறியாதமானிடரை
வையஞ்சுமப்பதும்வம்பு."

---

* பெரியாழ்வார் திருமொழி - மூப்பத்தெட்டாம் திருப்பதிகம் - ௮.

† தனியன்; வேதப்பிரான்பட்டர் அருளிச்செய்தது.

# ௯. தொண்டரடிப்பொடியாழ்வார்.

* "செய்யும்பசுந்துளபத்தொழின்மாலையுஞ்செந்தமிழிற்
பெய்யுமறைத்தமிழ்மாலையும்பேராதசீரரங்கத்
தையன்கழற்கணியும்பரன்றாளன்றியாதரியா
மெய்யனிராமாநுசன்சரணேகதிவேறெனக்கே."

† "மற்றொன்றும்வேண்டாமனமேமதிளரங்கர்
கற்பினைமெய்த்தகழலிணைக்கீழ்—உற்ற
திருமாலைபாடுஞ்சீர்த்தொண்டர்பொடியெம்
பெருமானையெப்பொழுதும்பேசு".

"சோழவளநாடு சோறுடைத்து" என்ற ஔவையாரமுதமொழியின்படி [illegible]யிர்களுக்கு ஜீவநாதாரமாகவுள்ள பயிர்வளத்துக்குப் பிரதா[illegible]ணமான நாட்டுச்சிறப்பைக் காவேரிப்பாய்ச்சலால் நன்குபெற்று அப்பயிர்ச்செழிப்பை மிகுதியாகவுடைமையால் 'புனல்நாடு' என்று புகழ்பெற்ற சோழநாட்டிலே, "ஈதிருபதாஞ்சோழம்" என்றபடி பிரசித்தமாக விருக்கிற பாடல்பெற்ற விஷ்ணுஸ்தலங்கள் நாற்பதில் புள்ளம்பூதங்குடி யென்ற திவ்யதேசத்தின் அருகிலுள்ள திருமண்டங்குடி யென்னுந் திருப்பதியிலே, பகவானது சொரூபமென்று ஸ்ரீகீதையிற் கூறப்பட்ட சிறப்புடைய மார்கழிமாதத்தில், கேட்டைநக்ஷத்திரத்தில் ‡, வைசயந்தியென்னும் வநமாலையின் அம்சமாய், ஒருவர், வேதம்வல்லவொரு முன்குடுமிப்பிராமணரது பத்தினியினிடத்திலே தோன்றினார். நாராயணகடாக்ஷத்தால் அவதரித்த அவ்வந்தணகுமாரருக்குத் தந்தையார் விப்ரநாராயணரென்று பேரிட்டு உரிய பருவங்களில் சௌளம் உபநயநம் முதலிய வைதிகச்சடங்குகளை முறைப்படி செய்வித்து வேதசாஸ்திரங்களைப் பயிற்றுவிக்க, அவர் நான்குவேதங்களையும் ஆறுசாஸ்திரங்களையுங் கசடறக்கற்று வல்லராய் அக்கல்விக்கு ஏற்பச் சுத்தசத்துவகுணமே தலையெடுத்து ஞானவைராக்கியங்களோடு கூடித் தந்தைதாயர்க்கு மகிழ்ச்சிதந்து வாழ்ந்துவந்தார். அப்படியிருக்கையில், சேனைமுதலியார் பூலோகத்தில் எழுந்தருளி இவர்க்குப் பஞ்சஸம்ஸ்காரங்களைப் பண்ணி மந்திரோபதேசமுஞ் செய்து சென்றார்.

* இராமாநுசநூற்றந்தாதி - ௧௧.

† தனியன்; திருவரங்கப்பெருமாளரையர் அருளிச்செய்தது.

‡ 'கலியுகத்தில் இருநூற்றெண்பத்தொன்பதாவதான பிரபவசம்வத்சரத்தில் மார்கழியில் கிருஷ்ணபக்ஷசதுர்த்தசிகூடின செவ்வாய்க்கிழமையில்' என்ற விவரம் நூல்களால் விளங்கும்.



அங்ஙனம் மந்திரார்த்தத்தை யறிந்த விப்ரநாராயணர், இருபாதிரியான சேவனாது குருமிருதத்திலே ஆழ்ந்தசிந்தையுடையராய் அதனால் இம்மையின்பங்களை வெறுத்து விவாகத்தில் விருப்பில்லாமல் முதலாச்சிரமத்திலேயே நின்று, பிரணவப்பொருளான நம்பெருமான் பிராணிகளை ஈடேற்றும்பொருட்டுப் பூலோகத்தில் கோயில்கொண்டெழுந்தருளியிருக்கிற திவ்யதேசங்களில் சென்று சுவாமிதரிசனஞ்செய்யக்கருதி, அவற்றில் முதலதான திருவரங்கம்பெரியகோயிலை யடைந்தார். அங்கு உபயகாவேரிமத்தியில் சேஷசயநத்திலே * "குடதிசைமுடியைவைத்துக் குணதிசைபாதநீட்டி, வடதிசைபின்புகாட்டித் தென்திசையிலங்கைநோக்கி" பூமங்கையிருவர் பொன்னடி வருடப் பள்ளிகொண்டுள்ள பெருமானைச் சேவித்து, அந்த அழகிய நம்பெருமான் தம்முடைய வடிவழகினால் இவரைத் தம்பக்கல் மிகுந்த ஈடுபாடுடையராம்படி செய்தருளினார். உடனே இவர் தமது வாழ்நாள் வீணாகாதபடி ஒப்புயர்வற்ற அப்பெருமானுக்கு உற்ற அடிமைத்தொழில் செய்யக்கருதி, முன்பு வடமதுரையில் கம்சனுடைய குற்றேவலாளனான மாலாகாரன் ஒருநாள் வாசுதேவனுக்குப் புஷ்பஞ் சமர்ப்பித்துப் பேறுபெற்றதையும், கஜேந்திராழ்வான் புஷ்பகைங்கரியத்தாலே துன்பந் தீர்ந்ததையும் ஆலோசித்துப் பெரியாழ்வார்போலவே தாமும் பெருமானுக்குப் பூவிடுதலையும் திருத்துழாய் சாத்துதலையுமே திருப்பணியாகச் சடைப்பிடித்து, இந்திரனது நந்தநவனமோ குபேரனது சைத்திரரத மென்னும் உத்தியானமோ என்று காண்பவர் ஐயுறுமாறு ஒரு திருநந்தவனத்தை அப்பதியிலே செழிப்பாக அமைத்து, காலந்தோறும் பலவகைப் பூமாலைகளையும் திருத்துழாய்மாலையையும் கட்டியெடுத்துக்கொண்டு வந்து அழகியமணவாளனுக்குச் சாத்திக் களிகூர்ந்து கண்டு மகிழ்ந்துகொண்டு, தமது நிலைக்கு ஏற்பப் பிராமணர் திருமனைகளில் அக்ஷபிக்ஷை வாங்கியுண்டு சேவித்துவந்தார்.

இங்ஙன மிருக்கையில், திருவரங்கத்துக்கு வடக்கிலுள்ள திருக்கரம்பனூ ரென்ற உத்தமர்கோயிலில் தேவமாதரம்சமாய்ப் பிறந்து ஒப்புயர்வற்ற எழில்வாய்ந்த தேவதேவியென்பாளொரு கணிகை, ஒருநாள் பரங்கிமாரோடுந் தமக்கையோடும் உறையூருக்குச் சென்று, அதனை இராசதானியாகக் கொண்டு வாழ்கிற சோழராசனது முன்னிலையில் திருத்தநிருத்தங்களை நிகழ்த்தி

* திருமாலை - ௧௧.

அவனை மோகிப்பித்து அளவிறந்த செல்வத்தை அவன்பாற் பெற்று மிக்கசெருக்கோடு மீண்டுவருகையில், இளைப்பாறுதற்பொருட்டு இவ்வழகியபூம்பொழிலின் ஒருபுறத்திலே ஓர்மரத்தின் நிழலில் இருந்து, கண்டவர்கள் யாவரும் அத்தண்டலையின் சிறப்பைப் பாராட்டுதலும் நன்றாகவுற்றுநோக்கி, அம்மலர்ச்சோலையைத் தனக்கு உரியபொருளாக்கி அதில் பூக்கொய்தும் புனல்விளையாடியும் பொழுதுபோக்கி மனமகிழ விரும்பி அதற்குஉரியவனைக் கண்டு தன் வசப்படுத்தநினைத்து, அங்கு உலாவிநின்றாள். நிற்கையில், ஒருசார், விப்பிரநாராயணர், மனத்திலிருந்த சத்துவகுணந்தான் அகத்தில் அடங்காது புறத்தும் பொங்கினதோவென்னும்படி ஊர்த்துவபுண்டரமும் முப்புரிநூலும் பன்னிரண்டு திருமண்காப்பும் வெள்ளொளி செய்து விளங்க, கழுத்தில் தாமரைமணி மாலைகளையும் துளசிமணிமாலைகளையும் தரித்து, பூஞ்செடிகளுக்குப் பாத்திகட்டுதலுந் தண்ணீர்பாய்ச்சுதலுஞ் செய்துகொண்டிருக்க, கண்டாள். உடனே அவள், அவரருகில்வந்து முன்னின்று அவரைத் தொழுது தனது சௌந்தரியத்தை அவருக்குக்காட்டிச் சிலகுறிப்புச்செய்யவும், விஷயாந்தரங்களில் விழித்தகண்குருடாகத்திரிபவராகிய அவர் அவளைக் கண்ணெடுத்துப்பார்த்தலுஞ்செய்யாது நிரஸ்கரித்துத் தமது கைங்கரியத்திற்கருத்தூன்றியிருந்தார். அதுநோக்கித் தேவதேவி ஆச்சரியப்பட்டுத் தன் முன்பிறந்தாளுடனே 'அரசர்முதலிய பலரை எளிதில் வயப்படுத்துகிற ரூபலாவண்யங்களிற்சிறந்த யான் சென்று எதிர்நிற்கவும் பாராதிருக்கிற இவன் பித்தனோ? பேடனோ?' என்றுகூற, அதற்கு அவள் 'பித்தனும் பேடனு மல்லன்; ஸ்வாமிகைங்கரியத்திற் பற்றின சித்தமுடைய மகாவிரக்தன்: இவனைச் ஸ்வாதீனப்படுத்த ஒண்ணாது' என்றுசொன்னவளவிலே, வடிவழகில் இறுமாப்புடைய தேவதேவி 'இவனை நான் வசீகரியாமல்விடுவதில்லை' என்று உறுதிகூறுதலும், முன்னவள் 'நீ அங்ஙனஞ்செய்தால், நான் உனக்கு ஆறுமாசகாலம் அடியவளாவேன்' என்று சபதஞ் செய்ய, பின்னவளும் 'நான் அங்ஙனஞ் செய்யேனாயின், ஆறுமாசம் உனக்குத் தொழுத்தையாவேன்' என்று பிரதிஜ்ஞைபண்ணினாள். அநந்தரம் அவள், தன் ஆபரணங்களைக் கழற்றிக்கொடுத்துத் தோழியரோடு தமக்கையையும் அனுப்பிவிட்டுத் தனியே மெல்லியதொரு செங்காவிச்சேலை யுடுத்து அவரையடுத்துத் திருவடிகளில்விழுந்து நமஸ்கரிக்க, அவர் 'நீயார்? ஏன் இங்கு வந்தாய்'



என்று வினவ, அதற்கு அவள் 'அடியேன் முற்பிறப்பிற்செய்த தீவினையால் வேசையாய்ப் பிறந்தவள்; அடியேனைத் தாய் அக்குலத்திற்குரிய தொழிலைக் கைக்கொள்ளும்படி நிர்ப்பந்திக்க, அதற்கு உடன்படாமல் அவளைத் துறந்து மகாபாகவதரான தேவரீரது திருவடிகளைச் சரணமடைந்து உய்வுபெற நாடி வந்துற்றேன்; கருணைக்கடலான தேவரீர் அநாதையான என்னைக் காத்தருளவேணும்: செடிகொடிகளுக்கு நீர்பெய்தல், பூப்பறித்தல், மாலைகட்டுதல், தேவரீரில்லாதகாலங்களிற் சோலையைப் பாதுகாத்தல் முதலிய பணிவிடைகளில் எதையும் செய்துவரக்காத்திருக்கிறேன்' என்று மிகுந்தவணக்கத்தோடு விண்ணப்பஞ்செய்தாள். அவர் அவளது கபடசித்தத்தை யுணராமல் உடன்பட்டுத் தாம் உண்டுமிகுந்த அன்னத்தைக் கொடுத்தார். அவளும் அதனை வாங்கிப் புசித்துத் திருத்துழாய்முதலியவற்றிற்குப் பாத்திகொத்துதல், நீர்பரிமாறுதல் முதலிய குற்றேவல்களைத் தவறாமல் மிகுந்தவூக்கத்தோடு எப்பொழுதுஞ் செய்துகொண்டு சோலையைச் செழிப்பாகவளர்த்து அவருக்குத் தன்பக்கல் நம்புதலுண்டாம்படி நல்லவள்போல நடித்துவந்தாள்.

இப்படி அநேகமாதங்கழிந்தபின் ஒருநாள் பெருமழைபொழிகையில் பர்ணசாலையிற் பிரவேசித்திருந்த அவ்வந்தணர், வெளியிலே அவள் நனைந்து வருந்துதலைப் பார்த்து இயற்கையானசீவகாருணியத்தால் உள்ளேவந்திருக்கும்படி நியமிக்க, அதுவேவியாசமாக அவள் அருகில்வந்து தன்மென்மொழிகளாலும்மேனிமினுக்கினாலும் மனத்தைக் கவர்ந்து அவரைத் தன்வசமாக்கிச் சில காலம் அவருடனே யிருந்து, பின்பு பொருளில்லாதஅவரைப் பொருள்செய்யாது கைவிட்டுத் தன்கிருகத்திற் சென்று சேர்ந்தவளவிலே, இவர் அவள்பிரிவையாற்றாமல் அவள்வீட்டுவாயிலில் தியங்கிநின்றார்.

அவ்வளவிலே, பிராட்டி பெருமானைநோக்கி 'நமக்குப் பலகாலமாகப் பணிசெய்துவந்த விப்பிரநாராயணன் அதனை முழுவதும் ஒழித்து ஒருபொதுமகளுக்குத் தொண்டுபூண்டு அவள்புறக்கணிக்கவும் மனந்திரும்பாது அவளில்லத்துப் புறங்கடைபற்றி ஏங்கியிருக்குமாறு தேவரீர் மாயைக்கு இலக்காகலாமோ? இதுவும் ஒருதிருவிளையாட்டு இருந்தபடி என்? இனி இவனை விரைவில் மீட்டு முன்போல ஆட்கொண்டு அந்தரங்கபக்தனாக்கியருளவேண்டும்' என்று பிரார்த்திக்க, திருமாலும் திருமகள்வார்த்தைக்கு இயைந்து

தமது திருக்கோயிற்பாத்திரங்களுள் ஒருசுவர்ணபாத்திரத்தையெடுத்துக்கொண்டு மனிதவடிவம்பூண்டு விப்ரநாராயணருக்குத் தெரியாமல் அப்பாத்தையின் மனைக்கு எழுந்தருளி வாயிற்கதவைத் திறக்கச்சொல்ல, அவள் உள்ளிருந்தபடியே 'யார் நீ? எங்கு வந்தாய்?' என்றுகேட்க, நம்பெருமாள் 'நான் அழகியமணவாளதாஸன், விப்ரநாராயணரனுப்ப வந்தேன்' என்று விளம்பியவளவிலே, தேவதேவிவிரைந்துவந்து கவாடந்திறந்து 'வந்தகாரியமென்னை?' என்று வினவுதலும், ஸ்ரீரங்கநாதன் தான் கொணர்ந்த பொற்கலத்தை அவள்கையிற் கொடுத்து 'இதனை விப்ரநாராயணர் உனக்குவரவிடுத்தார்' என்றுசொன்னவுடனே, அவள் அதியாதரத்தோடு 'அவரை உள்ளேவரச் சொல்லும்' என்று அநுமதிசெய்தபின், அடியவர்க்குளன்றே எம்பெருமான் விப்ரநாராயணரிடம்வந்து 'தேவதேவி உம்மை உள்ளேவரச்சொன்னாள்' என்றுசொல்லிச் சென்றார். அச்செவிக்கினியசெஞ்சொல்லைக் கேட்டமாத்திரத்திலே அவர் பிரிந்தவுயிரைப்பெற்றாற்போல உள்ளங்குளிர்ந்து உடல்பூரித்து உள்ளே சென்றுசேர்ந்தார்.

அவ்விரவுகழிந்து பொழுதுவிடிந்தவாறே சுவாமிசந்நிதியில் திருக்காப்புநீக்கியவளவில், சிறந்ததொரு பொற்பாத்திரத்தைக் காணாமல் கோயிற்பரிகர்த்தார் இராசாங்கத்தாருக்கு அறிவிக்க, அவர்கள் உடனே வந்து களவுகண்டுபிடிக்கும்பொருட்டு அர்ச்சகர் பரிசாரகர் முதலிய அந்தரங்கபரிசனங்களைப் பிடித்துப் பலவாறு தண்டித்துவருத்தியும் ஒருவர்மேலுங் குற்றங்காணப்படாமையால் ஆங்காங்குப் புலம்விசாரித்துவருகையில், தேவதேவியின் மாளிகையிலிருக்கிறதாக அவள்வீட்டுவேலைக்காரியொருத்தியால் அறிந்து, அங்குச்சென்று அதனைக்கண்டு அவ்வில்லிலுள்ளார்யாவரையுங் குற்றவாளிகளாக்கி அரசன்முன்னிலையிற்கொண்டுபோய்நிறுத்தினார்கள். அப்போது வளவன் வரைவின்மகளைநோக்கி 'பெருமான்பாத்திரத்தை நீ கவரலாமோ?' என்ன, அவள் 'யான் இன்னதென்று அறியேன்; அழகியமணவாளதாஸனென்பானொருதூதன்மூலமாக இவ்வேதியன் இதனை எனக்கு வரவிட்டான்: இவ்வளவே யான் அறிவது' என்று உத்தரங்கூறினாள்: அதன்மேல் இராசன் விப்பிரரை விசாரிக்க, அவரும் 'யான் ஒன்றும் அறியேன்; ஏழையானஎனக்கு ஒருஏவலாளனும் இல்லை' என்றுசொல்ல, இங்ஙனம் இருதலைவாய்மொழியையுங் கேட்டபின் அரசன் ஆலோசித்து, களவாடியபொருளை வாங்கினவர்க்கு[illegible]ய அபராதப்பொருளை இறுக்கும்படி



வேசிக்கு விதித்து, அக்காணிக்கையையும் தங்கத்தையும் பெருமாளுக்குச் சமர்ப்பித்து, பொற்கள்வர்க்குரிய தண்டனையை ஆராய்ந்து விதிக்கும்பொருட்டு மறையவரைச் சிறையிலிட்டான்.

மீண்டும் ஒருகால் ஸ்ரீரங்கநாயகி 'இவ்வடியவனைத் தேவரீர் லீலைக்குவிஷயமாக்காமல் கிருபைக்குப் பாத்திரமாக்கியருளவேணும்' என்றுவேண்ட, பெருமாள் அதனை அங்கீகரித்துக் கோமகன்கனவிலே தாம்எழுந்தருளி 'வரைவின்மகளைவேட்ட இவனது கருமத்தைக் கழிக்கும்பொருட்டு நாமே பொன்வள்ளத்தைக் கொண்டுபோய்க் கொடுத்து இவனைத் தண்டிப்பித்தோம்; உண்மையில் இவன் சோரனல்லன்: சுத்தனே' என்று தெரிவிக்க, நரபதியும் உணர்ந்தவுடனே கனாத்தோற்றத்தை அமைச்சராதியோர்க்கு வியப்போடுவெளியிட்டு வேதியனை விடுவித்து உபசரித்து அனுப்பிவிட்டான்.

பிறவிப்பெருஞ்சிறையினின்று விடுபடுதற்கு ஒருமுற்குறியாகக் காவல்விடுபெற்ற பிராமணர், தாம் துளவத்தொண்டு துறந்து வைதிகவொழுக்கமும் மறந்து பொருட்பெண்டிர்பொய்ம்மை மயக்கத்தில் ஆழ்ந்து இடங்கழியாளனாய் அலைந்[illegible]ப்பட்டதை நினைத்துநினைத்து மிகவும்பச்சாத்தாபப்பட்டுப் பிராயச்சித்தஞ்செய்துகொள்ளப் பிரயத்தனங்கொண்டு பெரியோர்களைச் சார்ந்து தமதுதோஷங்களையெல்லாம் விடாது எடுத்து வாயாற்சொல்லி 'இவற்றிற்குக் கழுவாய் இன்னதென்று துணிந்து கூறியருளவேணும்' என்ன, அவர்கள் அநேகசாஸ்திரங்களை ஆராய்ந்து 'சகலபாபங்களும் பரிகாரமாதற்கு ஏற்ற செய்தொழில் பாகவதர்களுடைய ஸ்ரீபாததீர்த்தத்தை உட்கொள்ளுதலே' என்று உய்யுமாறு கூற, அங்ஙனமே அவர் அதனைப் பெற்றுப் பருகிப் பரிசுத்தராயினர்.

பின்பு, இவர், முன்போலவே பகவத்பாகவதபக்தி தலையெடுக்கப்பெற்று * "நாதனை நரசிங்கனை நவின்றேத்துவார்களுழக்கிய பாததூளிபடுதலாலிவ்வுலகம்பாக்கியஞ்செய்ததே" என்றும், † "ஆடிப்பாடியரங்கவோவென்றழைக்குந்தொண்டரடிப்பொடி, யாடநாம்பெறிற்கங்கைநீர்குடைந்தாடும்வேட்கையென்னாவதே" என்றும், ‡ "ஆறுபோல்வருங்கண்ணநீர்கொண்டரங்கன்கோயிற்றிரு

* பெரியாழ்வார்திருமொழி - முப்பத்தா[illegible]ன்காந்திருப்பதிகம் - ௬.
† பெருமாள்திருமொழி - இரண்டாந்திருப்பதிகம் - ௨.

முற்றஞ், சேறுசெய்தொண்டர்சேவடிச்செழுஞ்சேறென்சென்னிக்கணிவனே" என்றும் அருளிச்செய்யப்பட்ட நற்பொருளிலே நிறைந்தநெஞ்சமுடையராய், ஸ்ரீவைஷ்ணவர்களுடைய ஸ்ரீபாததூளியாய் அவர்களுக்குக்கீழ்ப்படிந்து அடிமைபூண்டு ஒழுகியதனால், தமக்கு அதுவே நிரூபகமாக 'தொண்டரடிப்பொடி' என்றுதிருநாமம்பெற்றார். அப்பால் தொண்டரடிப்பொடியாழ்வாருக்கு ஸ்ரீரங்கநாதன் தத்துவஞானத்தைக் கொடுத்துத் தனது பரம் வியூகம் விபவம் அந்தர்யாமித்வம் அர்ச்சை என்ற ஐந்துநிலையையுந் தெளிவாகவிளக்கியருள, இவர் அவற்றில் அர்ச்சாவதாரத்திலே மிகுந்தஈடுபாடுகொண்டு, அதிலும் எம்பெருமானுகந்தருளினநிலங்களெல்லாவற்றினுள்ளும் திருவரங்கத்து நம்பெருமாளின் பக்கலிலே நாட்டம்வைத்து அப்பெரியபெருமானையல்லது பிறிதொருபொருளையறியாராய், அப்பிரானுக்கே தாம் உள்ளவளவும் துளவத்திருத்தொண்டுபூண்டு வாழ்ந்து, தமது அநுபவத்தைப் பிரபந்தமூலமாகப் பிறர்க்குத்தெரிவிக்கக் கருதி, திருமாலை, திருப்பள்ளியெழுச்சி யென்ற திவ்யநூல்களை யியற்றி, அவற்றில்

* "[illegible]மாகிநின்றபுத்தொடுசமணமெல்லாங்
கலையறக்கற்றமாந்தர்காண்பரோகேட்பரோதான்
தலையறுப்புண்டுஞ்சாவேன்சத்தியங்காண்மினையா
சிலையினாலிலங்கைசெற்றதேவனேதேவனாவான்"

என்று தமது சித்தாந்தத்தைப் பிரமாணபூர்வமாக வெளியிட்டு, திருமாலடியில் முடியிடுபவர் யமகிங்கரர்கள்முடியிலே அடியிடுந்தன்மைய ரென்ற சிறப்பையும் விளக்கி, உலகத்தாரை வாழ்வித்து, நூற்றைந்துபிராயம் ஸ்ரீரங்கத்திலேயே வாழ்ந்திருந்து, அநந்தரம் நலமந்தமில்லதோர்நாட்டை யடைந்தார்.

தன்பால் அன்பால் நிறைந்த விப்பிரநாராயணர் இராசதண்டனையினின்று மீண்டு தொண்டரடிப்பொடியாரானசெய்தியை அறிந்து, தேவதேவி, தானும் உய்வுபெறவுன்னித் தனது சகலசொத்தையும் அரங்கனுக்கே உரியதாக்கிவிட்டு, பரமசாத்துவிகையாய், கோயிலிலே திருவலகிடுதல் மெழுகுதல் ரங்கவல்லிசமர்ப்பித்தல் முதலிய அடிமைத்தொழில்களைச் சிலகாலஞ்செய்துகொண்டிருந்து, வல்வினையொழித்து, தனது சன்மத்தைச் சபலமாக்கி, முடிவில் நற்கதிநண்ணினள்.

# ௧௦. திருப்பாணாழ்வார்.

* "சீரியநான்மறைச்செம்பொருள்செந்தமிழாலளித்த
பாரியலும்புகழ்ப்பாண்பெருமாள்சரணாம்பதுமத்
தாரியல்சென்னியிராமாநுசன்றன்னைச்சார்ந்தவர்தங்
காரியவண்மையென்னாற்சொல்லொணாதிக்கடலிடத்தே."

† "காட்டவேகண்டபாதகமலநல்லாடையுந்தி
தேட்டருமுதரபந்தந்திருமார்புகண்டஞ்செவ்வாய்
வாட்டமில்கண்கண்மேனிமுனியேறித்தனிபுகுந்து
பாட்டினாற்கண்டுவாழும்பாணர்தாள்பரவினோமே."

‡ "கொண்டல்குழுமுங்குடமிழிந்துமதருந்தியகில்கொண்டு நுரைமண்டிவருநீர்த், தெண்டிரைதொழுந்தாளமுங்கலசமுஞ்சிதறு" வதும், தன்னில்நீராடியவர்க்கும் தன்கரைகளில் வாழ்பவர்க்கும் மாத்திரமேயன்றித் தனதுதீர்த்தத்தில் பரிசித்த காற்றுச்செல்லுமிடமவ்வளவும் உள்ளார்க்கும் முத்திதரவல்ல மகாப்பிரபாவத்தை யுடையதுமான பொன்னிநதி பாயப்பெறுதலாற் புனிதமான சோழவளநாட்டிலே, ராஜதானிகளுள் ஒன்றாய் நீளாதேவி தருமவர்மாவென்னுஞ்செம்பியனுக்குக்குமாரியாய் அவதரித்தவிடமான உறையூரிலே, கார்த்திகைமாதத்து ரோகிணிநட்சத்திரத்திலே §, ஸ்ரீதரனது ஸ்ரீவத்சத்தின் அம்சமாய், ஒருவர், ஓர் அந்தணருடையது கழனியிலே, நெற்பயிர்க்கதிரில் அவதரித்தார்.

பிறவாதுபிறந்த அத்தெய்வக்குழந்தையை அவ்வூரில் பஞ்சமசாதியிற் பாணர்குலத்திற் பிறந்தானொருவன் பார்த்து நல்வினைப்பயனென்றுமகிழ்ந்து எடுத்துக்கொண்டுபோய், மலடுதீர்ந்து, மருவியகாதல்மனையாளுந் தானுமாக, பசுவின்பால் முதலிய பரிசுத்த ஆகாரங்களையே கொடுத்துப் போஷித்துவந்தான்.

அங்ஙனம் வளர்ந்த இவர், திருமாலருளால்தோன்றியவராதலால், இயற்கையிலே உலகப்பற்றற்று, மதுசூதனனது பாதாம்புயத்துக்குத் தன்மனத்தை மதுகரமாக்கியிருந்ததுமன்றி, தாம் புகுந்தகுலத்துக்குரிய யாழ்ப்பாடலிலுந் தேர்ச்சிபெற்று அதனால் 'பாணர்' என்றே பேர்கூறப்பட்டு நாரதபகவான்போல ஞானவைராக்கியங்களோடு கானசாமர்த்தியமும் முதிர்ந்துநின்றார்.

---

* இராமாநுசநூற்றந்தாதி - ௧௧.
† தனியன்; திருமலைநம்பி அருளிச்செய்தது.
‡ திருவரங்கக்கலம்பகம் - ௫.
§ 'கலியுகத்தில் முந்நூற்றுநாற்பத்திரண்டுக்கு மேற் செல்லாநின்ற துர்மதிவருஷத்தில் விருச்சிக கிருஷ்ண த்விதீயை சேர்ந்த புதவாரத்தில்' என்பது, நூல்களிற் கூறிய விவரம்.

இவ்வாறிருக்கையில், விஷ்வக்சேனர் இரகசியமாக வெழுந்தருளி இவர்க்குத் திருவிலச்சினை சாதித்துச் சென்றார்.

அதனால் மகாபாகவதோத்தமரான இவர், ரங்கநாதனுக்குப் பாடற்றிருத்தொண்டு செய்ய உத்தேசித்துப் புறப்பட்டு, தாம் தாழ்ந்தகுலத்தில் வளர்ந்தவராதலால், உபயகாவேரிமத்தியிலுள்ள ஸ்ரீரங்கதிவ்யக்ஷேத்திரத்தில் அடியிடுதற்கும் அஞ்சியவராய்த் தென்திருக்காவிரியின் தென்கரையில் திருமுகத்துறைக்கெதிரிலே யாழுங்கையுமாக நின்றுகொண்டு, நம்பெருமாளைத் திசைநோக்கித்தொழுது, அவ்வாதிபாவன விஷயமாக, அநேகதிவ்யகீதங்களை, கண்டமுங் கருவியு மொக்க, கேட்பவர் செவியும் மனமும் குளிர, எம்பெருமான் திருவுள்ளமுவக்க, கின்னரகந்தருவாதியர் வியப்புற, பாடினார்.

முன்பு திருக்குறுங்குடியில் நாடோறும் பாவத் திசைய மரான யாழிசை பாடிக் கைசிக மென்னும் பண்ணின் பயனால் தன்னைச்சரணமடைந்த பிரமராக்ஷசனையுந் தீவினை தீர்த்து கரையேறுவித்துத் தானும் பிறவிப்பெருங்கடல் கடந்த 'நம்பாடுவான்' என்னுஞ் சாதிசண்டாளன்போலவே இவ்விழிகுலத்தவரும் பக்தியால் பரவசப்பட்டு நெஞ்சம் நெக்குருகக் கண்கள் ஆனந்தவருவிசொரிய உடல் புளகிக்கப் பிரதிதினமும் காவேரிக் கரையிலே வந்து இசைபாடாநிற்கையில், ஒருநாள், திருவரங்கச் செல்வனுக்குத் திருத்தமைக்கரியஞ் செய்கிற லோகசாரங்கரென்னும் பூசுரவரர் நீர்கொணர்தற்குப் பொற்குடத்தை யெடுத்துக்கொண்டு பொன்னித்துறையையடைகையில் அருகிலுள்ள இந்த அதமவருணத்தவரைப் பார்த்து அருவருத்து 'எட்டச்செல்' என்று பலமுறைபணிக்கவும், இவர் இவ்வுலகத்தொடர்பை மறந்திருந்ததனால் அம்மொழியைச்செவியுறாமல்வாளாநின்றிட்டார்.

அச்செய்தியைக் கேள்வியுற்று மூர்க்ககுணமெனக்கருதி அக்கொண்டதைவிடாமையைக் குலைக்கத்துணிந்த சாதியபிமானம் மிக்க பல இருபிறப்பாளர் ஓடிவந்து 'போ போ' என்று அநேகமுறைகூறவும் அதுசெவியிற்படாமையால் பாணர்பெருமாள் சிறிதும் பெயராது நிச்சலராய் இராகம் பாடிக்கொண்டிருந்ததைக் கண்டு அவர்களிற் சிலர் வியந்து 'இவர் ஞானயோகியல்லர்; கானயோகியேபோலும்' என்று நினைத்துப் போக, முரட்டுக்குணமுடையசிலர் 'எப்படியும் இப்பொழுது இவனை இடம்விட்டுத்துரத்தாது



விடுவதில்லை' என்று வீரவ்ரதஞ்செய்து இவர்மேல் பலகற்களையெடுத்து இடைவிடாது ஒருங்கே எறிய, அவ்வன்சிலைகள் இவருடைய மெல்லுடல்மேல் நன்குபட்டிடவும், இவர், பக்திவசப்பட்டதனால் சிறிதும் பரிசவுணர்ச்சி யின்றி, சோனமாரியாக ஏழுமேகங்களையுங் கொண்டு இந்திரன் ஏககாலத்திலே பொழிவித்த சிலாவர்ஷத்துக்குஞ் சற்றும் பின்னிடாத கோவர்த்தனகிரி போலச் சலியாதிருந்தார்.

அதுகண்டு அமரராசன்போல அனைவரும் அஞ்சி அகன்றனர்.

அப்பொழுது இவரது உடம்பிலும் உள்ளத்திலும் சிஞ்சித்தும் வருத்தங் காணப்படவில்லையாயினும், பக்தர்களது அந்தரங்கத்தில் அமர்ந்திருக்கிற அரங்கநாதனது திருவுள்ளம் மிகக்கலங்க, திருநெற்றியும் இரத்தப்பெருக்குற்றது.

அதனைநோக்கி அர்ச்சகர் அதிபயப்பட்டுக் கோயிலதிகாரிகளுக்கு அறிவிக்க, அவர்களும் இவ்வுற்பாதச்செய்தியை அரசனுக்குப் போக்கிட, அமாத்தியரோடு அநேகவிதமாக ஆராய்ந்தும் காவலன் காரணங்காணாது கவன்று சுவாமிதிருவடியிலே பாரத்தை வைத்திட்டான்.

அதற்குமுன்னே ஒருநாள், பிராட்டி பெருமானை நோக்கி 'வெகுகாலமாக நம்மை அநவரதபாவனை பண்ணிவருகிற நம்பாணன் புறம்பேநிற்கப் பார்த்திருக்கலாமோ?' என்று விண்ணப்பஞ்செய்ததற்கு, வாசுதேவபிரான் 'விரைவிலே அருகில் அழைப்பதாக வாக்களித்திருந்தார்.

அநந்தரம் அவ்வாறே இந்திரையின் இஷ்டத்தை நிறைவேற்றவும் பாணரைப் பெருமைப்படுத்தவும் அந்தணரது குலமதத்தை அடக்கவும் 'பகவத்பிராப்திக்குச் சாதியன்று பிரதானம்; பக்தியேயமையும்' என்று சாஸ்திரசித்தாந்தத்தை நடத்திக்காட்டவும் சென்னிவேந்தனது சிந்தனையை ஒழித்தருளவும் திருவுள்ளங்கொண்டு திருவரங்கேசன் லோகசாரங்கமகாமுனிந்திரரது கனவில் தோன்றி 'நமக்கு நல்லன்பரான பாண்பெருமாளை இழிவாக நினையாமல் நீர் சென்று தோள்களில் எழுந்தருளப்பண்ணிவாரும்' என்று நியமிக்க, அவர் பிராமமுகூர்த்தத்தில் கண்விழித்தவளவிலே சொப்பனத்தில் சுவாமிநியமித்ததை நினைந்து அதிசயித்து அப்படியேசெய்து தாம்பேறுபெறக்கருதி அச்செய்தியை

அத்திருப்பதியி லுள்ளார் யாவர்க்குந் தெரிவித்து அவர்களும் உடன்வரச் சென்று திருமுகத்துறையிலே தீர்த்தமாடித் தௌத வஸ்திரமுடுத்துத் துவாதசோர்த்வபுண்டர மணிந்து காவிரிக் கடன்கழித்துக் கரையேறிப் பாணர்வழக்கமாகநிற்குமிடத்திற் சென்று அவர்திருவடிகளிலே சாஷ்டாங்கமாகத் தண்டனிட்டு 'தேவரீரைத் தம்மிடத்துக்கு எழுந்தருளப்பண்ணுவித்துக் கொண்டு வரவேண்டுமென்று நம்பெருமாள் அடியேனுக்குக் கட்டளையிட்டருளினார்' என்று சொல்ல, பாணர்தலைவர் 'நீசனான அடியேன் திருவரங்கப் பெருநகரை மிதித்திடுவேனோ?' என்று தம்சாதியிழிவைச் சொல்லி மறுத்திட்டார்.

அப்பால் முனிவர்க்கரசர் 'தேவரீர் மிதித்திடவேண்டா; பெருமாள் பெரியதிருவடியின் திருத்தோளில் எழுந்தருளுதல்போலத் தேவரீர் அடியேனது தோளில் ஏறியருளும்' என்றுபிரார்த்திக்க, அது கேட்டவளவிலே யாழ்ப்பாணர் அளவிறந்தஅச்சங் கொண்டு அதனால் உடல்நடுநடுங்கிச் சொற்குழறி 'மகாபரிசுத்தமூர்த்தியான தேவரீர் அடியேன்திறத்து 'இங்ஙனங் கூறவொண்ணாது; பாகவதர்பாதத்துக்குச் சிரத்தைப் பீடமாக்குதற்குரியானோ இக்கொடுந்தொழில் புரிவேன்: இதுசெய்து பாகவதாபசாரப்படுதலினும் எரிவாய்நரகத்து அழுந்துவது நலமன்றோ?' என்று நைச்சியவார்த்தைகள் கூறினார்.

அதன்பின் அருந்தவர் பகவந்நியமனத்தை விண்ணப்பஞ் செய்து 'அது கடத்தற்குரியதன்று' என்று பகர்ந்து நிர்ப்பந்திக்க, பின்னர் வீணைப்பாடகர் கடவுள்கட்டளைக்கு யாதும் மாறுகூற மாட்டாமல் கூப்பியகையராய் அநந்தசயனனுக்கே தம்மைஅர்ப்பித்துப் பரதந்திரராய் நின்றிட்டார்.

அநந்தரம் தபோநிதி காயகசார்வபௌமரைத்தோளிலேற்றிக்கொண்டு, முக்தனாய்ப்போமவனை ஆதிவாஹிகர் எழுந்தருளுவித்துக்கொண்டு திருமாமணிமண்டபத்துக்குச் செல்லுமாறுபோலச் சென்று ரங்கநாதனதுதிருமுன்பே இறக்கிவிட்டார்.

உடனே முனிவாகனர் *இருளகற்று மெறிகதிரோன் மண்டலத்தூடேற்றிவைத்தேணிவாங்கி, யருள்கொடுத்திட் டடியவரையாட்கொள்வானை அணியரங்கனது திவ்யமங்களவிக்ரகத்தைப் பாதாதிகேசம் நேத்திரார்ந்தமாகச் சேவித்து அதில் ஆழ்ந்த அகத்தராய் அதன்அழகை அநுபவித்து அவ்வநுபவாதிசயத்தைப் பின்புள்ளார்க்கும் விசதமாக்கும்பொருட்டு 'அமலனாதிபிரான்' என்றதிவ்யப்பிரபந்தத்தைத் திருவாய்மலர்ந்தருளி அதன் இறுதியில்

* "கொண்டல்வண்ணனைக்கோவலனாய்வெண்ணெ
யுண்டவாயனென்னுள்ளங்கவர்ந்தானை
யண்டர்கோனணியரங்கனென்னமுதினைக்
௰. கண்டகண்கள்மற்றொன்றினைக்காணாவே"

என்று தமதுதுணிவை வெளியிட்டு உலகத்தாரை வாழ்வித்து மிகவும் உவப்போடு நிற்கையில், பெரியபெருமாள் அத்திருமேனியோடு அவரை அங்கீகரித்தருள, திருப்பாணாழ்வார் அமலனாங்கான அப்பிரானது திருவடிகளிலே அந்தர்ப்பவித்துச், காய்ந்த இரும்புண்டநீ ராயினார்.

கோவலன் குழலிசையாற் கோக்களை மகிழச்செய்ததுபோல அக்கோவிந்தனை யாழிசையால் மகிழ்வித்த இவ்வாழ்வார் இவ்வுலகில் வாழ்ந்திருந்தது ஐம்பதுவருஷகாலமென்ப.

லோகசாரங்கர் முதலிய பலர் இவ்வாழ்வாரை யாசிரயித்து நற்கதிபெற்றார்கள்.

† "காண்பனவுமுரைப்பனவுமற்றொன்றின்றிக்
கண்ணனையேகண்டுரைத்தகடியகாதற்
பாண்பெருமாளருள்செய்தபாடல்பத்தும்
பழமறையின்பொருளென்றுபரவுமின்கள்."

* பெரியாழ்வார்திருமொழி-முப்பத்தொன்பதாந்திருப்பதிகம் - ௧.

* அமலனாதிபிரான் - ௧௦.

† தேசிகப்பிரபந்தம் - அமிருதாஸ்வாதினி - ௯.

"முனியார் துயரங்கள் முந்திலும் இன்பங்கள் மொய்த்திடினுங்
கனியார்மனங்கண்ணமங்கைநின்றானைக்கலைபரவுந்
தனியானையைத்தண்டமிழ்செய்தநீலன்றனக்குலகி
லினியானையெங்களிராமாநுசனைவந்தெய்தினரே."

† "மாலைத்தனியேவழிபறிக்கவேண்டுமென்று
கோலிப்பதிவிருந்தகொற்றவனே—வேலை
யணைத்தருளுங்கையாலடியேன்வினையைத்
துணித்தருளவேண்டுந்துணிந்து."

பலமதங்களிலும் புகுந்து நாடிப் பரதத்துவமில்லாமை தெள்ளிதிற்றேர்ந்த திருமழிசையாழ்வார், மற்றைய சமயங்களுக்கும் வைணவ சமயத்துக்கும் உள்ள சிறுமைபெருமைகளைச் சற்றேனும் மற்றோருங் கட்புலனாகச் சந்தேகவிபரீதமறத் தெரிந்து சிறந்ததையடைந்து உய்யுமாறு அவர்களுக்கு அவ்வேற்றுமையை நன்குகாட்டும்பொருட்டு, தாம் அவ்வம்மதத்திலிருந்தபொழுது அவ்வவற்றிற்செய்த சித்தாந்தசாஸ்திரங்களையெல்லாம் யாவருங்காணக் கரைபொருதொழுகுகின்ற நீர்வெள்ளத்திலே எறிந்த சமயத்தில், பிறகொள்கைகளைப்பற்றிய நூல்களனைத்தையும் நீர்செல்லும்முறையிலே கடலிற்சென்றுசேர்ந்து, ஸ்ரீவைஷ்ணவ சம்பிரதாயக்கிரந்தங்களைமாத்திரம் நீர்ப்பெருக்கைஎதிர்த்துக்கொண்டு அதனோட்டத்துக்குமாறாக நெடுந்தூரம் எதிர்ந்துசெல்லுமாறு செய்து, சிறப்புடைமதத்தின்மகிமையை உணர்த்து வெளியிட்டு விளங்கிய தெய்வத்தன்மையையுடையவரும், ‡ கங்கையிற்புனிதமாயதுமான காவிரிநதி புனல்பரந்து பொங்கொழிக்கப்பெற்ற ஏற்றமுள்ள சோழமண்டலத்திலே, திருமங்கையென்னும்நாட்டிலே, திருவாலிதிருநகரியென்ற திவ்வியதேசத்துக்கு மிகஅருகிலுள்ள திருக்குறையலூரிலே, நான்காம்வருணத்திலே, கள்ளக்குடியிலே, சோழராசனுக்குச் சேனைத்தலைவராகவுள்ள ஒருவனது குமாரராய், ஒருத்தர், கார்த்திகைமாசத்திற்கிருத்திகாநட்சத்திரத்திலே §, சார்ங்கமென்ற விஷ்ணுகார்முகத்தின் அம்சமாய் அவதரித்தார். கிருதயுகத்தில் கர்த்தமனென்னும்பிராமணனும் திரேதாயுகத்தில் உபரிசரவசுவென்னும் க்ஷத்திரியனும் துவாபரயுகத்

* இராமாநுசநூற்றந்தாதி - கக.

† தனியன்; மணவாளமாமுனி அருளிச்செய்தது.

‡ திருமாலை - உக.

§ 'கலியுகத்தில் மூந்நூற்றுத்தொண்ணூற்றெட்டாவதான நளவருஷத்தில் பூர்ணிமைபொருந்தின வியாழக்கிழமையில்' என விவரம்.



-தில் சங்கபாலனென்னும் வைசியனுமாகத் தோன்றி உலகத்தை நல்வழிப்படுத்திப் பாதுகாத்த மகாத்துமாவே கலியுகத்தில் மன்னுலகத்து மன்னுயிர்களைச் சன்மார்க்கத்திலுய்த்தற்குச் சூத்திரசாதியில் இங்ஙனம் உதித்ததாக நூல்கள் நுவலாநிற்கும். இப்படி பிறந்த இவர் மூலமூர்த்திபோல நீலநிறமுடையாராயிருந்ததனால், இவருக்குத் தந்தை நீலனென்று நாமமிட்டான். இவர் தம் குடிக்குச் சிறப்பு இளமையிலேயே ஆயுதவித்தையில் தேர்ச்சிபெற்று அரசனையடுத்துச் சேனாபதியுத்தியோகத்திலமர்ந்து கொற்றவனுக்குக் கொடியவரோடு கடும்போர்நேருங்காலங்களில் படைகளோடு முன்சென்று பராக்கிரமத்தால் பகைவென்று பரகாலனென்று பேர்பெற்றுப் பலமுறை வாகைசூடி வந்தார். அவ்வாற்றலையுணர்ந்த அபயராசன் இவரை அந்நாட்டுக்கு அரசனாக்கி முடிசூட்டினான். இவ்வாறு குலதிலத்தலைமைபூண்ட மங்கையர்கோமான் இராசாங்ககாரியத்தைக் குறைவறநடத்திப் புகழ்பெற்று இசைநாடகங்களில் பிரியமுடையாராய் எப்பொழுதும்பலஇளமங்கையர் இன்னிசைபாடக் கேட்டலையும் நன்னடம்பயிலக்காண்டலையுமே பொழுதுபோக்காகக் கொண்டிருந்தார்.

இங்ஙனமிருக்கையில், அந்நாட்டில் திருவெள்ளக்குளமென்ற திருப்பதியில் மானசசரசையொத்த தொரு தாமரைப்பொய்கையில் தேவமாதர்பலர் வந்து சலக்கிரீடைசெய்து செல்ல, அவ்வமரமாதரில் திருமாமகளென்பாள் தன் இச்சையால் தெய்வவடிவத்தைவிட்டு மானுடப்படிவங்கொண்டு தனியே குமுதமலர்கொய்துநின்றாள். நின்றுழி அங்கு அநுட்டானமுடித்தற்பொருட்டு வந்தாரொருவைணவவைத்தியன் கண்டு செய்திவிசாரிக்க, அவள் 'உடன்வந்தமடமகளிரால் விடப்பட்ட என்னை நீர் பாதுகாத்தருளும்' என்றுவேண்ட, மடவரலை அம்மருத்துவன் மகிழ்ச்சியோடு அதற்குடன்பட்டு அம்மகளைத் தன்மாளிகைக்கு அழைத்துப்போய் மனையாள்வசம் ஒப்பித்து, குமுதமலர்கொண்டு நின்றதுகாரணமாகக் குமுதவல்லியெனநாமகரணஞ்செய்து, வளர்த்துவந்தான். வருகையில், அக்கன்னிகைக்கு விவாகத்துக்குரியபிராயம் வந்திட்டவளவிலே, அவள்பிதாவுக்கு 'மகாகுணசீலியான இவ்வணங்குக்கு ஏற்ற ஆடவன் உலகத்திலுளனோ?' என்றகவலையும் உடன்வந்தது. அப்பொழுது அவளுடையரூபலாவண்ணியசௌந்தரியங்களையுங் குணாதிசயங்களையுஞ் சாரர்கள் நீலனிடங் கொண்டாடிக்கூற, உடனே அவர் அவளழகைப்பார்த்தற்கு ஆதரங்

கொண்டு இராச்சியகாரியங்களை இருந்தவிருந்தபடியே விட்டுத் திருநாங்கூருக்குவந்து அந்தப்பாகவதன்கத்திற்புக்கு அவனோடு சம்பாஷித்துக்கொண்டிருக்கையில் அந்தமாதுசிரோமணி கண்ணெதிர்ப்படக் கண்டு வியந்து காதல்மிஞ்சி அவ்வரலாற்றை வினவித் தந்தையால் அறிந்தவளவில், அத்தாதையைநோக்கி 'இவளை நமக்கு இல்லாளாக்கவேணும்' என்று வரித்து வஸ்திரபூஷணாதிகளை மிகுதியாகமுன்வைத்து வணங்கிக் கேட்டார். அதற்கு இசைந்து தந்தையார் அவருக்குக் கன்னியாதானஞ்செய்யவிருக்கையில், குமுதவல்லி குறுக்கிட்டு 'தப்தசக்ராங்கனம் இவ்வியோர்த்துவபுண்டரம் முதலிய பஞ்சசம்ஸ்காரமுடைய வைணவர்க்கொழியப் பிறர்க்கு வாழ்க்கைப்படேன்' என்று தன்கருத்தைத்தெரிவித்தாள். அதுகேட்டதும் ஆலிநாடர் வெகுவிரைவாகத் திருநறையூருக்குச் சென்று அங்குஎழுந்தருளியுள்ள நம்பியென்னுந் திருநாமமுடைய எம்பெருமானது திருமுன்பே நின்று பிரார்த்தித்து அப்பிரான்பக்கல் சங்கசக்கரமுத்திரைகளைப் பெற்றுத் தூவாதசோர்த்துவபுண்டரங்களையு முடையராய்க் கடிமணஞ்செய்துகொள்ளக் கடிதினில்வந்துசேர, கண்டு மீண்டும் அந்நங்கை 'நீர் ஓராண்டளவும் நித்தியமாக ஆயிரத்தெட்டுஸ்ரீவைஷ்ணவர்களை அமுதுசெய்வித்து அவர்களுடைய திருவடித்தீர்த்தத்தையும் போனகஞ்செய்தசேடத்தையும் உட்கொண்டாலலன்றி உம்மை நான் கொழுநராக ஏற்றுக்கொள்ளேன்' என்று நியமங்கூற, அவர் அவள்திறத்துக்கொண்ட வேட்கைமிகுதியால் அவ்வரியவிரதத்தைச் செய்துமுடித்தற்கும் உடன்பட்டு அங்ஙனமே செய்வதாகச் சபதஞ்செய்துகொடுக்க, அதன்பின் இருவர்க்கும் திருமணச்சடங்கு நடந்தது.

பின்பு பரகாலர் பாகவதசார்த்தத்திலும் பரமபாவனமான பாகவதாராதனத்தைச் செய்துகொண்டு தம் அரசனுக்குச் செலுத்தவேண்டும்பகுதிப்பொருளுமுட்படச் செல்வமுழுவதையுஞ் செலவிட்டுவருகிற செய்தியைச் சென்னிமன்னன் சிலர்சொல்லச் செவியுற்றுச் சினங்கொண்டு இவர்பக்கல் திறைவாங்கிவரும்பொருட்டுத் தன்ஏவலாளரை யனுப்பினான். அவர்கள் வந்து கேட்டதற்கு, இவர் 'காலை, நண்பகல், மாலை, இரவு, நாளை, பின்னிட்டு' என்பதாகச் சிலதவணைகளைச் சொல்லிக்கொண்டு காலநீட்டித்துவந்தார். பின்பு இராசபரிசனங்கள் இறைப்பொருளிறுக்குமாறு நிர்ப்பந்திக்க, இவர் வெகுண்டு அவர்களை வெருட்டித் துரத்தினார். அதனை



யறிந்து அரசன் சேனைமுதலியத் தனதானைத்தலைவனை விளித்து 'நீ சென்று பரகாலனைப் பிடித்துவா' என்றுநியமிக்க, அவன் அங்வாறே பலசேனைகளோடு வந்து இவரை வளைத்துப் பிடிக்கத் தொடங்க, இவர் ஆடல்மாவென்னும் தமது குதிரைநம்பிரான்மேல் ஏறிக்கொண்டு அநீகத்தோடு முன்சென்று எதிர்த்துப் பொருது அவனைப் புறங்கொடுத்தோடச்செய்ய, அதுகேட்டுக் காவலன் சேனாசமூகத்தோடு வந்து இவரை வளைய, இவர் தம்படைவலிமையால் அப்படைக்கடலைக் கடந்து தமது திறமையைக் காட்டிப் பொருகையில், தாம் அருள்மாறியாதலால் இறைமகனைக் கொல்லலாகாதென்று நினைவுபொறுத்து போர்நிறுத்தினார். அதுவே சமயமாக அரசன் தந்திரமாய் நல்வார்த்தைசொல்லிக் கொண்டு அருகில்வந்து 'உமதுசௌரியபராக்கிரமங்களைக்கண்டு மிகமகிழ்ந்தோம்' என்று சிலாகித்து 'சீக்கிரத்தில் கப்பஞ்செலுத்திவிடும்' என்று இவரை மந்திரிவசமாக்கிவிட்டு மீண்டான். அவ்வமைச்சன் இவரைப் பகுதிக்காகப் பிடித்து ஒருதேவாலயத்திற்சிறைவைக்க, இவர் அங்கு உணவில்லாமல் மூன்றுநாள் பட்டினிகிடவாநிற்கையில், காஞ்சீபுராதிபரான பேரருளாளப்பெருமான் இவரது சொப்பனத்திலே பிரசன்னராய் 'உமக்குவேண்டிய பொருள் தருகிறோம், வாரும்' என்று சொல்லியருளினார். இவர் அக்கனவை நனவாகவே நம்பிக் கடவுளருளைக்குமகிழ்ந்து பொழுதுபுலர்ந்ததும் மந்திரியைநோக்கி 'காஞ்சிநகரியிலே நிதியிருக்கிறது; அங்குவந்தால், தருவேன்' என்றுகூற, அவ்வமாத்தியன் அதனை அரசனுக்கு அறிவித்து அனுமதிபெற்றுப் பலபரிவாரங்களாற்காவல்செய்துகொண்டு கச்சிப்பதிக்கு இவரை அழைத்து வந்தான். அங்கு இவர் நிதிதேடிக் காணாமையாற் கவலைக்கடலில் மூழ்கிமூர்ச்சித்தவளவிலே, கருணாகரரான வரதராஜஸ்வாமி மீண்டும் கனவில் எழுந்தருளி அபயமளித்து வேகவதிநதிக்கரையில் நிதிவைப்புள்ளவிடத்தைக் குறிப்பிட்டு அருளிச்செய்தபின், தெளிந்தெழுந்து பொருள்கண்டெடுத்து அரசன்கடமையைச் செலுத்தி, மிகுந்தவளத்தைப் பாகவதாராதனத்துக்கு வைத்துக்கொண்டார். பின்பு மந்திரி திரவியத்தைக் கொண்டுபோய்ப் புரவலன்முன்னிலையில் வைத்து நிகழ்ந்தவரலாறனைத்தையும் விளம்பக் கேட்டுப் புலிக்கொடிவேந்தன் இவர்மகிமையைக்கருதி அச்சமும் வியப்புங் கொண்டு உடனே இவரை வரவழைத்து விசேஷமாக உபசரித்து, தான்செய்தபிழைகளையெல்லாம் பொறுத்தருளுமாறு பலவாறு

பிரார்த்தித்து, அநந்தரம், 'இரைபதிக்குப் புடைவைகார்த்தருபோல மாயவனருளாற் பெருமிப்பொருளைத் திரவியசாலையில் வைக்கலாகாது' என்று ஆலோசித்து அப்பொருள்முழுவதையும் இவரைப்பட்டினிவைத்தபாவந் தீரும்பொருட்டு அநேகபாகவதர்களுக்குங் கொடுத்துப் பரிசுத்தனானான்.

பிறகு பரகாலர் சொத்தபிரவியங்கொண்டு ததியாராதனம் நடத்திவருகையில், எல்லாம் செலவாய்விட்டதனால் கைப்பொருளொன்றுமின்றி, வழிபறித்தாகிலும் பொருளீட்டி அக்கைங்கரியத்தைத் தடையற நடப்பிக்கத் துணிந்து, நீர்மேல்நடப்பான், நிழலொதுங்குவான், தாளூதுவான், தோலாவழக்கன் என்ற நால்வரை உற்றதுணைவராகவுடன்கொண்டு, ஆங்காங்குச்சென்று வழிச்செல்வோரைக் குறையாடிக் கொணர்ந்தபொருளால் திருமாலடியார்களைப் பூசிக்கும் தொண்டைநோற்றுவந்தார். இவர் கொள்ளைகொள்வதும் வைணவர்களை வழிபடுதற்கேயாதலால், ஸ்ரீமந்நாராயணன் இவர்செயலைத் தீமையாகத் திருவுள்ளம் பற்றாமல் நல்வினையாகவே நயந்து இவர்க்கு விசேஷகடாக்ஷம்பண்ணி இவரையங்கீகரிக்கவேணுமென்று நினைத்து, இவர் தன்னைவழிபறிக்குமாறு தானொருபிராமணவேடங்கொண்டு பலவணிகலங்களைப்பூண்டு மணவாளக்கோலமாய் மனைவியுடனே இவரிருக்குமிடவழியிலே யெழுந்தருள, திருமணங்கொல்லையில் திருவரசமரத்தின்கீழ்ப் பதுங்கியிருந்த குமுதவல்லிமணாளர் கண்டுகளித்து ஆயுதபாணியாய்ப் பரிகரத்துடனே வந்து அவர்களைவளைந்து வஸ்திராபரணங்களையெல்லாம் அபகரிக்கையில், அம்மணமகன்காலில் அணிந்துள்ள மோதிரமொன்றைக் கழற்றமுடியாமையால் அதனையும் விடாமல் பற்களாலே கடித்துவாங்க, அம்மிடுக்கைநோக்கி எம்பெருமான் இவர்க்கு 'கலியன்' என்று ஒருபெயர்கூறினார். பின்பு இவர் பறித்த பொருள்களையெல்லாம் சுமையாகக் கட்டிவைத்து எடுக்கப்பார்க்க, அப்பொருட்குவை இடம்விட்டுப்பெயராமல் பர்வதம்போல அசலமாயிருந்ததைப் பார்த்து ஆச்சரியப்பட்டு, ஆலிநாடர் அவ்வந்தணனை நோக்கி 'நீ என்னமந்திரவாதம் பண்ணினாய்?' என்று விடாதுதொடர்ந்து நெருக்க, அப்பொழுது, பதிகனான சருவேசுவரன் 'அம்மந்திரத்தை உமக்குச்சொல்லுகிறோம், வாரும்' என்று அருகிலழைத்து, சகலவேதசாரமாய்ப் பிறவித்துயரறுத்துப் பரமபதமளிப்பதாய்ச் சிறந்த அஷ்டாக்ஷரமகாமந்திரத்தை முன்பு நரநாராயணனாய்த் தனக்குத்தானே சொல்லிக்



கொண்ட குறைதீர இவர்செவியிலே உபதேசித்தருளி, உடனே கருடாரூடனாய்ப் பொன்மலைமீது மின்னுடன் விளங்குங் கார்முகில்போலக் கருணைவடிவமான திருமகளோடு இவர்முன் எழுந்தருளிச் சேவைசாதித்தான். அத்திவ்வியமங்களவிக்கிரகத்தைத் தரிசித்ததனாலும், முன்புகாலாழிவாங்கியபொழுது பகவத்பாதாரவிந்தத்தில் வாய்வைத்ததனாலும் கலியன் அஞ்ஞானாந்தகாரம் ஒழிந்து தத்துவஞானச்சுடருதிக்கப்பெற்றுப் பகவானைப் பரிபூர்ணாநுபவம்பண்ணி அவ்வானந்தமேலீட்டை வெளியிடுமாறு ஆசு மதுரம் சித்திரம் விஸ்தாரம் என்னும் நால்வகைக்கவிகளையும் பாடவல்ல பாண்டித்தியமுடையராய் "வாடினேன் வாடிவருந்தினேன்" என்றுதொடங்கிப் பாடலுற்று

*"குலந்தருஞ்செல்வந்தந்திடுமடியார்படுதுயராயினவெல்லாம், நிலந்தரஞ்செய்யுநீள்விசும்பருளுமருளொடுபெருநிலமளிக்கும், வலந்தருமற்றுந்தந்திடும்பெற்றதாயினுமாயினசெய்யு, நலந்தருஞ்சொல்லைநான்கண்டுகொண்டேன்நாராயணாவென்னுநாமம்" என்று தமது அநுபவத்தை வெளியிட்டு வடமொழிவேதங்கள் நான்கிற்கும் ஆறங்கங்களமைந்திருக்கின்றதுபோல, அவ்வேதங்களின் உட்பொருளால் நம்மாழ்வார் அருளிச்செய்த நான்குதிவ்வியப்பிரபந்தங்களுக்கும் தமதுபிரபந்தங்கள் அங்கங்களாக அமையும்படி பெரியதிருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், திருவெழுகூற்றிருக்கை, சிறியதிருமடல், பெரியதிருமடல் என்ற ஆறுதிவ்வியநூல்களைத் திருவாய்மலர்ந்தருளி 'திருமங்கையாழ்வார்' என்று திருநாமம்பெற்றார்.

அவற்றில் முதலிற் பெரியதிருமொழிபாடுகையில்; திவ்வியதேசயாத்திரையாகச் சென்று ஆங்காங்குப் பெருமானை மங்களாசாசனஞ்செய்து திருப்பதிகம்பாட உத்தேசித்து, ஆழ்வார், திருப்பிருதி பதரிகாச்சிரமம் சாளக்கிராமம் நைமிசாரணியம் சிங்கவேழ்குன்றம் திருவேங்கடம் என்னும் வடநாட்டுத்திருப்பதிகளிற் சென்று சுவாமிதரிசனஞ்செய்து பாசுரம்பாடி, தொண்டைநாட்டுத்திருப்பதிகளுள் திருவெவ்வுளூருக்குவந்தபின் திருநின்றவூரைச்சேர்ந்தார். அத்திருப்பதியிலெழுந்தருளியுள்ள பத்தராவிப்பெருமாள் அப்பொழுது ஆழ்வாருக்கு முகங்கொடாமல் பிராட்டியோடு சரசசல்லாபஞ்செய்துகொண்டு பராமுகமாயிருக்க, பரகாலர் அப்பால் திருவல்லிக்கேணிக்கு வந்து அங்குளெழுந்தருளியுள்ள

* பெரியதிருமொழி - முதல்திருப்பதிகம் - க.

ஐந்து எம்பெருமான்களையுஞ் சேவித்துப் பதிகம்பாடித் திருநீர்மலைசேர்ந்து அவ்வெம்பெருமான்பக்கலிலே மிகவும் ஈடுபாடு கொண்டு அநந்தரம் திருக்கடன்மல்லையையடைந்து பெருமானைச் சேவித்தாநின்றார்; அப்பொழுது, திருநின்றவூரெம்பெருமான் திருமகளால் தூண்டப்பட்டு இவர்வாயால் பாடல்பெறும்அச் சிறப்புறக்கருதிக் கடன்மல்லையிற் காட்சிகொடுக்க, கலியன் அப்பிரானையும் அங்கே கண்ணாரக்கண்டு களித்து அவ்வூர்ப்பதிகத்திலே "நின்றவூர் நித்திலத்தைத் தொத்தார்சோலைக், காண்டவத்தைக் கனலெரிவாய்ப்பெய்வித்தானைக் கண்டதுநான்கடன்மல்லைத்தலசயனத்தே" என்று பாடினார்.

இவ்வாறேமற்றுஞ்சிலதொண்டைநாட்டுத்திருப்பதிகளையும் நடுநாட்டுத்திருப்பதிகளிரண்டையுங்கடந்து, சோழநாட்டுத்திருப்பதிகளில் தில்லைத்திருச்சித்திரகூடம்பாடியபின் சீர்காழிவழியாக வெழுந்தருளுகையில், முழக்கப்படு பரிசனங்கள் இவர்முன்னே 'நாலுகவிப்பெருமாள் வந்தார், நங்கலியர் வந்தார், ஆலிநாடர் வந்தார், அருள்மாரி வந்தார், மங்கைவேந்தர் வந்தார், பரகாலர் வந்தார், பரவாதி மத்தகஜகண்டீரவர் வந்தார், நீலிறத்தமிலர்வந்தார்' என்று பலவிருதாவளிகளை எடுத்தேத்திக்கொண்டு செல்லாநிற்க, அவ்வூரிலுள்ள திருஞானசம்பந்தமூர்த்திநாயனாரென்கிற சைவசமயாசாரியருடைய அடியார்கள் வந்து 'எங்கள்நாயனாருள்ளவிடத்திலே நீவிர் விருதூதிச்செல்லலாகாது' என்று தடுக்க, அதுகேட்டுப் பரகாலர் சம்பந்தருள்ளவிடத்தே சென்று அவரோடு வாதப்போர்செய்யத் தொடங்குகையில், நாயனார் 'உமது கவித்திறத்தை யான்காணுமாறு முன்னர்ப் பாடல்பாடும்' என்றுசொல்ல, உடனே ஆழ்வார் "ஒருகுறளாய்" என்றுதொடங்கி அவ்விடத்துக்கு அருகிலுள்ள காழிச்சீராமவிண்ணகரமென்ற திருப்பதியிலுள்ளதாடாளப்பெருமான்விஷயமாகப்பதிகம்பாடக் கேட்டு, ஞானசம்பந்தர், மிகஅதிசயித்து 'உமக்கு இவ்விருதுகள் யாவுந் தகும்' என்றுசொல்லித் தமதுவேலை இவர்க்குத்திருமுன்காணிக்கையாகச் சமர்ப்பித்து நன்குமதித்து உபசரித்து வழிபட்டு வழிவிட்டு மீள, அம்மெய்யடியவர் வெற்றிவேல்பறித்துக்கொண்ட தமதுகொற்றம் முற்றுந் தோன்ற

"செங்கமலத்தயனனையமறையோர்காழிச்
சீராமவிண்ணகரின்செங்கண்மாலை



யங்கமலத்தடவயல்சூழாலிநாட
னருண்மாரியரட்டமுக்கியடையார்சீயங்
கொங்குமலர்க்குழலியர்வேண்மங்கைவேந்தன்
கொற்றவேற்பரகாலன்கலியன்சொன்ன
சங்கமுகத்தமிழ்மாலைபத்தும்வல்லார்
தடங்கடல்சூழுலகுக்குத்தலைவர்தாமே."

என்று தமது பாயிரத்தோடு பதிகத்தை முடித்துச் சயபேரிகைமுழங்க அப்பாற்சென்று, தமது சனனபூமிக்கு அடுத்த திருவாலியைச் சார்ந்து, திருநாங்கூர்த்திருப்பதிகள் முதலியவற்றை நண்ணியபிறகு, திருவிந்தளூரை யடைந்தார். அப்பொழுது, அவ்விடத்து எம்பெருமான் ஆழ்வார்க்குத் தன்னை ஒருகாற்காட்டி மறைய, அவர் திருப்திப்படாமல் மனக்குறையோடு "வாசிவல்லீரிந்தளூரீர் வாழ்ந்தேபோம் நீரே" என்று தமது குறைபாடு தோன்றப் பாடி, அதற்கு இரங்கிப் பெருமான் நிரந்தரசேவை கொடுக்கப்பெற்று நிரம்பியமனத்தராய், பலதிருப்பதிகளின் வழியாகத் திருவரங்கத்தைச்சேர்ந்து, நம்பெருமாள்பக்கலிலே மிகுந்த ஈடுபாடுகொண்டு பலபதிகங்கள்பாட, அதுகேட்டுத் திருவுள்ளமுவந்து அவ்வெம்பெருமான் திருமுகமலர்ச்சியோடு ஆழ்வாரைக் குளிரநோக்கி 'நமக்கு விமானம் மண்டபம் கோபுரம் பிராகாரம் முதலிய கைங்கரியங்களைச் செய்யும்' என்று கட்டளையிட்டருளினான்.

ஆலிநாடர் அவ்வாணையைச் சிரமேற்றாங்கி அங்ஙனமே திருப்பணிபுரியவிரும்பித் தமக்கு அந்தரங்கரான அமைச்சர்நால்வரையும் அழைத்து இரகசியமாகவிருந்து 'ஸ்ரீரங்கநாதனுக்குத் திருமதிள் தொடக்கமான கைங்கரியங்களைப் பண்ணும்பொருட்டுப் பொருளீட்டுமாறு யாது விரகு செய்யலாவது?' என்று ஆலோசிக்கிறவளவிலே, மந்திரிகள் 'நாகபட்டணத்தில் பொன்மயமானதொரு புத்தவிக்கிரகம் பௌத்தர்களால் அமைக்கப்பட்டதோராலயத்தில் அவர்கள் கொண்டாட்டத்துக்கு இலக்காயுள்ளது; அதனைக் களவாடிக் கொண்டுவந்திடுவோமாயின், பலபணிகளையும் நடத்திமுடிக்கச் சிறிதும் பொருட்குறைபாடு இராது' என்று உபாயங்கூறினார்கள். அவ்வுறுதிமொழியைச் செவியுற்றவுடனே களிப்புக்கொண்டு பரகாலர் பரிவாரங்களுடன் புறப்பட்டு நாகபட்டணமடைந்து அங்கு அதிவிசித்திரமான சிற்பவேலையையுடைய ஆலயத்தைக் கண்டு அதனுள்நுழைதற்கு எங்ஙனம்

வழி அகப்படாமையால் நினைத்துச் சுற்றியும்பார்த்துவருகையில், அதன்சிகரத்தில் சக்கராகாரமான இயந்திரவிசேடம் இடைவிடாது சுழன்றுகொண்டிருத்தலைப் பார்த்து அதனை நிறுத்துதற்கேற்ற சூழ்ச்சி செய்து அநேகம்வாழைத்தண்டுகளைக் கொணர்ந்து சிறிதுசிறிதாகத் தறித்து இடைவிடாதுகொடுத்துவர, அதன்கால்கள் கடுமிற்சுற்றிக்கொண்டதனால், அந்நேமிப்பொறி அசையாது நின்றுவிட்டது. அதன்பின் ஆழ்வார் தமதுசீடர்களுள் வல்லாரொருவனை அவ்வழியாய் உள்ளேசெலுத்த, அவன் சென்று கனகவிக்கிரகத்தைக் கவரத்தொடங்குகையில், அந்தப்பிம்பம் அவன்கைக்கு அகப்படாதபடி நிலைபெயர்ந்து அச்சிலைகர முழுவதிலுந் திரிந்து ஓட்டங்காட்டியது. அதுநோக்கி அவன் யாது செய்வதென்று சிறிதுபொழுது கலங்கிநின்று, உடனே வெளியிலிருந்து திருமங்கைமன்னர் சொல்லிக்கொடுத்த உபாயத்தின்படி அவ்வுருவத்தை அபரிகத்தமாய் விடுதலும், அது சற்றுக் குனிந்து

"ஈயத்தாலாகாதோவிரும்பினாலாகாதோ
பூயத்தான்மிக்கதொருபூதத்தாலாகாதோ
தேயத்தேபித்தளைநற்செம்புகளாலாகாதோ
மாயப்பொன்வேண்டுமோமதித்தென்னைப்பண்ணுகைக்கே"

என்று புலம்பிக்கொண்டு ஒருசார் விழுந்திட்டது. பின்பு அச்சீடன் அதனை யெடுத்துக்கொடுக்க, பரகாலர் அதியானந்தத்தோடு பெருநிதியாகக் கொண்டுவந்து அவ்விக்கிரகத்தையுருக்கி அந்தப்பொன்னை விலைப்படுத்திப் பெற்றபொருளால்திருமதில் முதல் திருப்பணிகளான கைங்கரியங்களைச் செய்வித்துவருகையில், மதில்கட்டுகிறபொழுது, தொண்டரடிப்பொடியாழ்வார் திருமாலை சேர்க்கிறஇடம் நேர்பட, அதனைச்சிதைக்கமனங் கொள்ளாமல் ஒதுக்கிக்கட்டுவித்தார். இங்ஙனம் மற்றுமுள்ள கைங்கரியங்களையுஞ் செவ்வனே முடித்தபின்னர் நம்பெருமான்பக்கல் விடைபெற்று மீண்டும் திவ்யதேசயாத்திரைதொடங்கித் தென்திருப்பேர், நந்திபுரவிண்ணகரம், திருவிண்ணகரம் என்ற இத்தலங்களை மங்களாசாசனஞ்செய்தபின், திருக்கறையூரைச் சேர்ந்து, நம்பிவிஷயமாக ஆயபாசுரம் விண்ணப்பஞ்செய்து, திருச்சேறை, தேரழுந்தூர், சிறுபுலியூர் என்னும் பதிகளைக் கடந்து, திருக்கண்ணமங்கைக்கு அத்திருப்பதியெம்பெருமானைப் பதிகம் பாடித் துதிக்கையில், திருநின்றவூர்ப்பத்தராவிப்பெருமான் முன்



பு ஒருபாடல்பெற்றதுபோதாதென்று மீட்டும் என்னைப்பெற்றஅன்னையால் ஞாபிக்கப்பட்டு ஆழ்வாரெதிரில் வந்துகாட்சியளிக்க, ஆலிநாடர் "நின்றவூர்நின்றநித்திலத்தொத்தினைக்கண்ணமங்கையுட்கண்டுகொண்டேனே" என்று அப்பிரானையுஞ் சேர்த்துத் துதிசெய்தார்.

அப்பால் திருக்கண்ணபுரம், திருக்கண்ணங்குடி, திருநாகையென்னும் சோழநாட்டுத்திவ்வியதேசங்களையும், திருப்புல்லாணி, திருக்குறுங்குடி என்னும் பாண்டியநாட்டுத்தலங்களையும், திருவல்லவாழென்ற மலைநாட்டுத்திருப்பதியையும் தரிசித்து, பின்னும் தென்னாட்டில் திருமாலிருஞ்சோலை, திருக்கோட்டியூர் முதலானவற்றைத் தொழுது, மற்றும் பலதிருப்பதிகளை வணங்கி, திருமாலின்அர்ச்சாவதாரங்களோடு விபவாவதாரங்களையுஞ் சருதி உள்ளங்கரைந்து பலதிருப்பதிகங்கள்பாடிப் பெரியதிருமொழியை முடித்தார்.

முடித்தும் தமது ஆராதஅன்புஅடங்காமையால் மற்றும் ஐந்துபிரபந்தங்களை அருளிச்செய்து, அநந்தரம் ஸ்ரீரங்கத்துக்கு எழுந்தருளி, ரங்கநாதன்சந்நிதியிலே திருநெடுந்தாண்டகத்தைத் தேவகானத்திலே பாட, அதற்குத் திருவுள்ளமுகந்து நம்பெருமாள் 'உமக்குவேண்டும் வரம் பெற்றுக்கொள்ளும்' என்று நியமித்தவளவிலே, நாலுகவிப்பெருமாள் 'முன்பு தேவரீர் நம்மாழ்வார்முகமாக வெளிப்படுத்திய தமிழ்வேதங்கள்நான்கையும் மார்கழிமாதத்தில் தேவரீர்கண்டருளுகிற அத்தியயநோற்சவத்தில் கீர்வாணவேதங்களோடு பாராயணஞ்செய்யுமாறு கட்டளையிட்டருளவேணும்' என்று பிரார்த்திக்க, பெருமாள் அங்ஙனமே அருள்புரிந்தார். அவ்வாணையின்படி, ஆலிநாடர், அர்ச்சாரூபமான நம்மாழ்வாரைத் திருநகரியினின்று கோயிலுக்கு எழுந்தருளப்பண்ணி உபயவேதபாராயணத்தையும் ஒழுங்காகநடக்கச்செய்து அத்தியயனத்திருவிழாவைச் சிறப்பாகச் செய்வித்து, அதுமுடிந்தவாறே பராங்குசரை மீண்டும் குருகூருக்கு எழுந்தருளப்பண்ணுவித்தார்.

இங்ஙனமே பிரதிவருஷமும் அத்திருநாளைப் பரிபாலிக்கும்படி கட்டளைசெய்திட்டு, மங்கையர்கோமான், மகேந்திரகிரிக்கருகே சித்தாச்சிரமமென்று பிரசித்தமான திருக்குறுங்குடியில் வந்து நம்பியினுடையஅழகை யநுபவித்து அங்கு நித்

இவ்வாறு செய்து நினைவிழந்து குருகைவல்லியாருடனே விரக்தராய்ச் சிலகாலம் யோகநிஷ்டையிலெழுந்தருளியிருந்து, தமது ஆம்பத்தாம்பிராயத்தில், சமாதி யென்கிற மகாயோகத்தால் திருமேனிவிடுத்துத் தேசோமயமான திவ்யநகரஞ் சேர்ந்திட்டார்.

வழிபடிப்பு முதலிய அதிருத்தியங்கள்பலவற்றைச் செய்தாலும், அச்செல்வம் முழுவதையும் பகவத்பாகவத கைங்கரியத்திலே உபயோகித்ததனாலும், அவ்வனைவர்பொருளை அபகரித்து வைணவர்க்கு உபகாரஞ்செய்ததனாலும், புகழ் புண்ணியங்களையே பயன்றிப் பழிபாவங்களைச் சிறிதும் பெறாது பெருமானுக்கு மிகுந்த முகோல்லாசத்தைச் செய்து சிறந்த இவ்வாழ்வார், தமது திவ்வியப்பிரபந்தங்களால் உலகத்தை நல்வழிச்செலுத்திக் கலிதோஷத்தைக் கடிந்ததனால், இவர்க்கு 'கலிகன்றி' என்னும் ஒரு திருநாமம்.

* "நெஞ்சுக்கிருள்கடிதீபமடங்காநெடும்பிறவி
நஞ்சுக்குநல்லவமுதந்தமிழ்நன்னூற்றுறைகள்
அஞ்சுக்கிலக்கியமாரணசாரம்பரசமயப்
பஞ்சுக்கனலின்பொறிபரகாலன்பனுவல்களே."

* தனியன்; கூரத்தாழ்வான் அருளிச்செய்தது.



"எய்தற்கரியமறைகளையாயிரமின்தமிழால்
செய்தற்குலகில்வருஞ்சடகோபனைச்சிந்தையுள்ளே
பெய்தற்கிசையும்பெரியவர்சீரையுயிர்களெல்லா
முய்தற்குதவுமிராமாநுசனெம்முறுதுணையே."

"வேறொன்றுநானறியேன்வேதந்தமிழ்செய்த
மாறன்சடகோபன்வண்குருகூர்—ஏறெங்கள்
வாழ்வாமென்றேத்துமதுரகவியாரெம்மை
யாள்வாரவரேயரண்."

சந்தனப்பொதியச் செந்தமிழ்த்தடவரையையுடைய தென்னாட்டிலே, நம்மாழ்வாரவதாரஸ்தலமான திருக்குருகூருக்கு அருகிலுள்ளதும் வைத்தமாநிதிப்பெருமாள் 'எண்வளர்த்தருளுந் திவ்யதலமுமான ‡தென்திசைத்திலதமனைய திருக்கோளூரிலே, சித்திரைமாதத்தில், சித்திரைநக்ஷத்திரத்திலே §, கணசரான குமுதரது அம்சமும் கருடாழ்வானது அம்சமுமாய், ஒருவர், ஒருபூர்வசிகைப்பிராமணருக்குப் புத்திரராய் அவதரித்தார். சூரியோதயத்துக்குமுன் கிழக்கில் காணப்படுகிற அருணோதயம் போலப் பராங்குசர் உதித்தற்குமுன் தென்றேயத்தில் தோன்றிய இவர், நான்குவேதமும், ஆறுவேதாங்கமும், மீமாம்சை தர்க்கம் புராணம் தருமநூல் என்னும் நான்கு உபாங்கமு மாகிய பதினான்குசாஸ்திரங்களையும் பால்யத்திலேயே பயின்று செவிக்கினிய செஞ்சொற்கவிகளைப் பாடவல்லராய் அதனால் 'மதுரகவி' என்று திருநாமம் பெற்று, மெய்யுணர்வினால் அளவற்ற மகாவிரக்தராய் விஷ்ணுபக்தியிஞ்சி யோகசித்தியடையுந் தேர்ந்து, தீர்த்தயாத்திரை திவ்யதேசயாத்திரைகளில் திருவுள்ளமுடையாராய்ப் புறப்பட்டுச் சஞ்சரிக்கலுற்று, || "தேனமர்சோலைக்கற்பகம்பயந்த தெய்வநன்னறுமலர் கொணர்ந்து, வானவர் வணங்குங் கங்கையின் கரைமேல்வதரியாச்சிரமம்" முதலிய வடநாட்டுத்திருப்பதிகளைச் சேவித்துக்கொண்டு, பரமபதமுனும் பிரதானபட்டண மேழுனுள் முதலதான திருவயோத்தியையடைந்து, ¶ "மானதமடுவிற்றோன்றிவருதலாற்சரயுவென்றே,மேன்முறையமரர்போற்றும் விழுநதியுதனிறாடு" நீராடி, முன்பு விபவாவதார மெடுத்து முடித்துத் தன்னுடைச்சோதிக்கு எழுந்தருளியவன்று சராசரங்களை வைகுந்தத்தேற்றிய இடமான அந்தச்சாகேதநகரத்தில் அர்ச்சாவதாரரூபமாய் எழுந்தருளியிருக்கிற இராமபிரானையும் சார

* இராமாநுசநூற்றந்தாதி - ௧௮.
† தனியன்; நாதமுனிகள் அருளிச்செய்தது.
‡ திருவாய்மொழி - ௬௭ - ஆம் திருப்பதிகம் - ௮.
§ 'கலியுகத்தில் எட்டிலட்சத்து அறுபத்தாறுவாயிரத்து என்னூற்றெழுபத்தொன்பதாவதான ஈசுவர வருஷத்தில் சுக்கிலசதுர்த்தசி கூடின வெள்ளிக்கிழமையில்' என விவரம்.
|| பெரியதிருமொழி - ௪ - ஆம் திருப்பதிகம் - ௧.
¶ கம்பராமாயணம் - பாலகாண்டம் - வேள்விப்படலம் - ௫.

கிடப்பிராட்டியையும் தரிசித்துத் திருவடிதொழுது அப்பரிசுத்தபூமியில் நித்தியவாசஞ்செய்யக் கருதிச் சிலகாலம் வசித்திருந்தார்.

அக்காலத்தில் ஒருநாள், இரவில்இவர் திருக்கோளூரெம்பெருமானைத்திசைநோக்கித்தொழ எத்தெருவிற்கெதிர் கண்செலுத்தினபொழுது, அப்பக்கத்திலே வானுறவளர்ந்து விளங்குகிற திவ்வியமானஒருபேரொளிப்பிழம்பைக் கண்டு இது என்னதென்றறியாமல் 'கிராமங்களாவது வெந்தனவோ? காட்டுத்தீயோ?' என்று சந்தேகித்துத் திகைத்து நின்றார். பின்னும் இங்ஙனமே அடுத்தஇரண்டுமூன்றுநாள்களிலும் கண்டு அக்கடர்த்திரள் முச்சுடரொளியிலும் மிக்குளிர்ந்தியதனால் வெருவிப்புற்று அதனை அருகிற்சென்றுபார்த்துத் தெளியக் கருதி பிரஸ்தாநமாய் அச்சோதியையேகுறியாகக்கொண்டு அதுவழிகமாக தெருவழிநடந்து நடந்துவந்து ஆழ்வார்திருநகரியையடைந்து அதில் அவதரித்தருளியுள்ள சடகோபமுனிவரது திருமேனிவிளக்கத்தைச் சேவித்து இதுவே அத்தனைநெடுந்தூரம்பிரகாசித்ததென்று அறிந்து ஆச்சரியப்பட்டு அவ்வாழ்வாரது நிலைமை முன்புதாம்கேள்வியுற்றிருந்தபடியே அப்பிரபாவமுள்ளதாயிருக்கக்கண்டு, அவர்க்குக் கட்புலனும் வாய்ப்புலனும் உண்மையைச் சிலஉபாயங்களாற் பரிசோதிப்பவரானார். அப்பொழுது, காரிமாறப்பிரான் கண்திறந்து கடாக்ஷித்து இவர்கேட்டகேள்விக்கு ஏற்றவிடை சொல்லியருள, அதுகேட்டு மதுரகவியாழ்வார் அவரது ஞானவைபவத்துக்கு ஆச்சரியித்து ஈடுபட்டு அவரையே ஆசாரியராகக் கொண்டு சரணம் புகுந்தார்.

அநந்தரம் நம்மாழ்வார் பஞ்சஸம்ஸ்காரம்பிரசாதித்து இவரை ஆட்கொண்டு, பரத்வம் வியூகம் விபவம் அந்தர்யாமித்வம் என்னும்நான்குநிலைகளுக்கு முறையே வேதம் பாஞ்சராத்திரம் இதிகாசம் ஸ்மிருதி என்பனபோல அர்ச்சாவதாரத்துக்கு ஏற்ற அநுபவமான தமிழ்நூல்களைச் செய்யத்தொடங்கி, சதுர்வேதத்தின்சாரமாக நான்குபிரபந்தங்களை அருளிச்செய்து அவற்றை அம்மதுரகவிக்கு உபதேசித்தருளினார்.

'முந்தின மூன்றுயுகங்களில் தியாநயாக அர்ச்சநங்களாம் போலக் கடையுகத்தில் தோத்திரமாத்திரத்தால் உயர்கதியுளதாம்' என்ற நற்கொள்கைக்கு ஏற்ப மதுரகவிகள் தாமுபதேசம்பெற்ற திவ்வியப்பிரபந்தங்களைக் கைத்தாள மெடுத்துப் பண்ணிசையோடு எப்பொழுதும் பாராயணஞ்செய்துகொண்டு திருக்குருகூர்நகர்நம்பிக்குப் பிரதானசிஷ்யராய், பரதாழ்வானுக்கே பணிவிடைபுரிந்தொழுகின சத்ருக்நாழ்வான் போலப் பகவத்பக்தியிலும் பாகவதப்பிரதிபத்தியையே பரமாநுஷ்டானமாகத் தலைக்கொண்டு அவ்வாழ்வார்விஷயமாக 'கண்ணிநுண்சிறுத்தாம்பு' என்ற திவ்வியப்பிரபந்தத்தைப் பாடி, முழுதுமுக்கு



உபகரித்தருளி வாழ்ந்திருக்கையில், * தேவிற்சிறந்த திருமாற்குத் தக்கதெய்வக்கவிஞரும், * பாவிற்சிறந்த திருவாய்மொழி பகர் பண்டிதருமான காரிமாறர் திருநாட்டையலங்கரித்தார்.

அப்பால், ஆசிரியனைப்பிரிந்ததற்கு மிகஇரங்கி அரிதிற்றேறிய மதுரகவிகள், அர்ச்சாரூபமான ஆழ்வார்விக்கிரகத்தை அத்திருநகரியிலே எழுந்தருளப்பண்ணிப் பிரதிஷ்டித்து அவர்க்கு நித்ய நைமித்திக உற்சவங்களை யெல்லாம் சிறப்புற நடத்திக்கொண்டுவந்தார். அத்திருவிழாக்களில் 'வேதந்தமிழ்செய்தமாறன் வந்தார், திருமாலுக்குரிய தெய்வப்புலவர் வந்தார், அனைவினத்து ஆசிரியர் வந்தார்' என்று இவைமுதலாக அநேகவிருதுக் கூறித் திருச்சின்னம் ஒலிமுழங்குதலைக் கேள்வியுற்றவளவிலே, மதுரைச் சங்கத்தாரது தூண்டுதலால் அவர்கள்மாணாக்கர்கள் வந்து எதிரிட்டு 'உங்களாழ்வார் பக்தயோனாயிப் வானல்லரே; இவர் சங்கமேறிய புலவரோ? இவர்பாடின திருவாய்மொழி சங்கமேறிய செய்யுளன்றே; இவரை வேதந்தமிழ்செய்தவரென்று சிலாகிப்பது தகுதியோ?' என்று பல குதர்க்கம் பேசி விருதுகளைத் தடுத்திட்டனர். அதற்கு மதுரகவிகள் மனம்பொறாமல் வருந்தி 'இவர்களுக்குச் சர்வபங்கமாம்படி தேவரீர் செய்தருளவேண்டும்' என்று ஆழ்வாரையே பிரார்த்திக்க, சடகோபர் ஒருகிழப்பிராமணவடிவத்தோடுவந்து திருவாய்மொழியில் "கண்ணன்கழலிணை, நண்ணும்மனமுடையீர், எண்ணுந்திருநாமம், திண்ணம்நாரணமே" என்ற பாசுரத்தின் முதலடியை ஒரு சிற்றேட்டில் எழுதிக்கொண்டு போய்ச் சங்கப்பலகையில் வைத்திட்டால், அவர்கள்செருக்கு அடங்கும்' என்று கூறியருளினார். அந்நியமனத்தின்படியே சடகோபபக்தர் கண்ணன்கழலிணையையெழுதிய ஏட்டை எடுத்துப்போய் வைத்திட்டமாத்திரத்தில், சங்கப்புலவர்கள் ஏறியிருந்த பலகை பொற்றாமரைப்பொய்கையில் முழுகித் தன்மேலிருந்த புலவர்களையெல்லாம் நீரில்வீழ்த்தி உடனே கிளம்பித் தன்மீதுவைத்த திருமொழியைமாத்திரம் ஏந்திக்கொண்டு மிதந்தது. அப்பொழுது நீரில்வீழுந்து அமிழ்ந்து தடுமாறி யெழுந்து மெல்ல நீந்திக் கரைசேர்ந்த சங்கப்புலவர்கள் சகலவேதசாஸ்திரங்களையும் பிறரால் கற்பிக்கப்படாமல் தாமேயுணர்ந்த பகவதம்சமான ஆழ்வாருடைய தெய்விகமான பாண்டித்தியத்தைத் தெரிந்து இறுமாப்பொழிந்து தாம் முன்பு அபசாரப்பட்டதற்கு அநுதாபமுற்று அதனை க்ஷமிக்கும்பொருட்டு அவரதுமகிமைதங்கிய பிரபாவத்தைக் குறித்துத் தோத்திரமாகத் தனித்தனி ஒவ்வொருபாட்டுப்பாடி வெளியிடுவாரானார்கள். அப்பாடல்கள் யாவும்

" சேமங்குருகையோ செய்யதிருப்பாற்கடலோ
நாமம்பராங்குசமோ நாரணமோ—தாமந்

* சடகோபரந்தாதி - பாயிரம் - க.

தளிவாருளமோதோளிரண்டோநான்கு
முளவோபெருமானுனக்கு"

என்ற இப்பாடலானது வாசகப் பிறிதும் வேற்றுமையின்றி ஒத்து அமைப்பட்டிருக்கக் கண்டு அவர்களனைவரும் 'இது என்ன அற்புதம்? இதுவும் ஆழ்வாரது தெய்வத்திருவருளே!' என்று அதிசயப்பட்டு

"மையாடுவரித்தேர்கருடனொரு தேரை ஏர்கொடுபரிகொண்டு மின்மினிப்ப
தேர், நாயோடுவிடுதோலுடைவெம்புலிமுன்னரிபோலுடைதோளாக
முன், பேய்முடிவிடுதோலுறுகடர்விழிமுன்பெருமான்வருளடியா
ருக்கடர்க், தோளாதுளையர்வியமராமறையின்ஒருசொற்பொரு
மோருலகிறைக்கேயே"

என்பதுமுதலாகத் திருவிலங்கவிகளைப் பாடிப் புகழ்ந்து அன்று முதல் ஆழ்வார்க்கு திருமஞ்சனம் முதலிய சகலவைபவங்களையும் முன்னிலும் பலமடங்கு மிகுதியாக நடப்பித்துவந்தார்கள்.

இப்படி மதுரகவியாழ்வார் *"ஆசானைவெல்லோடுக்குமப்படியே" என்றபடி தமது ஆசாரியருடைய பெருமைகளை வெளியிட்டுக்கொண்டு அப்பதியிலே நெடுங்காலம் எழுந்தருளியிருந்து பின்பு சிந்தையுமொழியுஞ்செல்லாநிலைமைத்தான பேரின்ப வீட்டையடைந்தார்.

இங்ஙனம் இவ்வாழ்வார் நம்மாழ்வாருக்குத் திருவடித்தொண்டராகப் பொருந்தியதனால், அவரது திருவடிகளே 'மதுரகவிகள்' என இன்றுந்திருக்கோட்டியூர் வழங்கப்படும்.

†"அன்பன்தன்னையடைந்தவர்கட்கெல்லா
மன்பன்தென்குருகூர்நகர்நம்பிக்
கன்பனாய்மதுரகவிசொன்னசொல்
நம்புவார்பதிவைகுந்தங்காண்மினே."

## ஆழ்வார்கள் சரித்திரம்
## முற்றுப்பெற்றது.

### வாழ்த்து.

‡"ஆழ்வார்கள்வாழியருளிச்செயல்வாழி
தாழ்வாதுமில்குரவர்தாம்வாழி—ஏழ்பாரு
முய்யவவர்களுரைத்தவைதாம்வாழி
செய்யமறைதன்னுடனேசேர்ந்து."

* "கேசவர்க்காளாவிடத்துநெஞ்சேயறிந்து, வாசனையெல்லாமப்படியே—வாச, மலையாகோப்பஞ்சவனையின்மைக்கர்தமைசெஞ்சம், வினையாகாவேலைமுடிவில்."—ஔவையார்தனிப்பாடல்.

† கண்ணிநுண்சிறுத்தாம்பு - ௧௧.

‡ உபதேசரத்தினமாலை - ௨.